வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.


திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்


மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 ஆனி திங்கள் 3-ம் நாள் (17—6—1962) ஞாயிற்றுக்கிழமை முஹர்ரம் 13 | இதழ் 3

அடுத்த பட்ஜெட்

# ரூ. 72 கோடி துண்டு விழும் : வரிப்பளு கூடும்?



தமிழ் எழுது வினைஞர் சங்கத்தின் முதலாண்டுக் கூட்டத்தில் உணர்ச்சியுடன் உரை நிகழ்த்தும் சங்கச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியத்தையும், கூட்டத்துக்குத் திரளாக வந்திருந்த பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம்.

## அபிவிருத்தி திட்டச் செலவுகளில் வெட்டு

### எம்.பி.களை திருப்திப் படுத்த சிங்களத்தில் பட்ஜெட் பிரசங்கம்

**ஜூலை 12-ந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பட்ஜெட்டில் ரூ. 72 கோடி துண்டு விழுகிறதாம். அரசாங்க நிர்வாகத்திற்கு சுமார் 12 கோடி அதிகப்படியாக செலவாகும் எனத் தெரிகிறது. அபிவிருத்தி திட்டச் செலவுக்கு வெட்டு விழுவதோடு புதிய வரிகள் விதிக்கப்படுவதால் மக்களின வரிச்சுமை மேலும் அதிகரிக்கும் என்று அறியப்படுகிறது.**

அடுத்த நிதி வருடத்தில் (1962-63) அரசாங்க நிர்வாகச் செலவுகளுக்கு மட்டும் ரூ. 175 கோடி செலவாகுமாம். இதன்படி இந்த வருடத்தை விட 11 கோடி 90 லட்ச ரூபாய் அதிகப்படியாக அரசாங்க நிர்வாக இயந்திரம் விழுங்கிவிடும். இதனுல் அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் 72 கோடி 30 லட்ச ரூபாய் துண்டு விழும்.

துண்டு விழும் தொகையைச் சரிக்கட்ட பொது மக்கள் மீது இன்னும் அதிகமான வரிகளைச் சுமத்த வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்படும்.

பெருப தொகை துண்டு விழுவதின் பயங்கர விளைவு அபிவிருத்தித் திட்டங்களுக்கு செலவிடும் பணத்தைப் படுமோசமான முறையில் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென்பது நிதிமந்திரியின் கருத்து. அபிவிருத்தித் திட்டங்கள் ஸ்தம்பித்தால் நாட்டின் முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்படுமென்று அரசியல் வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

உலக வங்கியிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும நிதி உதவிபெற்று அபிவருத்தித் திட்டங்களை நடத்தலாமென்று அரசாங்க வட்டாரங்கள் சமாதானம் கூறுகின்றன. ஆனுல் நிறைசேரிகாரிய தரிசியின் அமெரிக்கப் பிரயாணம் தோல்வியில் முடிந்ததிலிருந்து வெளிநாட்டு நிதி

(9-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் குடும்பத்தை மிரட்டினுராம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை "அலரி மாளிகை"க்கு டெலிபோன் செய்த ஒரு நபர் குறிப்பிட்ட ஒரு பொதுக் கூட்டத்திற்குப் பிரதம மந்திரி வரத் தவறினுல் அவருக்கும் அவரது மூன்று பிள்ளைகளுக்கும் உயிர்ச் சேதம் விளைவிப்பதாகப் பயமுறுத்தினுராம். அந்த நபர் செவ்வாய்க்கிழமை அதிகாலையில் பொலிஸ் கையில் எப்படியோ சிக்கிவிட்டார்.

## சதி வழக்கு விசாரணை ஆரம்பமாகும் திகதி

### இதிலும் மந்திரிகளிடையே கருத்து வேற்றுமையா?

**சதிவழக்கு விசாரணை ஆரம்பம் அடுத்த ஜூலை வரை பின் போடப்படுமென நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா பாராளுமன்றத்தில் கூறினுர். ஆனுல் நீதி மந்திரி திரு சாம் பி. ஸி. பர்ணுந்து அதற்கு மாறுன கருத்து தெரிவித்துள்ளார்.**

சதி வழக்கு விசாரணையை ஜூலை வரை பின்போடத் தான் தயாராயில்லை என்றும், வழக்கு விசாரணைக் கான எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுவிட்டதென்றும் திரு. சாம் பி ஸி. பர்ணுந்து பத்திரிகையாளரிடம் கூறியுள்ளார். இதில் எதை நம்புவது என்பது இன்னும் தெளிவாகவில்லை.

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் டாக்டர்களுக்கு வெளிநாடு செல்லத் தடை

இலங்கை மலேரியா—தடுப்பு இயக்கப் பகுதியின் அதிபரான வைத்திய அதிகாரி டாக்டர் விஸ்வலிங்கத்திற்கு லண்டனுக்கு விஜயம் செய்யுமாறு பிரிட்டிஷ் அரசாங்கம் ஓர் அழைப்பு அனுப்பியது. மலேரியா—தடுப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராய்ச்சி செய்வதற்கே அவர் லண்டனுக்கு அழைக்கப்பட்டார். ஆயினும் இலங்கை அரசாங்கம் அவருக்குச் செலாவணி அனுமதிப் பத்திரம் அளிக்க மறுத்ததால் அவர் பிரயாணம் தடைப்பட்டது.

டாக்டர் டபிள்யு. பாலேந்திராவுக்கு லண்டனுக்கு விஜயம் செய்யுமாறு லண்டன் ரேயல் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர்களின் ஸ்தாபனம் அழைப்பு அனுப்பியுள்ளது. வாயில் ஏற்படும் புற்றுநோய் சம்பந்தமாக அவரது ஆராய்ச்சி சித்தாந்தங்களை இந்த ஸ்தாபனத்தின் முன்னுல் எடுத்துக் கூறுவதற்காக அவர் லண்டனுக்கு அழைக்கப்பட்டார். அவருக்கும் செலாவணி அனுமதிக்கப்படவில்லை. பிரயாண செலவுக்கு மட்டுமாவது செலாவணி அனுமதிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டாரெனினும் அதற்கும் கூட அனுமதி கொடுக்கப்படவில்லை. அதன் விளைவு அவரது பிரயாணம் தடைப் பட்டது தான்.

இவ்வாறு வைத்தியக் காரணங்களுக்காக வெளிநாடு செல்ல விருந்த மற்றும் இரு தமிழ் டாக்டர்களின் பிரயாணமும் இம்மாதிரியே தடுக்கப்பட்டு விட்டதாம்.

மந்திரிகளும் அரசாங்க எம். பிகளும் சுதந்திரக் கட்சி பிரமுகர்களும் அடிக்கடி வெளிநாடுகளில் சவாரி போவதற்குத் தாராளமாக செலாவணி கொடுக்கப்படும்போது தமிழ் டாக்டர்கள் மட்டும் வைத்திய காரணங்களுக்காகத் தங்களின் சொந்தச் செலவுகளில் வெளிநாடு செல்வதற்குக் கூட ஏன் செலாவணி மறுக்கப்படுகிறது?

சகலவித மூலநோய் நிவாரணி

ரிச்லெட்ஸ் ப்ளட் ப்யூரிபயர்

(RICHELET'S BLOOD PURIFIER)

இரத்த சுத்தி செய்து




- மூலம்
- வாதம்
- படை (ECZEMA)
- மாத விடாய்

கோளாறுகள்



முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடையவேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானுகவே ஏற்படும்.

எங்கும் கிடைக்கும்.

வெஸ்டன் ஏஜன்சீஸ்,
63, பேங்ஷால் வீதி, கொழும்பு.
(போன் : 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேரியாவைத் தோற்றுவிக்கும் பரசீவி இனம்

## அதன் பாதுகாப்பு நடவடிக்கை

## கிருமிகளின் வாழ்க்கைச் சக்கரத்தில் நுளம்பின் பங்கு

(சென்றவாரத் தொடர்ச்சி)

மலேரியாவைத் தோற்றுவிக்கும் பரசீவி இனத்துக்குப் பெயர் பிலாஸ்மோடியம் (Plasmodium) அனுதரவான சூழ்நிலையில் கூடு உருவில் அமீபா ஒய்ந்திருப்பதுபோல மலேரியாக் கிருமிகளும் ஸ்போறஸோயிற் (Sporozoite) நிலையில் நுளம்பின் எச்சில் சுரப்பியில் ஆயிரக்கணக்கில் சீவிக்கின்றன. நுளம்பு மனிதனைக் கடித்ததும் இரத்தத்திலுள்ள செஞ்சிவ அணுக்களை (Red blood corpuscles) தாக்கி அவற்றுக்கு உள்ளே நுழைந்து குடிகுத்திக் கொள்ளுகின்றன. அங்கிருந்து அதே இரத்த அணுவை உணவாக்கி, அழித்து 36 மணித்தியாலங்களுள் 24 குஞ்சுகளாகப் பெருகுகிறது. நூற்றுக் கணக்கில் இரத்தத்தில் சேர்ந்த ஸ்போறஸோயிற் நுண்மங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இரத்த அணுவிலிருந்தும் அணுச்சுவர் வெடித்து 48 மணித்தியாலத்தில் ஆயிரமாயிரக் கணக்கில் உடல் அனைத்தும் பரவிவிடும். இவற்றுள் ஒவ்வொன்றுக்கும் இப்போது மிறெஸோயிற் (Merozoite) என்று பெயர். ஒவ்வொரு மிறெஸோயிற்றும் ஒவ்வொரு இரத்த அணுவைத் தாக்க ஆரம்பிக்கிறது; அழிவுச்சக்கரம் மீண்டும் தொடர்ந்து நீள்கிறது. இவ்வாறு அரிக்கப்பட்ட இரத்த அணு வெடித்து மிறெஸோயிற் நுண்மங்கள் சிதறும் போது அதிலிருந்து நச்சுப் பொருட்களும் வெளியே இரத்தத்தில் வீசப்படுகின்றன; காய்ச்சல் ஆரம்பிக்கிறது.

### நுளம்பின் பங்கு

இந்தச் சம்பவங்கள் மனித உடலில் இரத்தத்தில் நிகழ்கிறது. மனிதன் என்ற விருந்தாளி மரணமானல் பிலாஸ்மோடியத்தின் சீவியமும் அதன் இனமுமே அழிந்துவிடுமல்லவா! ஆகவே தன்னைப் பேணித் தன் இனத்தை அழியாது காப்பாற்றப் பிலாஸ்மோடியம் நுளம்பு என்ற இன்னுமொரு விருந்தாளியிடம் தஞ்சம் புகுகிறது. இதன் வாழ்க்கைச் சக்கரத்தின் இன்னுமொரு பகுதி நுளம்பின் உடலுக்குள் நிகழ்கிறது. இது ஓர் இனப் பாதுகாப்பு நடவடிக்கை. இந்த ஏற்பாட்டின்படி மனித இனமும் நுளம்பு இனமும் ஒரே நேரத்தில் மாண்டுபோவதென்றல் தான் பிலாஸ்மோடியம் என்ற கிருமி இனம் அழிய முடியும். கண்ணுக்கே புலப்படாத நுண்மங்களின் சளைப்பற்ற திராணி இது!

**செ. குமாரசாமி**

ஒரு நோயாளியை நுளம்பு கடிக்கும் பொழுது மிறெஸோயிற்றுகள் நுளம்பின் வயிற்றுக்குள் சென்று அங்கிருக்கும் 'இரசாயனப்' பொருட்களால் தாக்கப்படமுடியாதவாறு தம்மைப் பாதுகாக்கும் கூடு ஒன்றை உருவாக்கிக் கொள்ளுகின்றன. ஒரு கூடு வயிற்றிலிருந்து வயிற்றின் சுவரைத் துளைத்து அங்கே சில காலம் ஒய்வுற்றிருக்கும் சூழ்நிலை சாதகமாகும் பொழுது ஒவ்வொரு கூட்டிலிருக்கும் அணுக் கருவும் எண்ணிறந்த குஞ்சுகளாகப் பிரிந்து பெருகிக் கூடு வெடிக்கிறது. இக் கூட்டிலிருந்து தோன்றிய பல்லாயிரக்கணக்கான நுண்மங்கள் நுளம்பின் எச்சில் சுரப்பிகளை அடைந்து அங்கிருந்து நுளம்பு மனிதனைக் கடிக்கும் பொழுது மீண்டும் மனித உடலில் நுழைந்துபடையெடுக்கின்றன. இப்பொழுது ஸ்போறஸோயிற் நிலையிலிருக்கும் பிலாஸ்மோடியம் மீண்டும் மிறெஸோயிற் நிலையை அடைந்து சக்கரம் தொடருகிறது, நீளுகிறது. இந்த மிறெஸோயிற் நிலையில் இரத்த அணுக்கள் வெடிக்கும் பொழுது வெளியாகும் நச்சுப் பதார்த்தங்கள் மனித உடலுக்கு நஞ்சாகி மலேரியாக் காய்ச்சல் தோன்றுகிறது. பிலாஸ்மோடியத்தின் வாழ்க்கைச் சக்கரத்தில் மிறேஸோயிற் நிலை வரும்பொழுதுதான் நச்சுப் பொருட்கள இரத்தத்தில் கலக்கப்படுகின்றன. எனவே ஒவ்வொரு வாழ்க்கைச் சக்கரத்திலும் மிறெஸோயிற் நிலை தோனறும்பொழுது தான் காய்ச்சல் தோன்றும். மலேரியாக் காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை விட்டுவிட்டு முறைக்காய்ச்சலாகத் தோன்றுவதின் காரணம் இதுதான். ஒரு பிலாஸ்மோடியத்தின் வாழ்க்கைச் சக்கரம் இரண்டு நாட்கள் நீடிக்கிறது.

### எதிர்ப்பு நடவடிக்கை

மலேரியாக் கிருமியின் வாழ்க்கைச் சக்கரத்தை அறிந்ததின் மூலம் மலேரியாவைத் தடை செய்யும் வழிகளை ஆராய்ச்சியாளர் வகுத்திருக்கிறர்கள். நுளம்பு பரவுவதற்கு உதவியாயிருக்கும் சதுப்பு நிலங்களில் நுளம்பை அளிக்கும் மருந்துகளைத் தெளிப்பது; டி. டி. ரி. மருந்து தெளிப்பதின் மூலம் நுளம்பைக் கொல்லுதல், நுளம்பு வலைகளைப் பாவித்தல்; — இவ்வழிகள் நோய் பரவுவதைத் தடுக்கும் சுகாதார நடவடிக்கைகள். உடம்பில் பிலாஸ்மோடியம் படை எடுத்ததும் அவற்றைக் கொல்ல நச்சு மருந்துகளைப் பாவிப்பது வைத்தியர்கள் எடுக்கும் வைத்திய நடவடிக்கை. குயினைன் மிறெஸோயிற் நுண்மங்களைக் கொல்லுகிறது.

என்ரமீபாவினதும் பிலாஸ்மோடியத்தினதும் வாழ்க்கைச் சக்கரங்கள் ஏனைய நோய்க் கிருமிகளின் சக்கரங்களிலும் பார்க்க சிக்கல் அற்றவை; இனப் பெருக்க வேகமும் மிகவும் குறைந்தவை. இருந்தும் நோய்க் கிருமிகளின் பொது இயல்புகளையும் அவ்வியல்புகளை அறிந்து வைத்தியம் எவ்வகையில் இக்கிருமிகள் உண்டாக்கும் நோய்களை மடக்க வழிவகைகளைக் கண்டுபிடிக்கிறது என்பதையும், நோய்க்கிருமிகள் எவ்வாறு தம்மையும் தம் இனத்தையும் பாதுகாக்கும் திராணி பெற்றிருக்கின்றன என்பதையும் மேலெழுந்தவாரியாகக் கவனிக்க இவை ஒரு சிறிய உதாரணம்.

<u>இந்தியாவில்</u>

# தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் மீன் பிடித் தொழிலுக்கு முக்கியத்துவம்

இரண்டாவது உலகயுத்தத்துக்குப் பிறகு இந்தியாவின் உணவுத் துறையில் நிலவி வந்த உணவுப் பற்றுக்குறையும் உணவு விஷயத்தில் தன்னிறைவு நிலையை அடைய வேண்டுமென்ற ஆர்வமும் நீர்வாழ் ஆதார வசதிகளைப் பெருக்குவதற்குக் காரணமாயின. அதனல் தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் மீண்பிடிப்புத் தொழிலுக்கும் மீன் வளர்ப்புத் திட்டங்களுக்கும் முக்கியத்துவமளிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் மீன் துறையை அபிவிருத்தி செய்து பராமரிப்பதற்கு விஞ்ஞான அறிவு இன்றியமையாதது என்று உணரப்பட்டதால் முதலில் பாரக்பூருக்கு அருகில் பழைய ராணுவ கட்டடங்களில் 1957-ல் மத்திய உள்நாட்டு நீர் நிலை மீன் துறை ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டது.

சிறிய அளவில் தொடங்கப்பட்ட இந்த ஆராய்ச்சி நிலையம், உலகத்திலுள்ள நிலையங்களிலேயே மிகப்பெரிதாகவும் தீவிர ஆராய்ச்சி நடைபெறும் இடமாகவும் வளர்ந்திருக்கிறது; இதன் நடவடிக்கைகள் நாடு முழுவதும் பரந்திருக்கின்றன. இரண்டாவது திட்ட காலத்தின் போது, இந் நிலையத்தின் தலைமைக் காரியாலயம் பாரக் பூரிலுள்ள புதிய கட்டிடத்துக்கு இடம் பெயர்ந்தது. இங்கு ஆய்வுக்கூடங்களும், பயிற்சியாளர்கள் தங்கும் விடுதியும், ஸ்டோர்ஸ் கருவிகளைப் பாதுகாக்கும் தனிக் கட்டிடமும் இருக்கின்றன. இங்கு சுமார் 275 தொழில் நுட்ப சிப்பந்திகள் பணியாற்றுகின்றனர்.

மீன் துறையை வர்த்தக ரீதியாக அபிவிருத்தி செய்வதற்கும், மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் நேரடியாக சம்பந்தமுள்ள பல பிரச்னைகள், இந்த நிலையத்தின் கீழ், நாட்டின் பல பகுதிகளில் நடைபெறும் திட்ட வேலைகள் மூலமாக ஆராயப்படுகின்றன.

இந்த நிலையம் பல மகத்தான சாதனைகளைப் புரிந்துள்ளன. மீன் வளர்ப்புத் துறையில் பொருத்தமான வளர்ப்புமுறைகள் உருவாக்கப்பட்டிருப்பதால் மீன் குஞ்சுகள் மடிவது தடுக்கப்பட்டிருக்கின்றன; தேங்கி நிற்கும் தண்ணீரில் மீன்களுக்கு மருந்து குத்தி வைப்பதன் மூலம் இன வளர்ச்சியைப் பெருக்குவது ஆகியவை இந் நிலைய ஆராய்ச்சிகளில் சிலவாகும். வர்த்தக ரீதியில் மிகவும் உபயோகமுள்ள மீன் இனங்களின் ஜீவ சாஸ்திரம் பற்றியும் வளர்ப்பு முறை பற்றியும் மேலும் பல விஷயங்கள் தெரியவந்துள்ளன.

இங்கு ஆராய்ச்சி வேலை நடைபெறுவதோடு, மீன் வள அபிவிருத்தியிலும் நிர்வாகத்திலும் 12 மாதப் பயிற்சியளிக்கப்படுகிறது. பல்வேறு ராஜ்யங்களைச் சேர்ந்த அதிகாரிகளும், தூர கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்களும் இப் பயிற்சி மூலம் பயனடைந்திருக்கின்றனர்.

**சுதந்திரன் சந்தா விபரம்**

இலங்கை—இந்தியா உட்பட

**வருடச் சந்தா ரூபா. 10-00**

இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்!

**விற்பனைக்கு**

வீட்டுக் கட்டிடத்துக்குத் தேவையான சகல விதமான இரும்புச் சாமான்கள் எங்களிடம் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

**என். வயித்திலிங்கமும் சகாக்களும் லிமிட்.**

33, 3-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

450, பழைய சோனகத் தெரு, கொழும்பு.

138, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# 'வாழைப்பழமோ நீ வாங்கி வந்த மாங்கனியோ'

## அழுகின்ற குழந்தைக்கு அன்னையின் மருந்து

—மண்டூர் ந. டே. குணரத்தினம்—

கணவன் களத்து மேட்டுக்குப் போய்விட்டான். துணைவி வீட்டிலிருந்தாள். நேரமோ காலை பத்தாகி விட்டது. இன்னும் இரண்டு மணித்தியாலங்களிலே கணவன் வந்து விடுவான். உணவு சமைக்க வேண்டுமே அவனுக்கு! தனது குழந்தையைத் துயில் கொள்ளச் செய்ய முனைகிறுள். துணியினல் கட்டிய தூளியிலே குழந்தையை இட்டுத் தாலாட்டத் தொடங்குகிறுள் தாய்.

"ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ
சீரோடு வாழும் எங்கள்
சிகாமணியே கண்ணுறங்கு."

"வாழைப்பழமோ—நீ
வாங்கிவந்த மாங்கனியோ
கோவைப்பழமோ—நீ
கொஞ்சவந்த ரஞ்சிதமோ."

"கண்ணே கருணைப்பூ—உங்க
கையிரண்டும் தாமரைப்பூ
உண்ண விருப்பமுள்ள—உங்க
உதடல்லோ செம்பவழம்,"

பாடல் முடிகிறது. குழந்தையும் துயில் கொண்டுவிட உணவு சமைக்கச் செல்கிறுள் தெய்வானை. சுறுசுறுப்பாக அடுப்பை மூட்டி உலை வைக்கிறுள். கோயிலிலே மதிய பூசை மணி டாண்! டாண்! என்று ஒலிக்கிறது. மணியோசை கேட்ட குழந்தை துயில் கலைந்து எழுந்து விடுகிறது. அழ ஆரம்பிக்கின்றது. தனது வேலையை அந்த அளவிலே வைத்துவிட்டு வந்த தாய் மீண்டும் குழவியை தாலாட்டுகிறுள்.

"பூசை செய்யும் நேரமல்லோ
ஓசையிடும் வீரமணி
வீரமணிச்சத்தங் கேட்டு
விளையாட எழுந்த கண்ணே,"

பாடல்முடிகிறது. சாளரத்தின் ஊடே வெளியே நோக்குகிறுள் தெய்வானை.

ஒரு ஆல மரம், நன்கு பழுத்திருக்கிறது. குருவிகள் கூட்டங் கூட்டமாக கீச்சிட்டுக் கொண்டே ஆலம் பழங்களை உண்டு கொண்டிருக்கின்றன. அவற்றின் இனிய ஓசை தாலாட்டிய தாயை மேலும் பாடல் புனைய வைக்கிறது. பாடுகிறுள்;

"அக்கக்கா பொற் குருவி
ஆலம்பழம் போடு
தின்னப் பழம் போடு
திருமுடியப் பூப்போடு,"

குழவியைக் குனிந்து நோக்குகிறுள் தாய். குழவியோ இன்னும் துயில் கொள்ளாது தனது மழலை மொழியிலே ஏதேதோ பேசுகிறது. கோபம் வரு

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அ. பஞ்சாட்சரம், வட்டக்கச்சி.

கே: ஆண்கள் பெண்களின் உண்மையான வயதைத் தெரிந்து கொள்வதற்குரிய சுலபமான வழி ஒன்று சொல்லுவீர்களா?

ப: முகஸ்துதி. இன்பப் போதையேறும் சமயத்தில் அழகையும் கவர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட முகஸ்துதியைக் கட்டவிழ்த்துவிட்டால் உண்மையைக் கக்கி விடுவார்கள்.

ஃ

ந. பர்வதகௌினி, புங்குடுதீவு.

கே: பெண்கள் பாடசாலை செல்லும் போது ஒரு பின்னலை முன்னுக்கு விடுவதின் மர்மம் என்ன?

ப: முன்னால் தொங்கும் பின்னலைப் பார்க்கும் போதெல்லாம் தங்களுக்கும் கூந்தல் உண்டு என்பது அவர்களுக்கு ஞாபகம் வரும். பின்னால் தொங்கும் பின்னல் அவர்கள் கூந்தலுடைய பெண்கள்தான் என்பதை அவர்களைப் பின்தொடர்ந்து வரும் ஆடவர்களுக்குவிளம்பரப்படுத்தும்.

ஃ

ஈழவாணன், கொழும்பு-14.

கே: பக்கத்து வீட்டிலுள்ள ரோஜாச் செடியில் மலர்ந்துள்ள பூவொன்று என் அறையை எட்டிப் பார்க்கின்றது. பறிக்க முயன்றால் முள் குத்திவிடுமோ என்று அச்சமாயிருக்கிறது. அதைப் பறிக்கத் தங்கள் உதவியை நாடுகிறேன்.

ப: கோழைகளுக்கு நான் உதவி செய்ய மாட்டேன். முள்ளுக்கு அஞ்சி மலரைப் பறிக்கப் பயப்படும் நீர், அந்த மலரின் நறுமணத்தை அனுபவிக்கவே தகுதியற்றவர்.

த. செல்வரட்னம், கேகாலை.

கே: தாங்கள் ஒரு சிங்களவராய், அதுவும் தற்போதைய அரசாங்கத்தில் உள் நாட்டு விவகார மந்திரியாய் இருந்தால் தமிழ்த் தாயின் தவப் புதல்வர்கள் நடத்தும் போராட்டத்தைப் பற்றி என்ன சொல்வீர்கள்?

ப: போராட்டம் நியாயமானதென்பேன். ஏற்க மறுத்தால் பதவிக்கு முழுக்குப் போட்டுவிட்டு அதே போராட்டத்தில் குதித்து விடுவேன்.

ஃ

சி. சிவகவி, நாரளை.

கே: யாழ்ப்பாணத் தமிழர், மலைநாட்டுத் தமிழர், இந்தியத் தமிழர் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் நாம் எல்லோரும் தமிழர் என்ற முறையில் உரிமைப் போர் தொடுக்க என்ன செய்ய வேண்டும்?

ப: தமிழர்கள் அனைவரும் ஒரே தமிழ்த்தாயின் பிள்ளைகள் என்ற உணர்ச்சியைத் தமிழர்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

ஃ

கே. கணபதிப்பிள்ளை, புற்றளை.

கே: குயுக்தியாரே, உம்மையும் மூதூர் தொகுதியில் சுயேச்சை அபேட்சகராக நிற்கும்படி என் நண்பர் வற்புறுத்துகிறாரே?...

ப: கட்சி அரசியல் வளர்ந்தோங்கியுள்ள இந்தக் காலத்தில் சுயேச்சைகளுக்கு இடமேது? சுயேச்சைகளை மூன்று தலைக்கழுதைகள் என்று வர்ணித்தார் ஓர் அரசியல்வாதி. சுயேச்சையான திரு. சுந்தரலிங்கம் கூட ஒரு கட்சியின் பெயரைக் கூறிக்கொண்டுதானே மூதூரில் போட்டியிடுகிறார்.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.

ஃ

மு. திருநாவுக்கரசு, அளவெட்டி.

கே: தமிழர்கட்குச் சுதந்திரம் கிடைத்து சமஷ்டி ராஜ்யம் கிடைத்தால் அந்த மந்திரிசபையில் யார் யார் மந்திரியாவார்கள்.

ப: நீர் பிரசவத்துக்கு முன்பே குழந்தைக்குப் பெயர் வைக்கும் ஆசாமியாயிருக்கிறீரே?

ஃ

சாந்தினி, சாவகச்சேரி,

கே: குயுக்தியாரே! உமக்குச் சாஸ்திரம் பார்க்கத் தெரியுமா? தெரிந்தால் நான் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று கூற முடியுமா?

ப: ஓ! சாஸ்திரம் பார்க்கத் தெரியுமே! உங்களுடைய கேள்விக்கு நான் அளித்துள்ள பதிலை இப்போது வாசித்து கொண்டிருக்கிறீர்கள்.

ஃ

செ. கனகசூரியம், வீரமுனை.

கே: உங்களை நேரில் சந்தித்துப் பேச ஆசைப்படுகிறேன். அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்குமா?

ப: கிடைக்கும். ஆனால் நேரில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் கிடைக்காது.

ஃ

'செல்வி', சாவகச்சேரி.

கே: பெண்ணென்றால் பேயுமிரங்கும் என்பர். ஆனால் சில ஆடவர்கள் இதற்கு விதிவிலக்காகப் பெண்களைச் சித்திரவதை செய்து இன்பமடைகிறார்களே, ஏன்?

ப: இது ஒரு மனோவியாதி.

ஃ

இதயசூரியன், இறக்குவானை.

கே: மூதூரிலே தற்சமயம் ஏகப்பட்ட கருவாடு விநியோகிக்கப்படுகிறதாமே! உண்மைதானா?

ப: உண்மைதான். மூதூரில் மட்டுமன்று, அனுராதபுரம், வெலிமடை ஆகிய தொகுதிகளிலும் ஏகப்பட்ட கருவாடு விற்பனைக்குக் கிடைக்கிறதென தகவல் கிடைத்துள்ளது. இது ஒரு தேர்தல் குண்டு. கருவாடு இறக்குமதியைத் தேசியமயமாக்கியதையொட்டி நாட்டிலே கருவாடு விநியோகம் சீர் குலைந்தது. கருவாட்டுப் பஞ்சம் தலை தூக்கியது. கருவாடு கிடைக்காது மக்கள் தவிக்கின்றனர். ஏழை மக்கள் அதிகப் பணம் கொடுத்து கறுப்புச் சந்தையிலே கருவாடு வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களிடையே அதிருப்தி அதிகரிக்கிறது. உபதேர்தல்களிலே யு. என். பி. இந்த பிரச்னையை ஒரு தேர்தல் பிரச்னையாக்கியுள்ளது. ஆட்சியாளர் கருவாடு கூட ஒழுங்காக விநியோகிக்க முடியாத கையாலாகாத கபோதிகளென்று குற்றஞ் சாட்டுகிறது. இத்தொகுதிகளிலுள்ள வாக்காளர்களுக்கு இப்போது கருவாடு தாராளமாகக் கிடைப்பதற்கு இதுதான் காரணம். ஏராளமான கருவாட்டை இத்தொகுதிகளில் கொண்டு போய் குவிப்பதின் மூலம் வாக்குகளை வேட்டையாடலாம் என்று பகற் கனவு காண்கிறது ஆளும் கட்சி.

ஃ

அ. பஞ்சாட்சரம், வட்டக்கச்சி.

கே: தற்காலத்தில் அநேகமான பெண்கள் தனது கணவன் கட்டிய தாலியை வீட்டில் கழற்றி வைத்துவிட்டுச் செல்வதின் நோக்கம் என்ன?

ப: தாங்கள் மணமுடிக்காத பெண்கள் என்பதை வெளி உலகத்துக்கு விளம்பரப் படுத்துவதற்காக. அதனால் ஆடவர்களிடையே அவர்களுக்குக் கிராக்கி அதிகரிக்கும். அந்தப் பெண்களிடமே இதைப் பற்றிக் கேட்டால் "கள்வர் பயத்தால் தாலியைக் கழற்றி வைத்திருக்கிறோம்" என்று நொண்டிக்காரணம் கூறுவார்கள். கணவனைத் தேவைப்படும் போது மட்டும் தாலியை அணிந்து கொள்வார்கள்.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: அ. இ. ஆ. காங்கிரஸ் தலைவர் பொன்னம்பலம் மௌனமாயிருக்கையில், கொழும்பு கிளை மட்டும் கொட்டம் அடிப்பதேன்?

ப: தலைமைப் பதவி கைமாறிவிட்டதாம். அதுமட்டுமா? தலைமைக் காரியாலயத்துக்கே மூடுவிழா நடத்தப்பட்டு விட்டதாம். கொழும்பில் சில உதிறிகள் மட்டும் அடிக்கடி பத்திரிகைகளுக்கு அந்தியகால அறிக்கைகளை விடுத்து "அது" இன்னும் சாகவில்லை என்பதை நிரூபிக்க முயற்சி செய்கிறார்கள். இப்போதெல்லாம் அது வெறும் "பேப்பர் காங்கிரஸ்" தான்.

கே: மாஸ்கோவில் மழை பெய்தால் மரதானையில் கொடை பிடிக்கும் கொம்யூனிஸ்டுகள் ருஷ்யாவில் சமஷ்டி ஆட்சி இருக்கும்போது இங்கே அதை எதிர்ப்பதேன்?

ப: தமிழரசுக் கட்சியை எதிர்க்க வேண்டுமென்ற குறுகிய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் சிங்களப் பாமர மக்களை ஏமாற்றுவதற்காகவுமே அவர்கள் இங்கே சமஷ்டி அரசியல் முறையை எதிர்க்கிறார்கள். இது அவர்களின் அரசியல் பங்கலோட்டுத்தனத்தையே எடுத்துக்காட்டுகிறது.




# மலையில் ஆடி வரும் மயில்

"திருவாதிரை"

இளமைப் பருவத்து எழில் மிகு நங்கையரின் மார்புகளின் மீது விலை மதிக்க முடியாத பொன், முத்து, பவளம், இரத்தினம் முதலியவற்றினால் இழைக்கப் பெற்ற மாலைகள் ஆடுகின்றன. காதளவோடிய விழிகளுக்குள்ளே உள்ள கருமணிகள் அவர்களின் காதுகளில் தொங்கும் காதணிகளுடன் போட்டிபோட்டு லாகவமாக ஆடுகின்றன.

அப் பெண்கள் விரும்பும் கணவரின் தோள்களை மலையாகவும், மங்கையரை அம் மலையில் ஆடி வரும் மயிலாகவும் வைத்துக் கொண்டு கவிதையைப் பாடுகிறார் கவிஞர்.

வடம் ஆட, விழி ஆட விழை கணவர் தோள் மலையில் ஆடி வரும் காட்சி எவ்வளவு அற்புதமாக இருக்கிறது பாருங்கள்! கலிங்கத்துப் பரணி கடை திறப்பு என்ற பகுதியிலே இதைப் போன்று பல இன்பக் காட்சிகளை நீங்கள் பார்க்கலாம். பா நடையும் பாவில் பதிந்துள்ள கற்பனையும் சுவை மிக்கன.



விலையி லாதவடம் முலையிலாடவிழி
குழையி லாடுவிழை கணவர் தோள்
மலையி லாடிவரு மயில்கள் போல்வரு
மடந லீர் கடைகள் திறமினோ

—கலிங்கத்துப் பரணி (கடை திறப்பு)

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம்
நீடிய உழைப்பு
இவைகளுக்கு
ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND
டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்,
14, டாம் வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. தொ. கா. வின் குற்றச்சாட்டு பொறுப்பற்றது

## சிங்கள வகுப்புவாதிகளுக்கு உடந்தையாக இருக்கிறார்கள்

### இ. தி. மு. க. காரியதரிசி கூறுகிறார்

“இலங்கைத் தமிழரசுக் கட்சி மலை நாட்டுத் தமிழர்களின் நலனுக்காக ஒன்றும் செய்யவில்லையென்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் குற்றச்சாட்டு பொறுப்பற்றதாகும். தமிழரசுக் கட்சியினர் தமிழ் காங்கிரஸிலிருந்து போவதற்கு தமிழரசுக் கட்சியினர் பிரஜாவுரிமைச் சட்டங்களை எதிர்த்ததே காரணமாகும். இக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் சிலரே பிரஜாவுரிமைச் சட்டங்கள் மீது சட்டப்பிரச்சினை கிளப்பிக் கோடுகளில் வழக்காடுவதற்குப் பொறுப்பாளிகளாக இருந்தார்கள். திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தும் போது திரு. செல்வநாயகம் மலைநாட்டுத் தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினார். 1958-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் போகவந்தலாவையில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் மலை நாட்டுத் தமிழர்கள் கஷ்டபபட்ட போது அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக தமிழரசுக் கட்சியினர் பூரண ஹர்த்தால் நடத்தினர். தமிழரசுக் கட்சியின் கோரிக்கையின் பேரிலேயே திரு. தொண்டமான் இன்று பாராளுமன்றத்தில் அங்கத்தவராகக் கூட இருக்கிறார்.”

இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் காரியதரிசி திரு. ஏ. இளஞ்செழியன் விடுத்த அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:—“தோட்டத் தொழிலாளர்களின் நலனில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உண்மையான அக்கறைகொண்டுள்ளவர்களாக இருக்கிறார்களா என்பது சர்ச்சைக்குரிய “தோட்டங்களில் இலங்கையருக்குத் தொழில்” மசோதா பாராளுமன்றத்தில் இரண்டாவது முறை பிரேரிக்கப்படுவதற்காக எடுக்கப்படும் போது தெரியவரும். இவர்கள் இம் மசோதாவை எதிர்க்க ஏதாவது ஆயத்தங்கள் செய்கிறார்களா? வெளிப்படையாக ஒரு அறிகுறியும் காணப்படவில்லை. இதற்கு மாறாக தற்பொழுது தோட்டப்பகுதிகளில் இருக்க வேண்டிய திரு. தொண்டமான் கனடாவில் நடைபெறும் சர்வதேச தொழிற் ஸ்தாபன மகாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் சர்வதேச தொழில் ஸ்தாபன மகாநாடுகளில் கலந்து கொள்கையில் எப்படி நடந்து கொள்வார்களென்பது எல்லோருக்கும் தெரியும். இவர்கள் மகாநாடுகளில் தணிவாகவே பேசவேண்டும், இல்லாவிட்டால் அடுத்த முறை மகாநாடுகளுக்குப் போக அனுமதிக்கப்படாமலிருக்கக்கூடும்.

#### கண்களில் மண் தூவல்

தமிழரசுக் கட்சித் தலைவரின் அறிக்கைக்கு அளித்துள்ள பதில் மூலம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலை நாட்டுத் தமிழர்கள் கண்களில் மீண்டும் ஒரு முறை மண்ணைத் தூவ முயன்றுள்ளது. தேவையற்ற விஷயங்களைப் பிரஸ்தாபிக்கிற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிக்கை, ஏழைத் தோட்டத் தொழிலாளர்கள் மீது திணிக்கப்படும் பாரபட்சமான சட்டங்களுக்கும் அவமரியாதைகளுக்கும் எதிராக நேரடி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று தமிழரசுக் கட்சித் தலைவர் விடுத்த வேண்டுகோளுக்கு எவ்விதத்திலும் நேரடியாகப் பதிலளிப்பதாக அமையவில்லை.

ஏழைத் தோட்டத்தொழிலாளர்கள் தங்களின் ஒரு சொந்தத் தோட்டமாகவும் அதற்குள் புகுவதற்கு வேறெவருக்கும் உரிமையே இல்லையென்றும் கருதுவது தான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கொள்கை போல் தெரிகிறது. மேலும் துரோகச் செயல் என்று சொல்லக்கூடிய முறையில், வட, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களுடன் மலை நாட்டுத் தமிழ் மக்களை சேரவிடாது பிரித்து வைக்க முயலும் சிங்கள வகுப்பு வாதிகளுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உடந்தையாக, உதவியாகவும் இருக்கிறது. இதனால் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளின் பிரித்தாளும் கொள்கைக்கே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உதவி புரிகிறது.

#### விளக்கம் சரியில்லை

1947-ம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாகச் சிங்கள அரசாங்கங்கள் மலைநாட்டுத் தமிழர்களை ஒரு அடிமை இனமாக்க முயற்சிகள் செய்து வந்துள்ளபோது தாங்கள் ஏன் சக்தியற்றவர்களாகவும், கரிசனையற்றவர்களாகவும் இருந்தார்கள் என்பதை விளக்க முற்படாது, திரு. செல்வநாயகம் டைரக்டராகவுள்ள கம்பனிக்குச் சொந்தமான தோட்டமொன்றில் ஏற்பட்ட தொழிற் சங்கத்தகராறு பற்றி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ கூறுகிறது. மலை நாட்டுத் தமிழர்களுக்கு அவர்களின் அரசியல் உரிமைகளை உறுதிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க தமிழரசுக் கட்சி வேண்டுகோள் விடுத்தது. பறிக்கப்பட்ட அரசியல் உரிமைகளைத் திரும்பப் பெறுவதற்கான அரசியல் நடவடிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தொழிற்சங்க விஷயங்கள் இரண்டாந்தர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிக்கை தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றுவதையே நோக்கமாகக் கொண்டதாகும். தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதி அளிப்பதற்கு அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்துவதற்குச் சரியான நடவடிக்கை எடுக்காததால் இவர்களைக் கல்வியற்றவர்களாக வைப்பதற்கு இ. தொ. கா. உதவி புரிந்துள்ளது.

#### குற்றச் சாட்டு ஆதாரமற்றது

தமிழரசுக் கட்சி தாங்கள் மலைநாட்டுத்தமிழரின் பிரதிநிதிகள் என்று கூறவில்லை. தமிழரசுக் கட்சி எல்லாத் தமிழ் பேசும் மக்களுக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடிய முறையில் ஒரு தேசிய ஸ்தாபனமாக அமைய முயற்சி செய்கிறதென்றே கட்சியின் அறிக்கை கூறுகிறது. இலங்கைத் தொழிலாளர் தங்கள் புத்திமதிகளில் சிலவற்றைத் தாங்கள் ஏற்றுக்கொண்டு அறிக்கைகளைப் பத்திரிகைகளுக்கு விடுமுன் படித்துப்பார்த்தல் வேண்டும்.

வட, கிழக்கு பகுதிகளை தமிழரசுக்கட்சி நாசமாக்கி விட்டது என்று குற்றஞ் சாட்டுவது ஆதாரமற்றதாகும். இப் பகுதித் தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாக மூன்று பொதுத் தேர்தல்களில் தமிழரசுக் கட்சியில் நம்பிக்கை வைத்து வாக்களித்துள்ளார்கள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சொல்லுகிற மாதிரி இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒரு இனத்தின் எதிர்காலத்தை நாசமாக்கி விட்டதேயானால் தொடர்ச்சியாக மூன்று தேர்தல்களில் அக் கட்சிக்கு எந்த இனமாவது ஆதரவு கொடுக்குமா? நேரடி நடவடிக்கையை மேற்கொண்டதால் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களுக்கு தமிழரசுக் கட்சி மகிமை தேடிக் கொடுத்துள்ளது. இந்த இரு மாகாணத்துத் தமிழ் மக்கள் மீது பாரபட்ச நடவடிக்கைகள் எடுப்பதற்குமுன் அரசாங்கம் பல தடவை ஆலோசனை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏழைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு புகழ், மகிமை என்பது பற்றி இ. தொ. கா. தலைவர்கள் ஏதாவது உணர்ச்சியாவது ஊட்டியுள்ளார்களா?

---

## “குரல் கிளம்பட்டும் கொடுமை அழியட்டும்”

“இது ஏதோ ஒரு கட்சியின் பிரச்னை என்று கருதாமல் ஒரு மொழி பேசும் மக்களின் உயிர்ப் பிரச்னை—வாழ்வுப் பிரச்னை என்று கருதி, கடுமையான கண்டனத்தை இலங்கை அரசுக்குத் தெரிவிக்கும் நேரம் தமிழ் பேசும் இலங்கை வாழ் மக்களுக்கு வந்துவிட்டது” என்று சென்னையிலிருந்து வெளியாகும் “முரசொலி” தினசரிப் பத்திரிகையின் 9—6—62ந் திகதி இதழில் “குரல் கிளம்பட்டும், கொடுமை அழியட்டும்” என்று மகுடமிட்டு எழுதப்பட்ட தலையங்கம் கூறுகிறது.

அந்தத் தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

வாழ்வதற்கு வழி காண இலங்கை சென்ற நம் சோதரர்களை வாழ்வதற்கும் விடாமல், சாவதற்கும் விடாமல் சித்திரவதைக் கொடுமை புரிகிறது சிறிமாவோ அரசு.

மொழி என்னும் விழி பிடுங்கியதோடு மட்டுமல்லாமல் வயிற்றிலடிக்கும் வன்செயலையும் துவக்கி விட்டனர். மலைப் பாம்பு ஊர்ந்த காட்டை வளம் சிறக்கும் மலைத் தோட்டமாக்கிய தமிழ் பேசும் மக்களுக்கு மேலும் ஒரு அநீதியைச் செய்ய மசோதா எனும் கணை வீசியிருக்கிறது! மலைத்தோட்டங்களில் வேலை காலியானால் இலங்கையரையே வேலைக்கமர்த்த வேண்டும், மலைத் தோட்ட முதலாளிகள்—என்று அந்த மசோதா கூறுகிறது. சட்டத்தை மீறினால், சிறைக் கோட்டத்தையும் இரக்கம் சிறிதுமில்லாத தண்டனைகளையும் காட்டி மிரட்டுகிறது மசோதா.

இலங்கையர்தான் நாங்களும், என்று கூறி தமிழ் பேசும் மக்கள் அங்கு வேலை கேட்க முடியாது. ஏனெனில் அவர்களுக்கு ‘நாடற்றவர்கள்’ — என்ற அவமானப் பெயரை முன்பே குத்தி விட்டது இலங்கை அரசு. அந்தப் பகுதி மக்களின் இளஞ்சிறார்களுக்கு கல்வியறிவு கொடுக்கமாட்டோம்—என்று சின்னாட்களுக்கு முன் சட்டம் போட்ட அரசு, இப்போது வாழ்வையும் பிடுங்கிவிடச் சதித்திட்டம் தீட்டிவிட்டது.

இதுகண்டு பொங்கி எழுந்தது இலங்கை வாழ் தமிழக சமுதாயம். அச்சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர் செல்வநாயகம் அறிக்கை விடுத்துள்ளார், அறப்போர் துவங்கச் சொல்லி! கல்விக் கண்ணையும் பறித்தீர்; இப்போது வயிற்றிலும் அடித்து தெரு மூலைக்கு இழுத்து எறிகிறீர்களே! எங்கள் நாகரீகத் தமிழ்ச் சமூகத்தை நற்றப் பரம்பரையாகத் துணிந்து விட்டீர்! பொறுமைக்கும் அளவுண்டு பொங்கி எழும் காலம் வந்துவிட்டது — என எழுச்சி ஒலி எழுப்பும் போர் முரசைத் தட்டி விட்டார், செல்வநாயகம்!

இலங்கை அரசு கொணரவிருக்கும் மசோதா செல்வநாயகம் அவர்கள் குறிப்பிடுகிறபடி, தமிழ் மக்களுக்குத் தரப்படும் அடி, தொழிற் சங்க இயக்கத்திற்குக் கொடுக்கப்படும் அடி, பாட்டாளி வர்க்கத்திற்குத் ‘தரப்படும் அடி, — என்று கருத வேண்டும். தமிழ், தமிழர் என்ற உணர்வுக்கு அப்பாற்பட்டவர்கூட இதுபற்றிக் கண்டனக் குரல் எழுப்புகிறார்கள், எழுப்ப வேண்டும், காரணம் தொழிலாளர் என்ற பிரிவில் தமிழர், இலங்கையர் எனப் பிரித்து ஒரு சாராருக்குக் கொடுமை வழங்குவது நியாய உள்ளத்தவர்கள் சகிக்க முடியாத ஒன்றாகும். எனவே, இந்த மாபாதக மசோதாவை எதிர்த்து இலங்கையில் மட்டுமல்ல; உலகத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் குரல் எழுப்ப வேண்டும்.

“பாராளுமன்றத்தில் படுநாசம் விளைவிக்கும் உட்பிரிவுகள் கொண்ட இந்த மசோதா ஏற்றுக் கொள்ளப்படும் முன்பே அரசாங்கத்தால் கைவிடப்படும் நிலையைக் கொண்டு வரவிருக்கிற” இலங்கைத் தமிழரின் போராட்டத்திற்கு தார்மீக ஆதரவு தரும் வகையில் அக்குரலில் வலுவிருக்க வேண்டும்!


# கமலா பீடி

ஒளியில் சிறந்தது சூரியப் பிரகாசம்

பீடியில் சிறந்தது கமலா பீடியே!

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்.

## கமலா ஸ்டோர்ஸ்.

நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

தந்தி : “தாமரை” போன் : 3597—6522.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலைக்கண்டன்

### துரோகப் பட்டியலில் இடம் பிடிக்கும் பத்திரிகைகள்

தமிழ் மொழியை உபயோகித்தே தமிழ் பேசும் மக்களையும், தமிழ் அரசுக்கட்சியையும் தாக்க முனைந்துள்ள இரு பத்திரிகைகளைப்பற்றி இம்முறை நமக்குப்பல ருசிகரமான சம்பவங்களை அப்பாக்குட்டி அம்மான் கொண்டு வந்து கொடுத்துள்ளார். ஒன்று, ஒரு தமிழ் பிரமுகரால் ஆரம்பிக்கப் பட்டு, அண்மைவரை தமிழ் பேசும் சமுதாயத்தின் உயர்ச்சிக்காகப் பாடுபட்டு விட்டு, இப்பொழுது அரசாங்கத்தின் ஊதுகுழலாகவும், சிறிமாவோவின் சேலைத் தலைப்பில் பிடித்துக் கொண்டு ததிங்கிணத்தோம் போடுந் தத்துப்பிள்ளை போலவும் பவனிவர ஆரம்பித்துள்ள ஒரு தினசரியாகும்.

தமிழரசுக் கட்சி சம்பந்தமான செய்திகளைத் தனக்கேற்றபாணியில் திரித்து, மழுப்பி எழுதுவது இதன் வேலையாகவுள்ளது தனக்கு வேண்டியவர்களுக்குக் காக்காய் பிடிக்கிறது. தனது சுயநலத்திட்டத்தை அறிந்தவர்களுக்குச் சவால் விடுகிறது இப்பத்திரிகை செய்யும் விஷமங்களை தமிழ் பேசும் சமுதாயம் நன்கு அறிந்து விட்டது.

தொழிலாளர் பிரச்சினையில் வகையாக மாட்டிக் கொண்டு விழி பிதுங்க விக்கலெடுக்கும் அப்பத்திரிகை, இப்போ ஆளும் கட்சிக்குப் பந்தம் பிடித்து பதவியும் பணமும் சம்பாதிக்கும் தமிழ் பிரமுகர் ஒருவரின் சொற்கேட்கும் தம்பிரானுக மாறித்தவிக்கிறது.

இனம் மாண்டாலென்ன? இருந்தாலென்ன என்று எண்ணியுள்ள இப்பத்திரிகையின் எண்ணங்களை இன உணர்ச்சியுள்ள சமுதாயம் கவனமாக நோட்டம் பார்த்து வருகிறது. நமது அப்பாக்குட்டி அம்மானும் சந்திக்கு இழுத்து சவுக்கடி கொடுப்பார். விரைவில் எதிர்பாருங்கள்.

### வீடு கொளுத்தும் அரசனுக்கு நெருப் பெடுத்துக் கொடுக்கும் மந்திரி.

துறவு பூண்டு சிறிதுகாலம் தெய்வப்பாதையில் பவனி வந்தார் ஒருவர். துறவறம் துளிகூட ஒத்துவரவில்லை. உடனே இல்லறத்தின் இன்பங்களை இச்சித்தார். புனிதமான ஆசிரியத் தொழிலில் புகுந்தார். ஆண்பெண் இருபாலாரும் கலந்துபயிலும் பள்ளிக்கூடம் ஒன்று கிடைத்தது. தன் உள்ளத்துள் ஒடிக்கிடந்த முரட்டுத் தனங்கள் செயற்பட ஆரம்பித்த தன் விளைவுகள் அனேகம், மீண்டும் புகுந்த பாடசாலைக்குள்ளும் சச்சரவு—பணம் கையாடல்—பின் வெளியேற்றப்படல் அதன் பின்னர் பத்திரிகைப் பிரவேசபடலம். கடந்த சத்தியாக்கிரக நேரத்தில் அனுதாபி வேடமிட்டு தானுமொரு சத்தியாக்கிரகி என்றும், மேற்குறிப்பிட்ட பத்திரிகையின் பிரதிநிதியென்றும் சிலகால ஓட்டம். பின்னர்தான் அடித்தது யோகம். யூ. என்.பி.யைச் சரணடைந்த தன் பலனுக கடித்து ருசி பார்க்க ஒரு சிறு எலும்புத் துண்டு, இப்போ அந்த எலும்புத்துண்டின் பயனுக ஒரு காளான் பத்திரிகை.

—இது அரசனின் லெட்சணம்.

மந்திரி......?

அசகாய சூரன் என்று தன்னை எண்ணும் ஒரு பிரகஸ்பதி. அடிக்கடி 'பிரமுகர்' வரிசையில் தன்னையும் ஒப்பிடுவார்—ஏன் அறிக்கைகளும் விடுவார். உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைப்பதில் நிகரற்ற ஆத்மா. இவருக்குத் தெரிந்தது: ஏதாவது வகையில் ஒரு "லிஸ்டை"யோ, ஒரு 'ரசீது' புத்தகத்தையோ கையிலெடுத்துப் பணம் வசூலிப்பது. எப்படியோ எங்காவது நுழைந்து தனது சூரத்தனத்துக்கேற்ற மதிப்பைத் தேடிக் கொள்ளுவார். வாலாட்டங்கள் அம்பலமேறியதும் தலை தெறிக்க ஓடுவார்...பாவம்.

> **விளம்பரம்**
>
> அரசாங்க இலாகாவுக்குள் எந்தவிதமான அலுவல்களை முடிப்பதானுலும் சரி குறைந்த கட்டணத்தில் முடித்துத் தரப்படும். வெற்றி தோல்வி விடயம் கடைசியில்தான் தெரியும். எம். பி. பதவியில்லாவிட்டாலும் எதையும் முன்னின்று நடத்துவதற்கு உத்தரவாதம் அளிக்கப்படும். மந்திரிகளைப் பந்தம் பிடிப்பது முதல் சகல விடயமும் ஏற்றுக்கொள்ளப்படும்.
>
> செய்த பணிகளுள் தலையாயது: ஒரு தமிழ்பத்திரிகையை ஆளும் கட்சிக்கு வால் பிடிக்கச் செய்தது; பத்திரிகையில் செய்திகளை தமக்கும், தாம் சார்ந்த கட்சிக்கும் சாதகமாகத் திரித்துக் கூறவைப்பது. தமிழரசுக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்த முனைவது, இப்படிப் பலப்பல...
>
> கட்டணம் எதற்கும் ரூ. 1000
>
> (அப்புக் காத்துச் சம்பளம் மட்டும் தானே ஒழிய வேறொன்றுமில்லை.)
>
> முகவரி:
>
> மந்தத் தமிழர் நியாயதுரந்தரர். மே/பா சுதந்திரக் கட்சி கொழும்பு—44
>
> விளம்பரம் கொடுத்தவர்:— அப்பாக்குட்டி அம்மான், 17—6—62.

காளான் பத்திரிகையின் உதவி ஆசிரியர் — அல்ல அல்ல—நமது அரசருக்கேற்ற மந்திரி. பத்திரிகை என்னமோ விற்பனையாளர்கள் பட்டியல் ஒன்று வைத்திருந்தது. அதை அபகரித்துக் கொண்டு அரசருக்கு (ஆசிரியர் — அதிபர் — எல்லாம் ஒருவரே!) முந்திக் கொண்டு நிலுவைகளை வசூலித்து ஏப்பம் விட்டு விடுவார். பத்திரிகையில் "பேனு நண்பர்கள்" பகுதியை ஆரம்பித்து "பேனு நண்பி"களின் பட்டியலொன்றை அறிந்து கொண்டு எல்லோருக்கும் காதல் கடிதம் வரைய ஆரம்பித்தார். சில கடிதங்களுக்கு அந்த "நண்பி"களின் தந்தையர் ஆசிரியருக்கு [illegible] பதில்கள் எழுதியிருந்தனர். எப்படி இருந்திருக்கும் என்பது தெரிந்ததுதானே!

கண்ணகியின் கால் சிலம்பை விற்று பணம் தேடப் புறப்பட்ட கோவலன் எனத் தன்னை நினைத்துக் கொண்டு, "சிலம்போ சிலம்பு" என்று மட்டக்களப்புத் தெருக்களில் "சிலம்பு" விற்கும் இந்தச் செம்மலிடம் கொஞ்சம் நயமாக நடந்து கொள்ளும்படி தயவாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இப்போது தெரிகிறதா? "வீடுகொளுத்தும்அரசருக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கும் மந்திரி" வரலாற்றை.

### சுதந்திரக் கட்சியும் சுந்தரரும்

தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கடந்த வாரம் மூதூர் தொகுதியில் பிரசாரக் கூட்டங்கள் நடாத்தச் சென்றிருந்தனர். கூட்டம் நடைபெற்ற இடங்களில், தலைவர்களின் பேச்சுக்களை ஒலிப்பதிவு செய்து கொண்டு ஒரு 'ஜீப்' வண்டி சென்றது. அரசாங்கத்தின் ஒற்றர்களின் ஜீப் வண்டியாகததான் இவ்வண்டி இருக்குமென பலரும் எண்ணினர். ஆனுல் கடைசியில் உண்மை தெரிந்தது. திருவாளர் சுந்தரலிங்கனுர் ஆட்சியாளர்களின் சார்பாக, தமிழரசுக் கட்சித் தலைவர்களின் பேச்சுக்களை ஒலிப்பதிவு செய்து எடுக்க ஏற்பாடுகள் செய்துள்ளாராம். அப்பாக்குட்டி அம்மானின் துப்புத துலக்கும் வேலை துரிதமாக நடைபெறுகிறது. ஆளும் கட்சிக்கும் சுந்தரருக்கும் ஏதோ ஒரு "ஒப்பந்தம்" (தமிழர் வாக்குகளைப் பிரிக்கும் முயற்சியில்) இருக்கிறது போல் தெரிகிறதாம்.

பொறுத்திருந்து பார்ப்போம்.

### தேர்தல் காரியாலயம்

மூதூரில் தேர்தல் காரியாலயம் ஒன்றுக்கான இடத்தை ஒரு நண்பர் தமிழரசுக் கட்சி அபேட்சகர் ஜனுப் முகம்மது அலிக்கு இலவசமாகக் கொடுத்துள்ளார். சுதந்திரக் கட்சிக் கிளைத் தேர்தல் காரியாலயம் ஒன்றை அமைக்க ஜனுப் மஜீத் அவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் இடம் கிடைப்பதாயில்லை. ஆளும் கட்சியின் பிரதிநிதியாகத் தான் இருப்பதனுல் எதுவும் செய்துவிடலாம் என்ற எண்ணம் போலும் காரியாலயம் அமைக்க வசதியெனக் காணப்பட்ட ஒரு இடத்தை அபகரிக்கத் தனது அதிகாரங்களைக் காட்டி மிரட்டியிருக்கிறுராம் பலாத்காரமாக இடம் கைப்பற்றப் பட்டுள்ளதாம். ஐயா மஜீத் துரை அவர்களே! அகம் பாவம் பொல்லாதது. தயவு செய்து அமைதியைக் கடைப்பிடியுங்கள். ஆட்சி பீடமேறியோருக்கு அடிவருடும் தாங்கள் இப்படி ஆத்திரப் புத்தி கொண்டு ஆடுவது கூடாது.

### மந்திரியைத் தாக்கும் மந்திரி

ஆங்கில வார ஏடு ஒன்றில் இப்போது நமது நிதி மந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவின் குரல் ஒலிக்கிறது. அதே பத்திரிகையில் நீதி மந்திரி சாம். பி. சி. பர்னுந்துவுக்கு அடிக்கடி சவுக்கடி கொடுபடுகிறது.

ஏற்கனவே நீதி மந்திரியை நியமிப்பதில் சுதந்திரக் கட்சிக்குள் [illegible] இருந்து [illegible]

(12-ம் பக்கம் பார்க்க)

காவடிச் சிந்து 2.

## வேலேந்தி வாருமையா....

ஆர். டபிள்யூ. வி. அரியநாயகம்

பனுகொடையில் தலைவர்கள் தடுப்புக் காவலிலிருக்கும் போது அரியநாயகம் அவர்களால் இயற்றப்பட்ட காவடிச் சிந்தின் ஒரு பகுதியை கடந்தவாரம் வெளியிட்டோம். மலைநாடு, மட்டக்களப்பு, திருமலை, மன்னுர், வவுனியா ஆகிய இடங்களில் வதியும் தமிழ் பேசும் மக்களின் வேண்டுதல்கள் இன்று வெளியாகின்றன. அடுத்த வாரம் யாழ்ப்பாண மக்களின் வேண்டுதல்கள் இடம் பெறுகின்றன.

**மலைநாடு:-**

குலைகாட்டும் செங்குரும்பை முலையாள்—வள்ளி
குவளை மலர் விழி மருவு குலவு தோளாய்!
மலை நாட்டுத் தமிழர்களின் மானம் போக்கி,
மனிதரிலே உரிமையற்ற மடையராக்கி,
சிலைகாட்டும் பொம்மைகள் போல் செய்துவிட்டார்
சிங்களத் தலைவர்களின் சிற்றம் கண்டுதின்
கொலைகாட்டும் வேலேந்தி வாருமையா—சுவாமி
குலவு திருக் கோயிலுறை குமரவேளே!

✶

**மட்டக்களப்பு:-**

மீன்பாடும் வாவியிலே திருக்கைக் கூட்டம்,
மேல் விழுந்து அடிப்பதனுல் எழும்பும் தண்ணீர்
வான்தாவும் பறவைகளின் இறகில் பட்டு,
வளந்தாவும் மட்டுநகர் வட்டமெல்லாம்
தேன்தாவும் மலைகளிலே கரியகூந்தல்,
சேயிழையார் கண் தாவும் தெருக்கள் எல்லாம்
தான் தாவும் கொடி இடையே பவளச்! செவ்வாய்
தண்டமிழே உன்மனது தாவிடாதோ?

✶

**திருமலை:-**

குயில்கூவ, குன்றிருந்து குரங்கு பாய,
கொடி மலர்கள் சிதறி எங்கும் கோலம் செய்ய,
படிமீது ஊறுகின்ற வெந்நீராலே,
பலதிசையும் புகழ் மணக்கப் பாடல் போற்ற,
திருகோணமலை உறையும் மக்கள் நாங்கள்,
திசை தெரியா நடுக்கடலில் நாவாயானேம்.
வரவேணும் எமைக்காக்க அறிவுத்தாயே!
வந்துனது மைந்தர்களை இரட்சிப்பாயே.

★

**மன்னுர் -**

திருக்கேதீஸ்வர மென்னும் பதியைக் கொண்டாய்,
திரை எறியும் கடலோடி, சுழியை வெட்டி,
முருக்கேறும் முத்து, வளர் பவளம், சிப்பி,
முரசெறியும் சங்கு முதல் வளமும் கொண்டாய்.
அருள் சோதி அன்னை மடு மாதாவாழும்,
ஆலயமும் அருவி எனும் ஆறும் கொண்டாய்.
மறுக்காது வேண்டுகின்றேம் மன்னுர் மக்கள்,
மனத்துயரம் மாற்றி அருள் புரிகுவாயே.

★

**வவுனியா:-**

மான் தோன்றும் காடுகளில் மரையும் தோன்றும்,
மலர் தோன்றும் உயர் இனத்து மரங்கள் தோன்றும்
மீன் தோன்றும் குளங்களிலே கமலம் தோன்றும்
மெல்லியலார் அழகு முக பிம்பம் தோன்றும்
தான் தோன்றும் ஈசனது அருளும் தோன்றும்
தலந்தோன்றும் வன்னிவள நாட்டின் சூழல்,
வான் தோன்றும் வயல்களிலே கதிர்கள் தோன்றும்
வந்துனது அருள் தோன்ற இரட்சிப்பாயே!

—(வளரும்)

> **"தடுப்புக்காவலில் நாம்"**
>
> தடுப்புக்காவலில் இருக்கும்போது தன் மகளான "அன்பரசி"க்கு எழுதிய கடிதங்களை வாசகர்களுக்காக சுவைபட அமைத்துத்தருகிறுர்,
>
> "புதுமைலோலன்"
>
> • விரைவில் இப்பகுதியில் இடம்பெறும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எந்த நிலையிலும் சிங்களம் படிப்பதில்லை

## அரசாங்க எழுது வினைஞர் மகாநாட்டுத் தீர்மானம்

"1963-ம் ஆண்டின் இறுதியிலே அரசாங்கம் நம்மைப் பிடரியிலே பிடித்து வெளியே தள்ளிவிடுவதாகப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. அவ்வாறு வாழும் வகையிழந்து நாம் என்ன செய்யப்போகிறோம் என்ற பெரிய கேள்விக்குறி எங்கள் முன் தோன்றியுள்ள இந்நிலையிலே நான் கூறக் கூடியது 'மலை குலைந்தாலும் மனம் குலையாதீர்கள்! நம்பிக்கையை இழக்காதீர்கள்!' என்பதுதான்". இவ்வாறு திரு. க சிவானந்த சுந்தரம், அரசாங்க எழுது வினைஞர் சங்க முதலாவது ஆண்டுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

அரசாங்க எழுது வினைஞர் சங்க முதலாவது ஆண்டுக் கூட்டம் சென்ற சனிக்கிழமை (9-6-62) வெள்ளவத்தை சைவ மகளையர் கழக மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. க. சிவானந்த சுந்தரம் தலைமையில் ஆரம்பமானது. யாழ்ப்பாணம், வவனியா, மன்னார், திருமலை, மட்டுநகர், புத்தளம், பதுளை, நுவரெலியா, கேகாலை, குருணாகலை ஆகிய பல்வேறு வெளியூர்களிலிருந்தும் கொழும்பிலிருந்தும் சுமார் 500க்கு அதிகமான உறுப்பினர் வருகை தந்திருந்தனர். கூட்டத்தில் செயலாளரின் ஆண்டு அறிக்கை, பொருளாளரின் கணக்கறிக்கை ஆகியவை ஒரு மனதுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

சங்கத்தின் புத்தாண்டுத் தலைவராக மீண்டும் ஒருமனதாகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. க. சிவானந்த சுந்தரம் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்.

அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

ஈழ நாட்டின் வரலாற்றிலேயே முதன் முறையாக தமிழ் பேசும் தொழிலாளர்களாகிய நாம் முதன் முறையாக இனவழி ஒன்று கூடி நமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை அலசி ஆராய்கிறோம். பல்லாண்டு காலமாக இனவேற்றுமைகளை ஒதுக்கித்தள்ளி தொழிலாளர் என்ற அணியில் சிங்கள மக்களுடன் தோளோடு தோள் நின்று போராடினோம். பலன் பூஜ்யம் என்பது இன்று எல்லோருக்கும் தெரிந்து விட்டது.

மொழி வழி பிரிந்தால் நாம் வாழ்வோம், இன்றேல் வீழ்வோம் என்ற எமது உறுதியான கொள்கை மேலும் வலுவுற்று வருகிறது. "மே" தினச் செய்தியாக "தமிழ் பேசும் தொழிலாளர்களே! இனவழி ஒன்று படுங்கள்!" என்ற எமது அறைகூவல் வலுப்பெற்று வருகிறது. வடஇலங்கை இ. போ. ச: (தமிழ்) தொழிலாளர்கள் தமக்கென ஒரு சங்கம் தற்சமயம் அமைத்துள்ளார்கள். இந்திய உபகண்டத்தின் தென்கோடியிலே இருந்து "திராவிடப் பாட்டாளி மக்களே! ஒன்று சேருங்கள்!!" என்ற முழக்கம் விண்ணதிரக் கேட்கிறது.

### சிங்களம் படிப்பதில்லை

இன்று அரசாங்கம் சட்டத்துக்கும் மனித நீதிக்கு மாறாக தமிழ்அரசாங்க ஊழியர்களான எம்மை சிங்களத்தைப் படிக்கும்படி வற்புறுத்துகிறது. அநீதியை, ஓர வஞ்சகமான 'நடவடிக்கைகளை எதிர்க்க வேண்டியது ஒவ்வொரு மனிதனினதும் கடமை. எனவே தான் எமது சங்கம் தமிழ் ஊழியர்களாகிய நாம் எந்த நிலையிலும் சிங்களம் படிப்பதில்லைஎன்ற கொள்கையை உறுதியாக வலியுறுத்தி நிற்கிறது. இதில் இம்மியளவும் விட்டுக் கொடுப்பதற்கு இடமில்லை.

நமது இந்த உறுதியைக் குலைத்துவிடலாம் என்ற சபல புத்தியால் — நமக்கு மாறுபட்டோர்— குறிப்பாக இடதுசாரிகளென்று தங்களைக் கூறிக்கொள்வோர்— சிங்களம் படித்தால் என்ன? நாளைக்கு வேலை இல்லா விட்டால் சோறு போடுவது யார்?என்று தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குப்பூச்சாண்டி காட்டி வருகிறார்கள்.

அவர்களுக்கும் —உண்மையில் அப்படியான ஆபத்தை அஞ்சி வாழக்கூடிய நம்மவர்களுக்கும்—நான்கூறுவது

## இஸ்ரவேல் நாட்டைப் பாரீர்

என்னவென்றால் தொழில் இல்லை என்று எந்தத் தமிழனும் கூறவேண்டிய நிலை இல்லை. தொழிலுக்கு மகத்துவம் கொடுக்காது சாதி வகுத்து சாதிக்கு ஒரு நீதி வகுத்து நம்மை நாமே தாழ்த்திக் கொண்டோம். அதனால்தான் நாம் பொருளாதார வளத்தைப் பெருக்கக்கூடிய எத்தனையோ தொழில் இருந்தும் அவற்றை நாடாது விட்டுள்ளோம்.

### இஸ்ரவேலைப் பார்

"எமது ஈழத் தமிழகத்திலே பெருவாரியான நிலம் காடாக இருக்கிறது. காட்டை வெட்டி களனியாக்கி அங்கே செந்நெல்லும் கன்னலும் விளைவிக்கலாம். புதுப் புதுச்சிற்றூர்களை உருவாக்கலாம். நமது நாடும் முன்னேறும் நாமும் வளம் பெறுவோம் நாம் இப்படிக் கூறினால் "காடும் களனியும் செந்செல்லும் கன்னலும் அடுக்கு மொழியும் மிடுக்குப் பேச்சும் தவிர வேறல்ல" என்று குறிப்பாக இடதுசாரி பொருளாதார நிபுணர்களான தோழர்கள் அங்கலாய்க்கிறார்கள். அவர்களுக்கும் வழிதெரியாமல் கஷ்டப்படும் மற்றைய தமிழர்களுக்கும் இஸ்ரவேல் நாட்டைப் பார்க்கும்படி கூறுகிறேன். சென்ற 13 ஆண்டுகளில் சுமார் 10 இலட்சம் யூதர்கள் ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளிலிருந்தும் இஸ்ரவேலுக்குச் சென்று பாலைவனமாக இருந்த அந்த நாட்டைச் சோலை வனமாக்கியுள்ளார்கள். அங்கே புதிய சிற்றூர்கள் 400க்கு மேல் உருவாகியுள்ளன. இதிலும் குறிப்பிடக் கூடிய [illegible] தொழிலாளர்களே! ஒன்று படுங்கள்! என்று வெத்து வேட்டு உற்சாடனம் போடும் பொதுவுடமையாளர்களின் ஆட்சிக்குட்பட்டிருக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலே இருந்து சுமார் 4 இலட்சம் மக்கள் இனவழி ஒற்றுமையே வாழும்வழி என உணர்ந்து —செயற்கை ஒற்றுமையைத் துறந்து—தன் இன வழி ஒன்று கூடி புதிய ஒரு நாட்டினையும் புதிய ஒரு இனத்தையும் ஏற்படுத்தியுள்ளார்கள். ஈழம் வாழ் தமிழர்களுக்கு—குறிப்பாக அரசாங்க ஊழியர்களுக்கு—யூதரினத்தவர்கள் ஒபபற்ற வழிகாட்டிகளாகவே திகழுகிறார்கள். அவர்கள் கற்றுத்தந்த பாடத்தை நாம் கடைப்பிடித்தால் உய்யும் வகை உண்டென சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

### அன்பும் நல்லெண்ணமும் வேண்டும்

"தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களான நாம் தொழில் முறையால் தனி ரகத்தினராலும்—தமிழ் பேசும் இனத்தின் அசைக்க முடியாத ஒரு பகுதியினரே. நாம் தமிழ் பேசும் இனத்திலிருந்தும் பிரிந்து வாழ முடியாதவர்கள் இந்த நிலையில் தமிழ் பேசும் பேரினத்தின் அன்பும் நல்லெண்ணமும் நமக்கு அவசியம் தேவை. நமது சங்க ஊழியர்கள் இந்த உணர்ச்சிகளை வளர்க்கப்பாடுபட வேண்டும். குறிப்பாக வடக்கு கிழக்கு இலங்கையிலும்—பிற இடங்களிலும் கடமையாற்றும் ஊழியர்கள் தம்மிடம் வரும் பொது மக்களுக்கு உதவியாகவும் அன்பாகவும்—நேர்மை வழி நின்று கடமையாற்ற வேண்டும். இதனால் நாம் அவர்களின் அன்பைப் பெறுவதுடன் நம்மவர்களிடையே இருக்கும் பிரதேச வேறுபாடுபோன்ற தப்பெண்ணங்களையும் களையலாம். எனவே எமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் இந்தப் பண்பைச் சீரிய முறையில் வளர்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வாழ்க்கைச் செலவு வளர்ந்துகொண்டே போகிறது. குறிப்பாக நாம் உபயோகிக்கும் புளி, சர்க்கரை போன்ற பண்டங்களை கட்டுப்படுத்தி அவற்றின் விலையை உச்சப்படுத்தி விட்டது அரசாங்கம். இதனால் ஏற்படும் துன்பங்களைப் பொறுக்க முடியாதிருக்கிறது. எனவே வாழ்க்கைச் செலவைக் கட்டுப் படுத்தும் படியும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்."

பொதுச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் பேசும்பொழுது சங்கம் ஆற்றிய பணிகளை விளக்கி தமிழ் பேசும் ஊழியர்களுக்கு ஓரவஞ்சகமாகத் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஆண்டுச் சம்பள உயர்ச்சி, ஐம்பத்துஐந்து வயதில் கட்டாய ஓய்வு அளித்தல் ஆகிய அரசாங்கத்தின் இரண்டு நடவடிக்கைகளையும் எதிர்த்து சங்கம் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இருப்பதாக மிகுந்த கைதட்டலுக்கிடையே கூறினார்.

கொழும்பிலும் பிற இடங்களிலும் இருந்து வந்திருந்த உறுப்பினர்களும் அரசாங்கம் தமிழ் பேசும் ஊழியர்களைத் துன்புறுத்தும் விதத்தில் நடந்துகொள்வதைக் கண்டித்துப் பேசினர்.

பின்னர் கீழ்க்காணும் தீர்மானங்கள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன:

(i) சிங்களம் மட்டும் சட்டத்திற்கு முன் சேவையிற் சேர்ந்த ஊழியரனைவரும் தமது ஓய்வுபெறும் வயது வரை அல்லது (உடல் நலக் குறைவு அல்லது பதவி ஒழிப்புப் போன்ற) பிற காரணங்களுக்காக ஓய்வு பெறும் வரை எவ்வித இடர்ப்பாட்டிற்கும் தண்டனைக்கும் உள்ளாக்கப்படாது தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டுமென்பது பொது விதியாயிருத்தல் வேண்டும்.

(ii) அரச கரும மொழிக் கொள்கையின் ஒருதலைப்பட்சமான அமுல் (அரசாங்க சேவையிலும், அரசாங்கக் கூட்டுச் சேவையிலுமுள்ள) தமிழ் பேசும் ஊழியர்களை, அவர்களையொத்த சிங்கள ஊழியர்களுக்கில்லாத, பாரதூரமான வசதியீனங்களுக்கும் சமாளிக்க முடியாத இடர்களுக்கும் உள்ளாக்குவதாலும்.

(iii) சங்கம்இதுவரைஅரசாங்கத்திற்கு எடுத்துக் கூறிய கருத்துக்களும் விடுத்த கோரிக்கைகளும் இது வரை கவனிக்கப்படாததாலும் சங்க உறுப்பினர்களனைவரும் ஓர் ஒருமித்த தொழிற் சங்க நடவடிக்கையாகச் சிங்களம் படிப்பதைத் தவிர்க்க வேண்டும். மேலும் ஏனைய தமிழ் பேசும் ஊழியர்களையும் இவ்வாறு செய்யும்படி வேண்டிக் கொள்வதெனவும் சங்கம் தீர்மானிக்கிறது.

(iv) அரசாங்கசேவையிலிருந்தும், அரசாங்க கூட்டுச் சேவையிலிருந்தும் அரசாங்கத்தின் அரச கரும மொழிக் கொள்கை காரணமாக உரிய காலத்திற்கு முன் ஓய்வு பெறும் ஊழியர்களுக்கும், சேவையில் உறுதிப்படுத்தப் படாதவர்களுக்கும் புனர் வாழ்வளிக்கும் பொருட்டு,

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள பல்வேறு விவசாயக் குடியேற்றத் திட்டங்களில் அவர்களுக்கு நிலம் ஒதுக்கியும்,

சிறு கைத்தொழில்கள், விவசாயம், மீன் பிடித் தொழில் ஆகியவற்றிற்கும் இன்னோரன்ன பிற தொழில்களில் ஈடுபடுவதற்கு கடன் உதவியும், பிற சிறப்பு வசதிகள் செய்து கொடுத்தும், வேறு விதங்களிலும் உதவியளித்தும் அரசாங்கம் ஊக்கம் அளித்தல் வேண்டும்.

(v) சுதந்திரமான,தளையற்ற தொழிற் சங்கங்கள் உண்மையான மக்களாட்சியின் கீழ்த்தான் செழிக்க முடியுமாதலாலும் அப்படியான ஒரு மக்களாட்சி தொழிற்பட சுதந்திரமான தடையற்ற பத்திரிகைகள் அவசியமாதலாலும், நாட்டின் பொதுசன அபிப்பிராயத்திற்கு எவ்விதத்திலும் வாய்ப்பூட்டுப் போடும் தன்மைத்தான சட்டமெதையும் அரசாங்கம் செய்யாதிருக்க வேண்டும்.

(13-ம் பக்கம் பார்க்க)

பாகப்படி, மூலித் திராவகங்களால் தயாரிக்கப்பட்டது
MEVIGAR BALM
மெவிக்கார் பாம்
இது தலையிடி, தேள்கடி, வாதம், பல்வலி, இருமல், ஜலதோஷம், வெட்டுக்காயம் முதலிய வியாதிகளை நொடிப்பொழுதில் நீக்கி சுய நிலையை அடையச் செய்யும்.
ஒருமுறை உபயோகித்து உண்மை அறியுங்கள்.
எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
உங்கள் வீடுகளில் அவசியம் இருக்க வேண்டியது.
உடன் வெட்டுக் காயங்களுக்கு கை கண்ட தைலம்
விலை போத்தல் ஒன்று ரூ 1-25 சதம்
பிற ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.
கவிசெம்ஸ்,
19, செட்டியார் தெரு, கொழும்பு-11.

நம்பிக்கையான
நைலோன்

வலைகளுக்கும், நூல்களுக்கும்
சேகரம் அன் சன்ஸ்
74, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 693
தந்தி: சேகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் வளம் சிறக்க 4:

# தமிழகத்தின் தேசிய பானம் பதநீர்

## அதைப் பாதுகாக்கவும் பதப்படுத்தவும் வழிவகைகள்

பருவக் காலங்களில் தோன்றும் பனம் பாளைகளைச் சீவுவதனுல் வடியும் இனிப்பான நீருக்குப் "பதநீர்" என்று பெயர். அரசர்கள் இதை உயர்ந்த பானமாய்க் கருதி அருந்தின படியால் "பதிநீர்" என்று கூறினர் (பதி=அரசன்).

பருவக் காலங்களில் தோன்றும் பாளைகளைப் பதப்படுத்துவதால் (massaging) வடியும் தன்மையுடையதால் "பதநீர்" என்றும் கூறலாம்.

பதநீர் பாளையிலிருந்து வடியும் பொழுது மிகவும் இனிப்பாயும், மணமாகவுமிருக்கும். ஆனுல் நேரம் ஆக, ஆகக் காற்றின் நுண்ணிய அணுக்களின் சக்தியாலும், சூழ் வெப்ப நிலையாலும், அதன் கண்ணுள்ள இனிப்பு மாறுதலடைந்து புளிப்படைகிறது. இதைக் "கள்" என்கிருேம். பதநீர் புளிப்படையாமல் இருப்பதற்குச் சுண்ணும்பைப் பதநீர் சேகரிக்கும் மண் கலயங்களில் சேர்க்கிருேம்.

### அமிர்தம்

பதநீரை அமிர்தம், புதுமது, தெள்ளமுது, காமதேனு, பசுநரு என்றெல்லாம் பழம் ஏடுகள் குறிக்கின்றன.

நறை, நரு என்றுல் இனிமையானது. 'பசுநரு' என்றுல் பசுமையான பாளைகளிலிருந்து வடியும் பதநீர் எனக் கொள்ளலாம்.

பதநீர் இறக்கிவைக்கும் குடுவையை "அமுத கமண்டலம்" என்று கூறினர் என்பதைச் செப்பேடுகளில் காண்கிருேம்.

பதநீரைச் சிலர் தவறுதலாய் "கள்" என்கின்றனர். ஆகவே சிலர் பருகப் பயப்படுகின்றனர். பதநீரில் போதைச் சத்து இல்லை. பதநீரை இரசாயன முறைப்படி வேறு பிரித்துப் பார்த்தால் (analysis) பின் வரும் அம்சங்கள் அமைந்திருப்பதை அறியலாம்.

| | |
|---|---|
| அடர்வு எண். (Specific gravity) | 1.07 |
| புளிப்பு அளவு Ph. | 6.7 முதல் 6.9 |
| நைட்ரஜன் (Nitrogen) | 0.056 |
| புரோடின் (Protein) | 0.35 |
| மொத்த சீனி (Total sugars) | 10.93 |
| குளுக்கோசு வகைச் சர்க்கரைகள் (Reducing sugars) | 0.96 |
| நீறு Ash (Minerals) | 0.54 |
| கால்சியம் (Calcium) | Traces |
| பாஸ்பரஸ் (Phosphorus) | 0.14 |
| இரும்புச் சத்து (Iron) | 0.04 |
| நேரடியாதியும் புளிப்பு அளவு (Titrable acidity) | 8.75 cc. of N/10 alkali |
| வைட்டமின்-சி (Vitamin C) | 13.25 Mgms, per 100 CC |

இதோடு, 100 cc-க்கு, 3.9 வைட்டமின் B-1 சத்தும் பதநீரில் உள்ளது.

பதநீரை வற்றவைக்க தேன் போன்ற கூழ் பதநீர், (syrup) பனை வெல்லம் கிடைக்கும். ஆனுல் கள்ளைக் காய்ச்சினுல் ஒன்றும் கிடைக்காது. இதனுல் பதநீரின் பண்பு நன்கு தெரியும்.

### பதநீரும் வைத்தியமும்

"பதநீரில் உள்ள குளுக்கோஸ் (glucose) கால்சியம், இரும்புச்சத்து வைட்டமின் B. சிறந்த மருத்துவ மகிமை கொண்டவை.

1. பதநீரில் உள்ள சீனி உடலுக்கு வெப்பத்தைக் கொடுக்கும்; நலத்தை உண்டாக்கும். 2. குளுக்கோஸ், மெலிந்து, தேய்ந்து வாடிய பிள்ளைகளின் உடலை நலமுறச் செய்யும். 3. கணை பிடித்த குழந்தைகளை நலமாக்கும். 4. கர்ப்பிணிகளுக்கும் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் தாய்மார்களுக்கும் ஏற்ற உணவு. 5. பனை வெல்லம் இரத்த ஏற்றத்தை (blood pressure) குறைக்கும். 6. கன்னிவாத சுரம் (typhoid), நீர்க்கட்டு (pneumonia) முதலிய வியாதி உடையவர்களுக்கு மிக எளிதில் சீரணித்து இரத்தத்துடன் சேரும் உணவாகும். 7. இருதயத்தை (heart)ப் பாதுகாக்கும் விசேட சக்தி உண்டு. 8. கால்சியம் பற்களுக்குப் பலம் கொடுக்கும்; ஊனிலிருந்து போகும் இரத்தத்தையும் (bleeding gums) பழுப்பையும் மாற்றும். 9. மெலிந்து, நெஞ்சில் எலும்பு தள்ளின குழந்தைகளுக்கு (rickets) உணவு. 10. இரும்புச் சத்து பித்தத்தை நீக்கும்."

பதநீர் ஒருவேளை உணவாகவே உட்கொள்ளப்படுகிறது. இன்றும் திருநெல்வேலி மாவட்டத்தில், தினக்கூலி பேசும்பொழுது "கூலியும் ஒரு கருப்பட்டியும்" சேர்த்துத்தான் பேசப்படுகிறது. ஒரு கருப்பட்டியை மதிய உணவாய் உண்டு, தண்ணீர் குடித்துப் பசியை போக்கிக் கொள்கிறுர்கள். இதனுல், ஒரு கருப்பட்டியில் ஒருவேளை உணவில் உள்ள சத்து இருக்கிறதென்றே கொள்ள வேண்டும்.

### பருவக்காலம்

ஆண்பனை, பெண் பனை இரண்டின் பாளைகளிலிருந்தும் பதநீர் எடுக்கப்படுகிறது. ஜனவரி முதல் வாரத்தில், அல்லது டிசம்பர் கடைசி வாரத்தில், முதலில் ஆண் பனைகளில் பாளை தோன்றும். ஆண்பனையின் பாளையில் நீண்ட விரல்கள் போன்று தோன்றும். பெண் பனை பாளையில்தான் நுங்கு காய்க்கும்.

ஆண் பனைப்பாளை, விரல் விடுமுன், இடுக்கிப் பதநீர் எடுப்பதற்கு "கட்டுப்பாளைப் பதநீர்" என்று பெயர். இதில் இனிப்புச் சத்துச் சற்றுக் குறைவாக இருக்கும். விரல் வெளிவந்தவுடன் இடுக்கி எடுக்கப்படும் பதநீரில் சுமார் 10 சதவிகிதம் இனிப்பு இருக்கும். ஆண் மரப் பதநீர் அருந்த வேதாந்த அறிவு அதிகரிக்கும் என்றும், பெண்பனை அல்லது பருவட்பனை பதநீர் அருந்த மோகம் அதிகரிக்கும் என்றும் பழைய ஏடுகள் பகருகின்றன. ஆனுல் இது விஞ்ஞான முறையில் நிறுவப் படவில்லை.

பெண் பனைப்பாளையில் சிறு கிட்டிகள் தோன்றும் பொழுது இடுக்கி எடுக்கப்படும் பதநீருக்குப் பருவப் பனை பதநீர் என்று பெயர். இரசாயன முறைப்படி இவ்விரு பதநீர்களிலும் வித்தியாசம் ஒன்றும் காணப்படவில்லை. காய்கள் முற்றிய பிறகு காய்களை நீக்கிவிட்டு, இடுக்கிச் சேலம் மாவட்டத்திலும், கேரளாவில் பாலக்காடு பகுதியிலும் பதநீர் எடுக்கப்படுகிறது. இதற்கு "நுங்குப் பதநீர்" என்று பெயர். பெண்பனைப் பாளையை இடுக்காமல் விட, நுங்கு, காய், பழம் கிடைக்கும்.

பதநீருக்குக் "கற்பகச் சாறு" என்றும் கூறுவர். ஆகையால்தான் கருப்புக் கட்டிக்குக் "கற்பகக்கட்டி" என்று பெயர். அது நாளடைவில் கருப்புக்கட்டி என்று மருவி வழங்கலாயிற்று. இலங்கையில் "கருப்பட்டி" என்றும் கூறுவர்.

> பொருள் வளம் சிறக்க... என்ற தலைப்பின் கீழ் ஏற்கனவே மூன்று கட்டுரைகள் வெளியாகியிருந்தன. அத்தொடர்ச்சியில் இது நாலாவதாகும். 'கலைக்கதிர்' இதழிலிருந்து எடுக்கப்பட்டுள்ள இக் கட்டுரை வட மாகாணத்தின் முக்கிய விளைபொருளான பனை மரத்திலிருந்து பெறப்படும் 'பதநீர்' பற்றி உபயோகமான பல கருத்துக்களையும், தெளிவான விளக்கங்களையும் தருகிறது. வாசகர்கள் வாசித்துப் பயன் பெறுவார்களென நம்புகிருேம்.

மாலைப் பதநீரில் மாம்பழத்தைச் சீவி இட்டு உண்பது தென்னகத்தில் சாதாரண பழக்கம். அதனுல் உஷ்ண வியாதிகள் தீரும்.

திரு. கூ. சம்பந்தம்

### பதநீர் நாட்டுப் பானம்

ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு தேசிய பானம் உண்டு. தமிழகத்தின் தேசிய பானம் பதநீர் எனச் சொல்லலாம் எல்லோருக்கும் எளிதில் கிடைக்கும் பதநீரைச் சுகாதார முறைப்படி பருகிப் பயன் பெறப் பல ஆராய்ச்சிகள் செய்யப் படுகின்றன.

### பதநீரைப் பதனப்படுத்தல்

பதநீர் பாதுகாப்பை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று பதநீரை, மரத்திலிருந்து கொட்டும் பொழுதே கலயத்தில் பாதுகாத்தல். மற்றென்று இறக்கியபின் பாதுகாத்தல். கலயத்தில் பாதுகாத்தலுக்குக் கலயத்தின் உள் பாகத்தில், சுண்ணும்பு தடவப்படுகிறது. பாளை எவ்வளவு பதநீரை 24 மணி நேரத்தில் சுரக்கும் என்பதை அறிந்து அதற்கு அளவான சுண்ணும்பைத் தடவுதலே பனைத் தொழில் செய்யும் வல்லுநரின் கைத்திறன். இது அனுபவத்தால் அறியப்படுகிறது.

சுண்ணும்பிற்குப் பதிலாக விஞ்ஞானிகள் பல மாற்றுப் பொருள்களைக் கண்டுபிடித்தனர். "சல்பனுமைட்டு" (sulphanamide) என்பதைச் சுண்ணும்பிற்குப் பதிலாகக் கலயத்தில் இடின் பதநீர் புளிப்படைவதில்லை. ஆனுல், இம் மருந்து உடலுக்கு உகந்த தன்று. பாலுட்டிரினைக் கொண்டு பதநீரைப் பாதுகாக்கச் சோதனை செய்யப்பட்டது. பாலுட்டிரின் சேர்த்த பதநீரை நேராக உட்கொள்ள முடியவில்லை. மேலும் பாதுகாக்கும் செலவு அதிகம். அரோமைஸின் கொண்டு பரிசீலனை செய்தால் உணவுச் சட்டம் இடம் கொடுக்கவில்லை.

### கந்தகவாயுவின் மூலம் பாதுகாத்தல் (Sulphur-di-oxide)

கந்தக வாயுவைச் சிலிக்காஜெல் (silicagel) என்ற வாயுவை உள்ளீர்க்கும் செயற்கை கற்களில் புகுத்திச் சிறு பிளாஸ்டிக் குழாய்களில் அடைத்துப் பதநீர் இறக்கும் வல்லுநர்களிடம் கொடுக்கப்படுகிறது. சுண்ணும்பு தடவுதற்குப் பதிலாகக் கலயத்தில் இக் கற்கள் கொட்டப்படுகின்றன. கற்களின் மேல் பதநீர் வடியும் பொழுது செல்லில் உள்ள கந்தகவாயு, சிறிது சிறிதாய் சிறிய குமிழ்களுடன் பதநீரைவிட்டு வெளியேறும். அப்பொழுது, பதநீர் வாயுவுடன் சம்பந்தப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது. மறுநாள் காலையில் பதநீர் வடிக்கும்பொழுது செயற்கைக் கற்கள் சேகரிக்கப்பட்டு, உலர்த்திய பின் மறுபடியும் வாயு வேற்றப்படுகிறது. இம் முறையில் பதநீர் குடிப்பதற்கு நன்ருக இருக்கிறது. சிறிது வாசனையிருப்பினும், வெல்லம், சீனி செய்வதற்கு மிகவும் எளிதாய் இருக்கிறது. இம்முறை இன்றும் சோதனை நிலையில் இருந்து வருகிறது.

### பதநீர் இறக்கியபின் பாதுகாத்தல்

பதநீரை மரத்தைவிட்டு இறக்கிய பின் சுமார் 4 மணி நேரம் வரை புளிக்காமல் பாதுகாக்கலாம். பிறகு புளிப்பேறத் தொடங்குகிறது. இதைத் தடுத்துவிட்டால் பதநீரை நீண்ட நேரம் வைத்து உட்கொள்ளலாம்.

### குளிர்விக்கும் பெட்டிகள் மூலம் பாதுகாத்தல்

பதநீரை இறக்கியதுடன் வடிகட்டிக் குளிர்விக்கும் பெட்டிகளில் ஊற்றிவிடுக. சாதாரணமாய் 75°F வெப்பநிலையில் உள்ள பதநீரை 40°F-44 F வெப்பநிலைக்குக் கொண்டுவரும் வரை குளிர்விக்கும் பெட்டி வேலை செய்கிறது. பதநீர் 40°F-44 F வெப்பநிலைக்கு வந்தவுடன் குளிர்விக்கும் பெட்டி தானுகவே நின்றுவிடுகிறது. சுமார் இரண்டு மணி நேரத்தில் குளிர்விக்கும் பெட்டியில் உள்ள பதநீரின் வெப்பநிலை 1°F உயருமானுல் மறுபடியும் குளிர்விக்கும் பெட்டி தானுகவே இயங்கிப் பதநீரை 44°F க்குக் கொண்டுவருகிறது. இதே சமயத்தில் பதநீர் புட்டிகளில் அடைக்கப்பட்டு, அலுமினியம் காகித மூடிகளால் மூடப்பட்டு விற்பனை செய்யலாம்.

### நன்மைகள்

1. பதநீரை இறக்கியபின் 12 மணி நேரம் வரை பாதுகாக்கலாம். அதாவது, புளிப்பேறச் செய்யும் அணுக்கள், இந்த வெப்பநிலையில் சக்தியற்றுக் கிடக்கின்றன.

2. பதநீரைக் காலையிலிருந்து மாலை வரை விற்கலாம்

3. பதநீர் குறைந்த வெப்பநிலை அடையும்பொழுது,

(13-ம் பக்கம் பார்க்க)




எண்சான் உடம்புக்கு சிரசே பிரதானம். மூளைக்கும். கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரும்

ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்.

இளம் பிராயத்திலே உண்டாகும் பித்த நரை, தலை மயிர் செம்பட்டை, புழுவெட்டு மண்டையிடி, பீனிசம், தலைசுற்று, காது செவிடு முதலியவைகளை ஒரே நாளில் போக்குவதுடன் ரோமத்தை கறுத்த நிறத்தோடு நீண்டு அடர்த்தியாகவும் வளரச் செய்யும்.

இதற்கு அத்தாட்சியாக கீழே குறிப்பிடும் நற்சாட்சியை வாசியுங்கள்.

Ayur. Dr. T. H. மதுரநாயகம், கதிர்காமம்,
வைத்தியராஜ் M/s T. D. மதுரநாயகம் & கோ., 12-4-1962
ஞானசுந்தர வைத்தியசாலை,
கொழும்பு.

ஐயா,

இன்று எனக்கு 85 வயதாகிறது. நான் கடந்த 55—60 வருடகாலமாய் ஞானசுந்தர வைத்தியசாலையில் பலவிதமான வியாதிகளுக்கு வைத்தியமும் செய்து, பலவித தயாரிப்பு மருந்துக்களும் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறேன். பூரண சுகமடைந்திருக்கிறேன். முக்கியமாகத் தங்களின் கருணைக்கிழங்கு லேகியம், ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம், ரிஷி சாலாமிஸ்ரி லேகியம் மிகவும் கை கண்டது.



இங்ஙனம்
லெச்சுமணன் சாமியார்

6 அவுன்ஸ் பாட்டில் ரூ. 3-00
12 அவுன்ஸ் பாட்டில் ரூ 5-75
தபாற் செலவு முறையே -/85, 1-50

ஞானசுந்தர வைத்தியசாலை,
T. D. மதுரநாயகம் & கோ.,
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.
விபரமடங்கிய கெட்லாக் இனுமாக அனுப்பப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1962 ஜூன் மாதம் 17-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## தாமதம் என்றால் அழிவுதான்

மலைநாட்டுத் தமிழ் மக்களின் நல்வாழ்வை அழிக்கும் மசோதா ஒன்று பாராளுமன்றத்துக்கு வந்துள்ளது. தோட்டங்களிலிருந்து தமிழ்த் தொழிலாளர்களை விரட்டியடித்துவிட்டு, சிங்களத் தொழிலாளர்களைக் கொண்டு வந்து தோட்டங்களில் குடியேற்ற இம்மசோதா வகை செய்கிறது. இப்படிச் செய்ய வேண்டுமென்பது ஆட்சியாளர்களின் நீண்டகால ஆசை. அந்த ஆசையை நிறைவேற்றவே இச்சட்டத்தை இயற்றுகிறார்கள்.

தோட்டங்களில் இலங்கையர்களை (சிங்களவர்களை) வேலையிலமர்த்த இம்மசோதா தோட்ட நிர்வாகிகளை வற்புறுத்துகிறது. மறுத்தால் தோட்ட நிர்வாகிகளுக்கு அபராதமோ சிறைவாசமோ கிடைக்கும். தோட்டங்களில் ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. பல்லாயிரக் கணக்கான தமிழ் வாலிபர்கள் வேலையின்றித் தவிக்கின்றனர்.

தோட்டங்களிலுள்ள கொஞ்ச நஞ்சம் வேலைகளையும் பறித்துச் சிங்களவர்களுக்குக் கொடுத்துவிட்டால், தமிழ் வாலிபர்கள் பட்டினிச் சாவுக்குப் பலியாக வேண்டியது தான். தோட்டங்களிலே வேலை வசதியில்லை. தோட்டங்களுக்கு வெளியேயும் வேலை வசதியில்லை. வர்த்தகம் முதலிய துறைகளில் ஈடுபடவும் இடமில்லை. காரணம் "நாடற்றவர்கள்" என்ற முத்திரை குத்தப்பட்டிருப்பது தான். இந்த நிலையில் சுமார் 8 லட்சம் "நாடற்ற" மக்களும் அவர்களின் பிள்ளைகளும் இந்தியப் பிரஜாவுரிமை பெற்று இந்தியாவுக்குச் செல்ல வேண்டும்—இல்லையேல் பசி பட்டினியால் வாடி வதங்கித் தெருத்தெருவாக அலைய வேண்டும். அதைச் செய்யவே வருகிறது இம்மசோதா.

நாடற்றவர்கள் அனைவரும் இந்தியப் பிரஜைகள் என்பது அரசாங்கத்தின் முடிவு. டில்லி ஒப்பந்தமொன்று மலைநாட்டு மக்களில் 85 சத விகிதம் பேரை நாடற்றவர்களாக்கியது. இது முதற் கட்டம். அவர்களை இந்தியப் பிரஜைகளாக்கப் பாரதப் பிரதமருடன் விரைவில் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளவிருப்பது இரண்டாவது கட்டம். (இதற்கான ஒரு சதித்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை சுதந்திரன் 20-5-62 ம் திகதி இதழ் அம்பலப்படுத்தியுள்ளது) பின்னர் அவர்களை நாடுகடத்திவிட்டுத் தோட்டங்களில் சிங்களவர்களைக் கொண்டுபோய் குவிப்பது மூன்றாவது கட்டம். இவ்வாறு மலைநாட்டுத் தமிழர்களை ஒழித்துக் கட்டும் திட்டம் மூன்று கட்டங்களில் பூர்த்தியாகவிருக்கிறது. மலைநாட்டுத் தமிழர்கள் ஒழிக்கப்பட்டால் இலங்கையில தமிழ் பேசும் மக்களின் தொகை சரி பாதியாகக் குறைந்துவிடும். அதன் விளைவு அவர்களின் வலிமையும் சரி பாதியாகக் குறைந்து போவதுதான்.

இந்த இன ஒழிப்பு நடவடிக்கையைத் தமிழ் பேசும் மக்கள் அனுமதிக்கப் போகிறார்களா?

சிங்கள, தமிழ்த் தொழிலாளரிடையே வகுப்புத் துவேஷத்தைக் கிளறி, அவர்களை மோதவிட்டு, தொழிலாளர் ஐக்கியத்தைச் சிதைப்பதும் இம்மசோதாவின் மற்றொரு நோக்கமாகும். தொழிலாளர் அணியில் பிளவு ஏற்பட்டால் தொழிற் சங்கங்கள் வலிமை குன்றிவிடும். மலைநாட்டுத் தமிழ் மக்களிடையே இயங்கும் காங்கிரஸ் ஸ்தாபனங்களும் இதர தொழிற் சங்கங்களும் இந்த அபாயத்தை எதிர்த்து முறியடிக்க என்ன செய்யப் போகின்றன? அறிக்கைகளாலும் கண்டனப் பேச்சுகளாலும் மசோதா சட்டமாவதைத் தடை செய்துவிட முடியாது. ஆட்சியாளரிடம் காவடி தூக்குவதாலும் காரியம் சாதிக்க முடியாது. அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து மசோதாவை வாபஸ் வாங்கச் செய்ய வேண்டுமானால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதையும் உடனடியாகச் செய்ய வேண்டும்.

தோட்டத் தமிழர்கள் இந்நாட்டிலே ஒரு மாபெரும் சக்தி. தேசிய வருமானத்தின் பெரும்பகுதி அவர்களின் உழைப்பிலிருந்தே சுரண்டப்படுகிறது. அவர்களின் உழைப்பைக் கொண்டுதான் அரசாங்கம் இயங்குகிறது. நாட்டின் ஜீவநாடி தோட்டத் தொழிலாளர்களே. மலைநாட்டுத் தமிழர்கள் கிளர்ந்தெழுந்தால் எந்தச் சக்தியும் அவர்களை அடக்கிவிட முடியாது. தங்களின் வாழ்வையே அழிக்கும் இம்மசோதாவை வாபஸ் வாங்குமாறு கோரி அவர்கள் ஒருநேரடிப் போராட்டத்தை நடத்தினாலே போதுமானது.

தோட்டத் தமிழர்களின் விரல் அசையவில்லையேல் நாடு அசையாது. நாட்டின் பொருளாதாரம் படுபாதாளத்தில் வீழ்ந்து விடும். ஏற்றுமதி இறக்குமதி உட்படத் தொழில்கள், வர்த்தகம் அனைத்தும் ஸ்தம்பித்துவிடும். இலங்கையின் வெளிநாட்டு ஆஸ்தி மட மடவென்று சாய்ந்துவிடும். வீறுப்புப் பேசும் வகுப்பு வெறியர்கள் புறமுதுகிட்டோடுவார்கள்; ஆட்சியாளர்கள் கதிகலங்கி அடிபணிந்து விடுவார்கள். அரசாங்கமே சட சடவென்று சரிந்து விழும். இந்தச் சூழ்நிலையில், மசோதாவை இரவோடு இரவாக வாபஸ் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்படும். மலைநாட்டுத் தமிழ்ச் சிங்கம் வீறுகொண்டெழுந்து விட்டால் அதன் ராட்சத சக்தியின் முன்னால் அடக்குமுறைச் சட்டங்களெல்லாம் எம்மட்டு?

சக்தி வாய்ந்த அஹிம்சா ஆயுதம் மலை நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் கையில் தயாராக இருக்கிறது. இதனைத் தங்களின் நல்வாழ்வுக்கே உலை வைக்க வந்த இப்பாவிஸ மசோதா மீது பிரயோகிக்க அவர்கள் கிஞ்சித்தும் தயங்கக் கூடாது. இதில் தாமதம் என்றால் அழிவுதான். ஆபத்துச் சூழ்ந்துவரும் வேளையிலும் சோம்பிக் கிடக்காமல் காங்கிரஸ்களும் தொழிற் சங்கங்களும் விழித்தெழ வேண்டும். மசோதா சட்டமாகி விட்டால் மலைநாட்டுத் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டு விடுவார்களென்று எச்சரிக்கின்றோம்.

# உரிமையற்று வாழ்வதா? உயிரற்று வீழ்வதா?

## மூதூரின் தேர்தல் முடிவு கட்டும்

## வாக்காளர் ஒன்று பட்டால் வெம் பகைக்கு ஏது இடம்?

மூதூரின் இடைத் தேர்தல் இன்று இலங்கை மக்கள் அனைவரது கண்ணோட்டத்தையும் அபகரித்துக் கொண்டுள்ளது. நசுக்கப்படும் ஒரு சாரார் விடுதலை பெறவழி தேடுகின்றனர். நசுக்கும் முயற்சியிலீடுபட்டுள்ளோர், மென்மேலும் மற்ற இனத்தை வதைக்கின்றனர். இவ் விருசாராரும் நேரடியாக மோதும் ஓர் யுத்தகளத்தைப்போல் மூதூர் தேர்தல் களம் அமைந்திருக்கிறது. கடந்த தேர்தல்களில் தமிழர் வாக்காளர்கள் ஒற்றுமைக்கு உறுதி அளித்துள்ளனர். இம்முறையும் அவ்வழி நடப்பர் என்பது திண்ணம். தமிழ் பேசும் சமுதாயம் சுய நிர்ணய உரிமை பெற்று வாழ்வதா? அல்லது மாழ்வதா? என்பதை நிர்ணயிக்கும் ஓர் பரீட்சையாக அமைகிறது இத் தேர்தல்.

மூதூர், அனுராதபுரம், வெலிமடை ஆகிய மூன்று இடைத் தேர்தல்கள் இம் மாத முடிவிற்குள் நடைபெறவிருக்கின்றன. இத் தேர்தல்களில் இலங்கை மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்து நிற்பது மூதூர் தொகுதியே! இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் நிலையிலே இத்தேர்தல் மகத்தானதொரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் நம்பப்படுகிறது. தமிழ் மொழியை அதற்குரிய ஸ்தானத்தில் வைக்கவும், இந் நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களான இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவர்கள் சுயநிர்ணய உரிமை பெற்று, சிங்கள மக்களைப்போல் தலை நிமிர்ந்து நடக்கவும் வழி வகைகளைத் தேடி ஆராய்ந்து கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் பேசும் இனத்தை இந்நாட்டிலிருந்து ஒழித்துக் கட்டிவிட முழு முயற்சியையும் எடுத்துக் கொண்டுவரும் இன்றைய ஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நடைபெறும் ஒரு போட்டியாகும்.

### ஜீவ மரணப் போராட்டம்

அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு இனம் அடக்கு முறையைத் தகர்த்தெறிந்துவிட்டு சுதந்திரமாக வாழ விரும்புகிறது. அதே இனத்தை அடிமைப படுத்த எண்ணி, அதற்கானவற்றைச் செய்கிறது மற்றொரு இனம். இவ்விரு சாராரும் நேரடியாக மோதிப் பலப் பரீட்சை பார்க்கும் ஒரு சந்தர்ப்பம் இதுவாகும்.

எனவேதான் மூதூர் இடைத் தேர்தல் இலங்கை மக்கள் அனைவரது கவனத்தையும் கவர்ந்துள்ளது.

அனுராதபுரம்; வெலிமடை ஆகிய இரு தொகுதிகளிலும் ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களே—ஒரே மொழி பேசுவோரே போட்டியிடுவதால் அது ஒரு சிறு குடும்பச் சண்டைக்கு ஒப்பாகிறது—இரு சேவல்கள் சண்டைப் பிடிப்பதை போல.

மூதூரில் நடைபெறும் போட்டி—பூனைக்கும் எலிக்கும் நடைபெறும் ஜீவ மரணப் போராட்டம்.

### 1960-ம் ஆண்டுத் தேர்தல்கள்

1960-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் மூதூர் ஒரு இரட்டை உறுப்பினர் தெரிவு செய்யும் தொகுதியாகவிருந்தது. அதே ஆண்டில் நடைபெற்ற இரண்டு போட்டிகளிலும் தமிழரசுக்கட்சியின் அபேட்சகரான திரு. த. ஏகாம்பரம் அவர்களே அதிகப்படியான வாக்குகளைப் பெற்று முதலாவது பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

1960 மார்ச் 19-ம் திகதி நடைபெற்ற தேர்தலில் மூதூர் தொகுதியில் வாக்களித்தோர் விபரம்:—

திரு. த. ஏகாம்பரம் (இ. த. அ. கட்சி)—10685.

ஜனாப் எம். ஈ. எச். முகம்மது அலி (சுயேச்சை)—10680.

ஜனாப் ஏ. எல். அப்துல் மஜீத் (சுயேச்சை)—7540.

திரு. எஸ். பி. வீரக்கூன் (ல. சு. க.)—6748.

திரு. ஏ. எச். அல்விஸ் (யூ. என். பி.)—1488.

திரு. பி. டி. ஈ. விக்டர் பெரேரா (எம். ஈ. பி.)—1165.

திரு. ஜே. ஏ. பி. துரைநாயகம் (சுயேச்சை)—1075.

ஜனாப் ஏ. ஆர் ஏ. எம். அபூபக்கர் (எல். பி. பி.)—298

திரு. என். ரி. பி சேவியர் (சுயேச்சை)—295.

அதிகப்படி—5.

அதே வருடம் ஜூலை மாதம் 20-ம் திகதி நடைபெற்ற தேர்தல் மூதூரில் பதிவான வாக்குகளின் விபரம்.

திரு. த. ஏகாம்பரம் 13,304.

ஜனாப் ஏ எல். ஏ. மஜீது 13,247.

ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி 11,417.

திரு. எச். டி. லீலாரத்ன 7,916.

திரு. பி. டி. ஈ. விக்டர் பெரேரா 181

அதிகப்படி—57.

இவ்விரு தேர்தல்களிலும் ஒவ்வொரு வாக்காளருக்கும் இரு வாக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டன. இதன்படி மார்ச் தேர்தலில் திரு. த. ஏகாம்பரமும், ஜனாப் முகமதலியும் பிரதிநிதிகளாக வந்தனர். அத்தேர்தலில் ஏறத்தாழ 20 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். அடுத்த பொதுத்தேர்தலின் போது 3 ஆயிரம் வாக்காளர்கள் மேலதிகமாக வாக்களித்துள்ளனர்.

மார்ச் மாதத் தேர்தலின் போது மூதூரிலுள்ள சிங்கள வாக்காளர்கள் நான்கு பேர்களுக்குத் தங்கள் வாக்குகளைப் பகிர்ந்தளிக்க வேண்டியிருந்தது. இத்தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட ஜனாப் மஜீது, ஜூலை மாதத் தேர்தலில் நிற்கும் போது தந்திரமொன்றைக் கையாண்டார். முதல் தேர்தலில் தனக்குக் கிடைத்த 7540 வாக்குகளுடன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. எஸ். பி. வீரசிங்காவுக்குக் கிடைத்த 6748 வாக்குகளையும் சேர்த்துக் கணக்குப் பார்த்து, எப்படியாவது தான் பிரதிநிதியாவதற்கு வழி செய்து கொண்டார். சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டு அடுத்த தேர்தலில் வெற்றியும் கண்டார்.

### எதிர்வரும் தேர்தல்

இம்முறை நடைபெறவிருக்கின்ற தேர்தலில் வாக்காளரின் தொகை பின் வருமாறு அமைந்துள்ளது:

முஸ்லிம் வாக்காளர்கள் சுமார் 13,000.

தமிழர் வாக்காளர்கள் சுமார் 12,000.

சிங்களவர் வாக்காளர்கள் சுமார் 9,000.

முஸ்லிம், வாக்காளப் பெருமக்கள் அதிகமாக உள்ள தொகுதியாக மூதூர் இருப்பினும், கடந்த இரு தேர்தல்களிலும் தமிழரசுக் கட்சி அபேட்சகரான திரு. ஏகாம்பரம் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று முதலாவது பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். தமிழர் வாக்குகளைப் பொறுத்தவரையில் அவ்விரு தேர்தல்களிலும் கட்சியின் குறிக்கோளுக்கும், இலக்குகளுக்கும் அமைந்து கட்டுப்பாடான முறையிலும், ஒற்றுமையுடனும் ஏகோபித்து வாக்களித்துள்ள அவ்வாக்காளர்கள் நிச்சயமாக இம் முறையும் தங்கள் ஆதரவைத் தமிழரசுக் கட்சிக்கே அளிப்பார்கள் என்பது திண்ணம்.

### சுந்தரலிங்கத்தின் நிலை?

திரு. சுந்தரலிங்கம் அவர்கள் மக்கள் ஏற்கும் கொள்கைகளைக் கடைப்பிடிக்கப் போவதுமில்லை, தானாக மக்களுக்கு வழிகாட்டப் போவதுமில்லை, என்பதை தமிழ் மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். ஆகவே, தமிழர் வாக்குகளில் 10 சதவீதமான வாக்குகள் தானும் அவருக்குக் கிடைக்குமென்பது சந்தேகம் தான்.

முஸ்லிம்களின் வாக்குகள் எப்படியோ ஜனாப் முகம்மதலிக்கும், சுதந்திரக் கட்சி அபேட்சகர் ஜனாப் ஹமீதுக்கும் பிரியலாம்.

திரு. சுந்தரலிங்கம், மற்றும் சுயேச்சையாகப் போட்டியிடும் திரு. குணத்திலக்கா ஆகியோர் எந்தவகையிலும் மக்களின் கவனத்தை ஈர்க்கும் நிலையிலுள்ளார்கள் என்று சொல்வதற்கில்லை. திரு. சுந்தரலிங்கத்திற்கு அவர் ஒரு 'தமிழர்' தானே என்றோ, அல்லது படிப்பாளி பேச்சாளி என்றோ தமிழர் வாக்குகள் பிரிக்கப்படுமாயினும், அவர் நிச்சயமாக வெற்றியீட்டப் போவதில்லை. தமிழர் வாக்குகள் பிரிந்து போகும் பட்சத்தில் ஆளும் கட்சியான சுதந்திரக்கட்சியின் அபேட்சகர் ஜனாப் ஹமீது வெற்றிபெறக் கூடிய சாத்தியக் கூறுகள் தான் உண்டு.

"தமிழர் என்பதற்காகத் தமிழ் வாக்காளர்கள் அனுதாபம் காட்டுவார்கள்" என்ற எண்ணமும், ஆளும் கட்சி அபிமானிகளின் தூண்டுதலுமே தான் திரு. சுந்தர

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரின் அறிக்கை உண்மையை மறைக்கிறது

## பாரபட்சம் காட்டி பழியைச் சுமக்காதீர்

## சிறிமாவின் செனட் பேச்சுக்கு நாகநாதன் தரும் விளக்கம்

"செனெட் சபையில், 5—6—62 அன்று யாழ்ப்பாணம் பொலிஸ் ஸ்டேஷனில் நான் பொலிசாரால் தாக்கப்பட்டதையிட்டு, பிரதம மந்திரி சமர்ப்பித்துள்ள அறிக்கை எனக்குப் பேராச்சரியத்தையும், வருத்தத்தையுமே அளிக்கின்றது. அவருடைய அறிக்கையைத் தயார் செய்தவர் எவரோ அவரை நாம் பாராட்ட முடியாது அந்த அறிக்கை மிகப் பிழையானதும், உண்மையற்றதுமாகும்" இவ்வாறு டாக்டர் நாகநாதன் பிரதமரின் அறிக்கைக்குப் பதிலளிக்கு முகமாகக் கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுவதாவது:—

தமது கட்சியைச் சேர்ந்த தெனியாய எம். பி. திரு. எஸ். தகநாயக்கா சம்பந்தப்பட்ட "தெனியாய சம்பவம்" பற்றிக் குறிப்பிடுகையில், திருமதி பண்டாரநாயக்கா இச் சம்பவம்பற்றி இரு விளக்கங்கள் கிடைத்துள்ளன என்கிறார். ஆனால்; "நல்லூர் சம்பவம்" பற்றித் தனியே ஒரு விளக்கம்—வழக்கமான பொலிஸ் விளக்கம்—தான் தருகிறார், ஏதோ தானாக விசாரித்து முடிவு தெரிந்தவர் போல!

துக்கதினத்தன்று கடைகளை மூடும்படி கடைக்காரர்களை மிரட்டிய "காடையர்" ஒருவரைப் பற்றி திருமதி பண்டாரநாயக்கா குறிப்பிட்டுள்ளார். இன்று கூட இதன் உண்மையைத் திருமதி பண்டாரநாயக்கா அறிந்து கொள்ளலாம். "மிரட்டும் வேலையில் ஈடுபடும் பொழுது கைது செய்யப்பட்ட"தாகக் கூறப்படும், 'காடையர்' என்ற நாமம் சூட்டப்பட்ட ஒரு நபரைப் பற்றி பிரதமர் கூறுகிறார். அவரை அழைத்து பிரதமரே நேரில் பார்க்கட்டும், அந்தக் 'காடையர்' ஓர் முதுகிழவன் என்பதையும், நாலைந்து அடி தூரத்தில் நிற்கும் பொழுது கூட அவர் பேசுவது காதில் தெளிவாக விழாத அளவுக்கு அவர் குரல் தளர்ந்துள்ளதென்பதையும் பிரதமர் காணுவார். இந்தக் கிழவனுடைய ஒரே ஒரு கெட்ட பழக்கம் என்னவெனில், அடிக்கடி குடிவகை பாவிப்பதே! ஆனால், எந்தக் கற்பனைசக்தியையும் கொண்டு, பிரதமர் அக்கிழவனைக் 'காடையர்' என்று அழைக்க முடியாது.

ஐ. ஜி. பி. "சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர்களை" (மூன்று பேர்)க் கொழும்புக்கு வருவித்து விசாரணை வைத்தே, முடிவுக்கு வந்ததாகப் பிரதமர் தமது அறிக்கையில் கூறியிருக்கிறார். நான் கொழும்பில் இருந்தேன், ஆனால் என்னை அந்த விசாரணைக்கு ஒருவரும் அழைக்கவில்லை! இந்தச் சம்பவத்துக்கு நேரடிச் சாட்சியாக விளங்கியவரும், யாழ்ப்பாணம் பொலிஸ் ஸ்டேஷனில் உடனடியாகவே தமது வாக்குமூலத்தைக் கொடுத்தவருமான திரு. வி. பத்மநாதன் கூட விசாரணைக்கு அழைக்கப்படவில்லை நான் 'ஆசனத்திலிருந்து தள்ளி" விட்டதாகக் கூறப்படும் அந்த போலிஸ் சார்ஜெண்ட் கூட விசாரணைக்கு வருவிக்கப்படவில்லை இந்தக் கேலிக் கூத்தான விசாரணையின் முடிவுகளின் அடிப்படையில்தான், ஒன்றுமே அறியாத அப்பாவிப்' பிரதமர் செனெட் சபையில் தமது அறிக்கையை வாசிக்கத் தூண்டப்பட்டுள்ளார்.

"என்னைப் பொலிஸ் ஸ்டேஷனிலிருந்து அகற்றி விடும்" படி சப்-இன்ஸ்பெக்டர் பெரேராவுக்கு எக்காரணமுமின்றி நான் சவால் விடுத்ததாகப் பொலிஸார் கூறியிருப்பது அறிவுக்கு அப்பாற்பட்டதாகும். ஒரு எம். பி., பொலிஸ் ஸ்டேஷனிலிருந்து ஒரு நபரைப் பிணை எடுக்கப் போகும் சந்தர்ப்பத்தில், எக்காரணமும் இல்லாமல், அங்கிருக்கும் ஒரு வெறும் சப்-இன்ஸ்பெக்டரிடம் "பொலிஸ் ஸ்டேஷனிலிருந்து என்னைத் தூக்கி எறியுங்கள்" என்று சவால் விடுவாரா? என்பது பற்றிப் பிரதமர் சிறிதாவது சிந்தித்துப் பார்த்தாரா? ஒன்றோ அல்லது இரண்டோ சப்-இன்ஸ்பெக்டர்களை நான் சண்டைக்கு வரும்படி சவால் விடுத்ததாகப் பிரதமர் கூறியிருந்தாரேயானல், அதாவது ஓரளவு நம்பகமாகத் தொனித்திருக்கும். ஆனல், எந்தவிதமான காரணமுமின்றி, பொலிஸ் ஸ்டேஷனிலிருந்து என்னை வெளியே அகற்றிவிடும்படி சப்-இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு நான் சவால் விடுத்ததாகக் கூறுவதை நம்புவது யாராலும் முடியாத காரியமாகும். இது விஷயமாக நான் பாராளுமன்றத்தில் கூறியிருந்தது,அதன் வெளிப்படை உண்மையின் மூலம், பிரதமருக்கு எது உண்மை என்பதை விளக்கியிருக்கலாம்.

இந்த விஷயம் பற்றிசபையில் மரியாதைப் பிரசினை' கிளப்பப்பட்டு, சபாநாயகர் இன்னும் தமது முடிவை அறிவிக்கவில்லை. பிரதமரின் அறிக்கை, 'மரியாதைப் பிரச்சினை' பற்றிச் சபாநாயகர் எடுக்கும் முடிவைப் பாதிக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

## சதி வழக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனல் இடைத் தேர்தல் சமயத்திலே சதி வழக்கு விசாரணையும் ஆரம்பித்து விட்டால் கட்சிக்குப் பயன் கிடைக்குமென்று சுதந்திரக் கட்சி வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது. எனவே இம்மாதம் முடிய முன் வழக்கு தாக்கல் செய்யப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

உயர் நீதிமன்ற நீதிபதி திரு. டி. எஸ். பர்னைந்துவும் அசைஸ் கமிஷனர் திரு. ஸ்ரீஸ்கந்தராஜாவும் மற்றுமொரு நீதிபதியும் சதி வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளாக நியமிக்கப்படலாமென்று பார்வையாளர்கள் கூறுகின்றனர். இதற்கிடையே திரு ஸ்ரீஸ்கந்தராஜா உயர் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெறலாமென்று அறியப்படுகிறது.

## ரூ. 72 கோடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உதவி பூஜ்யந்தான் என்பது நிரூபணமாகியுள்ளது.

### சிங்களத்தில் பட்ஜெட்

நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இம்முறை சிங்களத்தில் பட்ஜெட் பிரசங்கத்தை நிகழ்த்த முயற்சி செய்து கொண்டிருக்கிறார். திறைசேரியில் இதற்கு முட்டுக்கட்டை போடுகிறார்களாம்.

சென்ற வருடம் தான் பட்ஜெட் பிரசங்கத்தை ஆங்கிலத்தில் நிகழ்த்தியதால் அரசாங்க எம். பிகள் அநேகர் தன்னைக் கண்டித்ததாகவும், இம்முறை சிங்களத்தில் பட்ஜெட் பிரசங்கம் நிகழ்த்துவதாக அவர்களுக்கு வாக்களித்திருப்பதாகவும் நிதி மந்திரி கூறினர்.

இவ்வருடம் ஆங்கிலத்தில் பட்ஜெட் பிரசங்கம் நிகழ்த்தினல் அது சட்டப்படி செல்லுபடியாகாதென்றும் அபிப்பிராயம் கூறப்படுகிறது. (ஆங்கிலத்தில் இயற்றப்பட்ட சட்டங்கள் செல்லுபடியாகா என்று கடந்த வாரம் சுதந்திரன் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது இங்கு குறிப்பிடத் தக்கது.)

## உரிமையற்று வாழ்வதா?...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கம் போட்டிபோட முன்வந்ததற்கான காரணங்கள். தான் வெற்றி பெறப்போவதில்லை என்பதை அவர் நன்கு அறிவார். "தன் மூக்குப் போனலும் எதிரிக்குச் சகுனப் பிழை"யாக விருந்தால் போதும் என்ற எண்ணம் அவருக்கு.

### குணத்திலகா வெளியேறுவாரா?

சிங்களவர்களின் சுமார் 9090 வாக்குகளை நம்பிக் கொண்டு திரு. ஆர். எம். குணதிலகா சுயேச்சையாகப் போட்டியிட முன்வந்துள்ளார்.

இவர் போட்டி போடுவதால், ஜனப் ஹமீதுக்கு சிங்கள வாக்குகள் எதுவும் கிடைக்காது போய்விடும். முஸ்லீம் மக்களின் வாக்குகளை மட்டும் நம்பிக் கொண்டு ஜனப் ஹமீது வெற்றி பெறுவது கடினமாகிறது. ஆகவே, திரு. குணதிலகாவை தேர்தலில் போட்டியிடாது தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சுதந்திரக் கட்சி மேலிடம் யோசித்து வருகிறது."

அண்மையில் மூதூர் தேர்தல் களம் நோக்கிச் செல்லும் மந்திரிமாரும், அரசாங்கக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் திரு. குணத்திலகாவை தேர்தல் களத்திலிருந்து பிரித்தெடுக்க முயற்சிகள் செய்யப் போகின்றனராம். அப்படிச் செய்யும் பட்சத்தில், சிங்கள வாக்காளர்களில் உள்ள சுதந்திரக் கட்சி வாக்காளர்களும், ஏனைய சிங்கள வாக்காளர்களில் ஒரு சாராரும் ஜனப் ஹமீதையே ஆதரிக்கக்கூடும்.

இத் திட்டம் வெற்றியளிக்குமேயானல், தமிழ் வாக்காளர்களின் கையில் தான் மூதூர் தேர்தலின் தலைவிதி நிர்ணயிக்கும் உரிமை தங்கி இருக்கிறது.

### கம்யூனிஸ்டுகளின் முடிவு

இந்த இடைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி அபேட்சகரையே ஆதரிப்பதென இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்துள்ளது. மூதூரில் இக் கட்சியின் வாலாட்டம் எதுவுமே இல்லாததனல் அங்கு அவர்கள் தீர்மானத்துக்கும், முடிவுக்கும் சம்பந்தமேயில்லை.

அநுராதபுரத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினர் தங்கள் தீர்மானத்துக்கு முற்றிலும் மாறுபட்டு நடக்கின்றனர். திரு. தலுவத்தைக்கே அவர்கள் முழு ஆதரவையும் அளித்து வருகின்றனர். அங்கு யூ. என். பி. அபேட்சகருக்கே இம்முறை வெற்றி கிடைக்கும் என்று கருதப்படுகிறது.

### நீறுபூத்த நெருப்பு

சத்திய வழியில் நின்று தமக்கு இழைக்கப்பட்ட துரோகங்களுக்குப் பரிகாரம் தேடும் தமிழ்பேசும் மக்களை, துப்பாக்கியைக் காட்டியும் ராணுவம், பொலிஸ் முதலான ஏவல் படைகளை அள்ளி வீசியும் அடக்கி ஒடுக்கப் பார்க்கிறது அரசாங்கம். பூச்சாண்டி காட்டி குழந்தைகளை அடக்குவது போல தமிழ் பேசும் மக்களையும் அடக்கு முறைச் சட்டங்களால் அடக்கிவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறது. தாங்கள் எடுத்த பலாத்கார நடவடிக்கைகளினல் தமிழ் பேசும் மக்கள் பயந்து ஒடுங்கிவிடவில்லை, நீறு பூத்த நெருப்புப் போல் இருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் நன்கு அறியும்.

தமிழ் பேசும் மக்கள் எந்த வகையிலும் தளர்ச்சி அடையவில்லை. இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்துச் சாடி சின்னபின்னமாக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசாளுவோருக்கு ஆணித்தரமாக எடுத்துரைக்க மூதூர் தேர்தல் ஒரு நல்ல வாய்ப்பை அளித்திருக்கிறது.

எத்தகைய கஷ்டம் வரினும் தமிழ் பேசும் சமுதாயம் தன் இன விடுதலைப் போராட்டத்தை இம்மியளவேனும் விட்டுக் கொடுக்காது என்பதை வெளிக்காட்டும் பொறுப்பு மூதூர் தொகுதி வாழ் தமிழ் பேசும் வாக்காளப் பெருமக்களின் கையிலேதான் இருக்கிறது.


**வேல் தைலம்**

**மிகச் சிறந்த சஞ்சீவி**

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வு பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்ருகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-25**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**

34, செட்டியார் தெரு,

கொழும்பு-11.





**சி. சி. சி.**

**தாவர**

**உரப்பசளைக் கலவைகள்**

அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கிறது

எமது உரப்பசளைக் கலவைகளின் உதவியால் பெருந்தொகையான நல்ல விளைச்சலைப் பெறுவதற்கு நீங்கள் திடமாக நம்பியிருக்கலாம்.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவு செய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பனி லிமிட்டெட்,

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது, அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.)

தபால் பெட்டி 33.

கொழும்பு.



மட்டக்களப்பிலேயே செழிப்பான கிராமம்தான் பெரியதுறை. அங்கே ஒரு கோயில் அக் கோயிலுக்குக் காதலர் இருவர் செல்கின்றனர்.

அது பாழடைந்த கோயில். காதலர் இருவரும் அதைப் பற்றிப் பேசிக்கொள்கின்றனர். "ஏன் இந்தக் கோவில் அழிஞ்சுது"? அவள் கேட்டாள். அவளுடைய கேள்விக்கு விடை?




மாலதி. அவள் என் காதலி. அவளும் நானும் ஒன்று. என் உயிரும் அவள் உயிரும் ஒரே உயிர். என் மூச்சும் அவள் மூச்சும் ஒரே மூச்சு. ஏன் நானே அவள்! அவளே நான்!

சைக்கிளோடு காலை ஊன்றி நின்றிருந்தேன் நான்.

"உம்..ஏறிக் கொள்" என்றேன்.

"ம் கூம். நான் மாட்டேன். பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்?" என்ருள் ஒரு விதமாக.

"அவர்கள் நினைத்தால் நமக்கென்ன?"

"ஊர்முனை மறையட்டும். அதுவரை..."

"நடக்கப் போகிருய்? எனக்கென்ன!..."

அவள் நடந்தாள். நான் ஊர்ந்தேன். அந்த ஊர்முனை கழிந்தது.

முன்னுக அவளே ஏறியமர்ந்தாள். என் முகம் அவள் தோளில் பதிந்தது. கால் பெடலிலே பதிந்தது.

காற்று, அவள் தாவணியை அள்ளியள்ளி என் முகத்திலே வீசியது. அவள் கூந்தல் என் நெற்றியைத் தொட்டுத் தொட்டு விளையாடியது. அந்த மலர் வாசம் மூக்கிலே, புகுந்து புகுந்து மணத்தது.

ஏதோ ஒரு சினிமாப் பாட்டை அவள் இதழ் முணு முணுத்தது.

"பயமாயிருக்கிறதத்தான். வேகமாக ஓடாதீர்கள்" என்ருள் நடுங்கியபடி. நான் சிரித்தேன். அவள் கன்னமும் சிவந்து சிவந்து சிரித்தது.

நமது வாழ்க்கை யோட்டமும் இப்படித்தாஞ? ஏன்? எல்லா மனிதர்களும் இப்படி அவசரமாகத்தான் ஓடுகிருர்கள்: அவசரமாகவே அந்த ஓட்டமும் முடிந்து விடுகிறது. இதை நினைத்துத்தான் அவள் சொன்ஞளா?

"நிறுத்துங்கள்!" அவள் கூச்சலிட்டாள். 'கிறீச்ஸ்' என்றபடி பதட்டத்தோடு நின்றது சைக்கிள். அவள் முகத்தைப் பார்த்தேன். அவள் சிரித்தாள்.

"நான் கூச்சல் போட்டிரா விட்டால் நிறுத்தியிருக்கவே மாட்டீர்கள்!... ஏன் என்னைப் பார்க்கிறீர்கள்? அங்கே பாருங்கள். அதுதானே நீங்கள் சொன்ன பாழடைந்த கோயில்?"

"ஆமாம், அடடே! பெரியதுரைக்கே வந்துவிட்டோமே! நீ சைக்கிளிலிருந்ததால்......"

"கண் பண்ணே தெரியவில்லையாக்கும், நல்லகாலம்,"

நான் பேசவில்லை. 'சைக்கிளை'ப் பணையோரமாக நிறுத்திவிட்டு அவளோடு நடந்தேன்.

"மாலதி!"

"உ...ம்....?"

"இந்தப் பாழடைந்த கோயில் என்ன சொல்கிறது?"

அவள் பேசாமல் நடந்தாள்.

இடிந்த சுவர்களை வைத்து மரமும் செடியும் கூடாரமாக மண்டிக் கிடந்தன. அத்தனையும் முட் புதர்கள். சூரைக்காடு.

'அம்மாடியோவ். இந்தக் காவோலைக்குள்ளே மலைப் பாம்பு கூடப் படுக்குமே!" அவளுக்குக் கால் தூக்கி வைக்கவே நடுக்கம்.

"வந்த நாம் இந்தக் கிணற்றையாவது பார்க்காமல் போவதா?......

கிணற்றை எட்டிப் பார்ப்பதற்குள்ளே போதும் போதுமென்ருய் விட்டது.

"அத்தான்! தண்ணி கூடக் கிடக்கிறதத்தான்!" குழந்தையைப் போல அவளுக்கு வியப்பு!



"எங்கே போறீங்க? இந்தக் காட்டுக்குள்ளே என்ஞல் வர முடியாது." என்ருள் நடையைத் தளர்த்தியபடியே.

"நான் வழி காட்டுகிறேன் நீ வா" என்று அவள் கையைப் பிடித்தே இழுத்துச் சென்றேன். சூரைக் கொடிகள், விலக்க விலக்க, வளைந்து வளைந்து எங்களுக்குத் தூண்டில் போட்டன.

"ஆ! ஐயோ!" அலறிஞள். பயந்தே விட்டேன். பாவம்; அவள் பின்னலையும் தாவணியையும் விடேன் என்று பிடித்திழுத்தது சூரைச் செடி. போதாக் குறைக்கு, காவடிக்குச் 'செடில்'க் குத்துவார்களே! அப்படி, அவள் காதில் கொழுவி இழுத்தது ஒரு முள். இரத்தம் கசிந்தது.

ஒரு வழியாகப் புகுந்து புறப்பட்டு அந்தக் குட்டிச் சுவரையடைந்தோம்.

சுவரா அது? கிணறு போலிருக்கிறதே.

"பார்த்தாயா! தங்க விக்கிரகங்கள் கூட இதுக்குள்ள கிடக்குதாம்!..."

"அப்படியென்ருல், ஏன் இந்தக் கோயில் அழிஞ்சுது?" அவள் கேட்டாள்.

நான் எதைச் சொல்ல? ஊரார் எதையெதையோ பேசிக்கொள்கிருர்களே! அதைச் சொல்வதா?

கிணற்றினுள் என் முகம் தெரிந்தது. அவள் முகமும் தெரிந்தது.

அமைதியாக மிதந்து கொண்டிருந்த தவளையொன்று, "கர்ர்ச்" என்றவாறே பாய்ந்தது. நீர் துளும்பியது. அலையலையான வட்டங்கள்! எங்கள் பிம்பம் கலங்கி மறைந்தது. அந்த வட்டங்கள் என் கற்பனையலைகளைச் சுண்டி விட்டு நெழிந்தன. அந்தக் கிணறு கதைத்தது. அதை அவளுக்குச் சொன்னேன்.

"ஏன் இந்தக் கோயில் அழிஞ்சுது?"

போர்த்துக்கீசர்கள் மாத்திரமல்ல, டச்சுக் காரர்கள் கூட மட்டக்களப்பைக் கைப்பற்றியதும் வாவியின் மூலை முடுக்குகளைத் துழாவினுர்கள். பயன்படுத்தக் கூடிய இடங்களிலே சிறு சிறு துறைகளை அமைத்தார்கள். இப்படித் திமில தீவிலே அவர்களுக்கு இரண்டு துறைகள். ஒன்று சவரிதுறை, மற்றது பெரியதுறை.

புளியந்தீவிலிருந்து சவரிதுறை மூலமாக திமில தீவினுள் நுழைந்து, பெரியதுறை மூலமாக மாந்தீவு, வவுணதீவு, மகிழவெட்டுவான் முதலிய இடங்களைத் தொடர்பு கொண்டார்கள். படகுகள் மூலமாக, வியாபாரமும், பொருள் கூலிப்பும் நடந்தன. தூணடியிலே இன்றும் நிமிர்ந்து நிற்கும் அந்தப் பழைய தூண் அன்று படகுகளுக்குத் திசைகாட்டும் வெளிச்சக் கம்பமாகவும், மட்டக்களப்புக் கோட்டையோடு ஏதோ ஒரு தொடர்புக் கோபுரமாகவும் விளங்கியது.

பெரியதுறை ஒரு துறைமுகக் கிராமம் அவர்களின் கொடி அங்கே பறந்தது. கொடிக் கம்பங்கள் நட்ட அடித்தளங்கள் இன்றும் அங்கு அழியவில்லை. திமில தீவிலேயே செழிப்பான கிராமம் பெரியதுறை. செல்வம் படைத்த பலர் வாழ்ந்த கிராமம்

தென்னையும் கமுகும் செழிப்பான மாஞ்சோலையும் நிறைந்த கிராமம், கன்னல் கரும்பும் கனி தரும் வாழையும் விளைந்த கிராமம்.

அங்கே ஒரு கோயில்.

சித்திரவேலர் அதன் சொந்தக்காரர்.—செல்வந்தர். பூசாரி கூட அவர்தான்.

ஆமாம் கோயிலுக்குக் கூட, "சித்திர வேலாயுத சுவாமி கோயில்" என்ற பெயர்தான்.

டச்சுக்காரரின் ஆட்சி குன்றி, ஆங்கிலேயர் புகுந்த புதிய நாட்களும் மறைநத நடு நாட்கள் அவை.

வருடா வருடம் திருவிழா!

அன்றும் திருவிழா! சாமானியமான திருவ்ழாவா? சித்திரவேலரின் திருவிழா!

"பெரியதுறை சித்திர வேலாயுதசாமி கோயிலிலே, இரவைக்குத் தேவடியாள் கை காட்டுகிருளாம்" ஊரெல்லாம் 'டொம்' என்ற இதே பேச்சு!

"யாழ்ப்பாணத்திலேயிருந்து வத்தையிலே வந்திறங்கியிருக்கிருள்." ஊரார் வாய்க்கெல்லாம் இந்தப் பேச்சுதான் அன்று திரும்பத் திரும்பப் புரண்ட அவல். சர்க்கரையும் தேங்காயும் கலந்த ஊறவைக்காத அவல். அது பல்லில்லாதவர்களுக்குக் கூட இனித்தது.

சனக் கும்பல்—திரளான, எள்விழாத கும்பல்!

அவள் வந்தாள். தேவ—அடியாள் வந்தாள் அன்னம் போல வந்தாள.

மயில்போல ஒயிலாக, மான்போல பார்த்தாள். தோகை விரித்து ஆடிஞள்.

முகிலைக் கண்ட மயில்; முருகனைக் கண்டு ஆடியது. அந்த ஆட்டம்! ஆகா! உலகமே ஆடியது.

குயில் போல பாடிஞள். வையகமே மெய் மறந்தது.

கந்தன்; முருகன்;-அந்த வடிவேலன்! அவனைத் தேடிஞள் அவள்; அவனுக்காகவே ஆடிஞள். இறைவனுக்கன்றி, வேறு எவருக்குமே பாதம் தூக்கி ஆடாத அடியாள்—தேவ அடியாள்!

சித்திரவேலர் நினைத்தார்; தனக்கே அவள் ஆடியதாக. புதினம் பார்க்க வந்த வெள்ளைத்துரை கூட நினைத்தான்;

(11-ம் பக்கம் பார்க்க)

**ஏஜண்டுகள் தேவை**

| | |
|---|---|
| தெல்தொட்டை | கல்லேல்ல |
| கொட்மலை | நிவித்திகலை |
| விந்துல | காவத்தை |
| வெளிமடை | மூதூர் |

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாகி,
"சுதந்திரன்"
த. பெ. இல. 1183
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.

**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ANANDA MEDICAL HALL TRADE MARK 174, SEA STREET, COLOMBO

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லால் எழுதிஞல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய இனங்களுக்குச் சுயநிர்ணய உரிமை

## ருஷ்ய அரசியல் அமைப்பின் அடிப்படை அம்சம்

## இலங்கைக் கம்யூனிஸ்ட்டுகள் புரிந்து கொள்வார்களா?

**இருதலைக் கொள்ளி எறும்புகள் போல் தத்தளித்துக் கொண்டிருக்கும் இலங்கை பொது உடமைக் கட்சியினரின் கொள்கைகளுக்கும், ருஷ்யாவின் கொள்கைகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை கடந்த 3-6-62 சுதந்திரன் இதழில் ஆசிரியர் தெளிவாக எடுத்துக் கூறி விளக்கினார். அக்கட்டுரையின் தொடர்ச்சி தொடர்ந்து பிரசுரமாகிறது. இக் கட்டுரையில் இலங்கை ஆட்சியினர் தமிழ் பேசும் சமுதாயத்தைச் சீர்குலைத்துச் சின்னாபின்னமாக்க எடுத்துக்கொண்டு வரும் முயற்சிகளுக்கு சவுக்கடி கொடுக்கிறார் ஆசிரியர் கபூர்.**

**கே. எஸ். ஏ. கபூர்**

தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தைக் கிண்டல் செய்து கேலி பண்ணிக் கொண்டிருக்கும் இருதலைக் கொள்ளியான இலங்கை கம்யூனிச வாதிகள் அடக்கப்பட்ட ஒரு தேசிய இனததின் இன எழுச்சியைத் தடை செய்ய சூழ்ச்சி செய்யும் முன், தம் பெருமைக் குரிய சோவியத் யூனியனின் இன்றைய விழுமிய நிலையினைத் தெரிந்து—பழைய ரஷ்யாவின் ஏகாதிபத்திய வெறியினையும்—அது தொடர்ந்து கையாண்டு வந்த அடக்கு முறைகளையும் திரும்பிப் பார்த்துத் திருந்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் எத்தகைய ஓர் தவறான வழியை நாம் கடைப் பிடிப்பதின் மூலம் ஒரு தேசிய இனத்தையும், ரஷ்யாவின் அரசியல்அமைப்பையும் மறைத்துஏமாற்றித் துரோகம் செய்து கொண்டிருக்கின்றோம் என்பதை உணர முடியும்.

### அன்றைய ரஷ்ய ஏகாதிபத்தியம்

கடந்த பதினாறாம் நூற்றாண்டு தொடக்கம் ரஷ்யாவை ஒரு ஏகாதிபத்திய பீடமாக்க ஈவான்களும், மகா பீட்டர்களும், காத்தரைன்களும், அலக்ஸாண்டர்களும், கடைசியாக நிக்கோலஸ்களும் எப்படி எப்படி எல்லாம் காட்டு மிராண்டித் தனமான கைங்கரியத்தைச் செய்து வந்தார்கள் என்பதை வரலாறுகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. காசாக்குகள், தார்த்தார்கள், உக்ரைனியர்கள் மாஸ்கோவிட்டுகள், எஸ்தோனியர்கள், வித்துவேனியர்கள் போன்ற பல்வேறுபட்ட இனமக்கள் கதம்பமாக வாழ்ந்து வந்ததே அன்றைய ரஷ்யாவாக இருந்து வந்தது. இப்படிப் பல்வேறு இன மக்கள் வாழ்ந்து வந்த ரஷ்யாவை ஒரு சட்டம்—ஒரே மொழி—ஒரே மதம் என்ற நிலையில் அதை ஓர் சாம்ராஜ்யமாக்க அவ்வப்போது பல மன்னர்கள் இடைவிடாது முயன்று வந்திருக்கின்றார்கள்.

போலந்தை ரஷ்ய மயமாக்கும் திட்டம் மிகத் தீவிரமாக நடைபெற்று வந்தது. பாடசாலைகளில் எல்லாம் போலந்து மாணவர்களுக்கு ரஷ்ய மொழியிலேயே கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. போலிஷ் இலக்கியமும்—மொழியும் போலந்தியர்களுக்கே ரஷ்ய மொழியில் தான் சொல்லிக்கொடுக்கப்பட்டன. இவர்களுக்கு அரசாங்க உத்தியோகங்கள் கிடையாது. போலந்தியர்கள் விற்பனை செய்ய விரும்பிய தம் சொத்துக்களை ரஷ்யர்களுக்கு மட்டும் தான் விற்க வேண்டும் என்று சட்டமே இயற்றப்பட்டிருந்தது. அதேபோல் வித்துவேனியாவிலும், உக்ரைனிலும் மதச் சாயம் பூசப்பட்டு ரஷ்ய மயமாக்கிவிட பல நடவடிக்கைகள்தொடர்ந்து எடுக்கப்பட்டன.

### பல மொழிகள் சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டன

அங்கு வாழ்ந்து வந்த கத்தோலிக்க மக்கள் செய்து கொள்ளும் திருமணங்கள்—அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் எதுவும் சட்டபூர்வமானது என்று அங்கீகரிக்கப்படவில்லை. உக்ரைனிய மொழி எழுதுவதோ—அச்சிடுவதோ நேரடியாகத் தடைசெய்யப்பட்டிருந்தன. அம்மொழியிலுள்ள பாட்டுக்கள்—நாடகங்கள் எல்லாம் தடைசெய்யப்பட்டு விட்டன. பழைய ரஷ்யாவின் அடக்கு முறைகளையும்—ஏகாதிபத்திய வெறியினையும் எடுத்துக் காட்டும் சிறு உதாரணங்களே இது. இச் சாம்ராஜ்யத்தில் ரஷ்யர்களும்—ரஷ்ய மொழியும் ஆதிக்கம் செலுத்த, பிற தேசிய இனங்களும்—அவைகளின் மொழியும் சார் மன்னனால் துணிந்து பலி பீடத்திற்கு அனுப்பப்பட்டன. இதே போல் தொழில் துறைகளிலும் பிற தேசிய இனங்கள் வஞ்சிக்கப்பட்டு வேலையில்லாத் திண்டாட்டங்களை மலைபோல் வளர்த்து விட்டனர்.

### தேசியப் பிரச்னையில் லெனின் உற்பத்தி

ரஷ்ய சாம்ராஜ்யம் ரஷ்யர்களை வாழ்த்தியும்—பிற தேசிய இனங்களை வாட வைக்கவுமே உதவியது. இப் பயங்கரமான நிலைகள்தான் பொதுவுடமைத் தந்தை லெனினை உற்பத்தி செய்வதற்கு மூலகாரணமாக அமைந்தன என்பதை ஈழத்து கம்யூனிச வாதிகளாலும் கூட மறுக்க முடியாது. ஏழு கோடி ரஷ்ய மக்கள் என்ற தொகையைக் கொண்ட இந்நாட்டில் சிறுகச் சிறுக பிறநாட்டு மக்களும்—தேசிய இனங்களும் அமுக்கப்பட்டனர். இக் கொடிய கொடூரங்களைப் போல்சுவிக்குகள் வன்மையாகக் கண்டித்து வந்ததோடு, பிறதேசிய இனங்களுக்குப பிரிந்து போகின்ற உரிமையும்—சுய நிர்ணய ஆட்சியும் கொடுக்கப்பட வேண்டுமென்று லெனின் தலைமையில் வற்புறுத்தத் தொடங்கினர். ஆனால் ஏகாதிபத்திய வெறிகொண்டவர்கள் போல்சுவிக்குகளைத் தேசத் துரோகிகளென்று பறைசாற்றினர். என்றாலும் அதற்காக போல்சுவிக்குகள் பயந்து பதுங்கி விடாது ஒன்றை மட்டும் திட்ட வட்டமாக எடுத்துச் சொன்னார்கள்.

பிற தேசிய இனங்களுக்கு உரிமைகள் தரப்பட்டு சமத்துவமாக அவர்கள் நடத்தப்பட்டாலே தவிர, ரஷ்யாவின் அழிவை வேறு எந்த சக்தியாலும் காப்பாற்ற முடியாது என்று—

### லெனின் தலைமையில் தேசிய இனங்கள்.

அடிக்கடி இரகசியப் புரட்சிகளில் ஈடுபட்டனர். லெனினின் இத்தேசியப் புரட்சியின் வெற்றியில்தான் அமுக்கப்பட்ட தேசிய இனங்களின் உரிமைக் குரலுக்குச் சிறப்பான இடம் என்றும் இருக்கின்றது என்பதைப் பிற தேசிய இனங்களும் தெரிந்து லெனின் தலைமையில் புரட்சிப்படையில் திரண்டன. மொத்தத்தில் தோழர் லெனினின் சித்தாந்

(13-ம் பக்கம் பார்க்க)

# பாழடைந்த கோயில்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அவனுக்காகவே அவள் ஆடியதாக. அவனுக்கு அவள் எட்டாக் கனி.

ஆனால், அவருக்கோ?

"கலீர்! கலீர்!..."

"ஏ, அம்மே!..." சித்திரவேலரின் இதயத்திலே, அந்தக் கலீர்! கலீர்!......

தன்னை மறந்தாள் அவள். பரவசமானாள். கந்தனோடு ஐக்கியமாகிவிட்ட உணர்ச்சியோடு ஓடினாள் உள்ளே. மூலஸ்தானத்தை நோக்கி ஓடினாள்.

அவளைத் தொடர்ந்த அத்தனை பேரும் சித்திர வேலரின் குரலுக்குக் கட்டுப்பட்டுப் பின் வாங்கினர்.

கந்தன் பாதங்களிலே அவள் மண்டியிட்டு மயங்கிக் கிடந்தாள்!

கதவை உட்புறம் தாளிட்டுவிட்டு, வைத்த கண் வாங்காது விழுங்கினார் சித்திரவேலர்.

அந்த நிலை கலைந்து அவள் சுய உணர்வு பெற்றாள்.

சித்திரவேலரால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அந்த மிருக இச்சை கண்ணைக் குருடாக்கியது. அது? பகவானின் சந்நிதி!

நிலைமையைக் கணத்திலே புரிந்த அவள் திடுக்கிட்டாள்.

அவரிடமிருந்து இனி அவள் தப்ப முடியாது.

பின் வாங்கிப் பாயும் வேங்கையிடமிருந்து தப்பலாம். கர்ஜித்துக் குதிக்கும் சிங்கத்தை ஏமாற்றலாம். வாயைப் பிளந்து விழுங்கும் மலைப்பாம்பிடமிருந்து தப்பலாம். இந்த மனித மிருகத்திடமிருந்து தப்பமுடியாது. அவரின் ஆசைக்கு அவள் பலியாகவே வேண்டும்.-பலியாகத்தான் வேண்டும்.

கிளிக் கூண்டினுள் பூனை!

அந்தக் கிளி துடியாய்த் துடித்தது! இறக்கையொடிய அங்குமிங்கும் முட்டி மோதியது.

அவள் தாஸி தான். கந்தனைத் தவிர எந்த அழகனையும் அவள் மனதாலும் தீண்டாதவள். உடலோடு உள்ளத்தையும் எப்போதோ அவனுக்கு அர்ப்பணித்தவள். தாஸி—தேவ தாஸி. அடியாள்—தேவ அடியாள்!

வேறு வழியே கிடையாத அந்தக் கடைசி நிமிடத்திலே, அந்த உடலைக்கிடத்தி அவனோடு உயிரையே கலக்க விடத் துணிந்தாள்.

ஆசையோடு-அடங்கா ஆவலோடு, அவளைத் தாவிப் பிடித்த சித்திரவேலரின் கரங்கள் பொசுங்கின. அவர் பின் வாங்கிய அதே நிமிடம் அவள் ஆடை அணைத்தையும் தன் கொடும் நாவினால் நக்கிக்கொண்டே கொழுந்து விட்டது தீ.

ஆம்; கோயில் விளக்கிலே அவள் தன்னையே கொழுத்திக் கொண்டு விட்டாள்!

சித்திரவேலர் கல்லானார்-சிலையானார்-மரமானார்! அந்த அழகுடல் கந்தனடிக் கீழ் கரியாய்ச் சுருண்டது.

எந்த உடல் அவருக்கு இச்சையைத் தூண்டியதோ-எந்த உடல் தசைக் கோள உணர்ச்சி நரம்புகளைத் தட்டி ஆசையை வெறியாக்கியதோ; அதே உடலைக் காணவே அவரின் கண்கள் கூசின. பயத்தால் நடுங்கினார்.

வெளியே திருவிழா; உள்ளே இந்தத் திருவிளையாட்டு.

சட்டத்தின்-சமூகத்தின் கண்ணுக்கு மண் தூவி விட்டார் சித்திரவேலர். ஆனால் அவரே அமைத்த கோயிலிலும் ஆண்டவன் இருப்பதை மறந்தார். அவனின் கண்ணுக்கும் அவர் தப்பிவிடாதவராகவே நினைத்தார்.

முருகன் கோபிக்கவில்லை. அந்தப் பேதை நர்த்தகியைத் தன் திருக்கரங்களால் அணைத்தவாறே சிரித்தான். ஒரே சிரிப்புத்தான்!

சித்திரவேலர் மண்ணானார். செழிப்போடு-செல்வச் செருக்கோடு விளங்கிய பெரியதுறை மண்ணானது. குடியே இல்லாது மண்ணோடு மண்ணானது.

கோயில் கூடப் பாழடைந்து மண்ணானது.

எங்கும் ஒரே காடு. மனிதரே அணுக முடியாத பெருங்காடு. முள்ளுக் காடு!

பேச்சை நிறுத்தியது கிணறு. ஒரு பெரு மூச்சு!

கிணற்று நீரில் இப்போது சலனக் கோடுகளில்லை,

அங்கே நான். கேசம் கலைந்த அவளின் நிலா வதனம்—பெரிய வட்ட விழிகள். இவையும் கற்பனையா?

இரு துளி நீர் என் தோளை நனைத்தது!

நிமிர்ந்தேன்.

"மாலதி! என்ன இது? நீ ஏன் அழுகிறாய்? பைத்தியம்; இது வெறும் கற்பனை" என்றேன் நான்.

அவள் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"என்னவோ அத்தான்! எனக்கு இது கற்பனையாகவே தோன்றவில்லை!"

அவள் முகம் எதோ பீதியால் வெளிறிவிட்டது.

"ஆமாம்; உண்மை நிகழ்ச்சிகள் கூட ஏன் கற்பனையில் தோன்றக் கூடாது?" என்னையே நான் கேட்டேன்.

"வாருங்கள் போகலாம்."

அந்தப் பாழடைந்த கோயிலைத் திரும்பிப் பார்க்கவே அவளுக்குப் பயமாக இருந்தது. பயம்! அவளும் ஒரு பெண்தானே!





ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்

ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜ பீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன் : 2739


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியை அழித்துவிட அரசாங்கம் தவியாய்த் தவிக்கிறது

## ஒன்றுபட்டு நின்று அநீதியை ஒழித்திடுவோம்

### மூதூர் களத்தில் திரு. எஸ். ஜே. வி.

தமிழ் மொழி இங்கு வாழும் தமிழர், முஸ்லிம்கள் போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட இனத்தவர்கள் பேசும் தாய் மொழி. எனவே நமது தாய் மொழியை அழிக்க அரசாங்கம் முயன்று வருகிறது. தாய் மொழியான தமிழுக்கு நேர இருக்கும் அரசியல் ஆபத்தைத் தடுக்கத் தமிழர் மட்டும் போராட்டம் நடத்தினுல் போதாது—முஸ்லிம் பெருமக்களும் தங்கள் தாய் மொழி உரிமையை மீட்கத் தங்கள் பங்கைச் செய்ய அந்தரங்க சுத்தியுடன் முன்வரவேண்டும் என்று மூதூர் இடைத்தேர்தல் சம்பந்தமாக தம்பலகாமம் கோயில் குடியிருப்பு பெரிய மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில், ஜனுப் முகமதலி அவர்கள் தாய் மொழி ஆர்வமும் நேர்மையும் உடையவர் என்ற நம்பிக்கையின் பேரிலேயே கட்சி தமது அபேட்சகராக மூதூர்த் தொகுதி இடைத்தேர்தலில் அவரை நிறுத்தியுள்ளது. ஆனுல் முகமதலியவர்களின் வரவினுல் தமிழரசுக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த போராட்டமாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன் என்று குறிப்பிட்டார். திரு. கனகசபை கூட்டத்திற்குத் தலைமை தாங்கினுர்.

#### போராடியே திருவோம்

தமிழ் பேசும் இனத்தின் நியாயமான உரிமைப் போராட்டத்தை ராணுவ பலத்தைக்கொண்டு அடக்கி ஒடுக்கி விடலாம் என்று ஆட்சியாளர்கள் மனப்பால் குடிக்கின்றனர். உலக உரிமைப் போராட்ட வரலாற்றைப் புரட்டினுல் சுதந்திர தாகம் கொண்ட மக்களை அடக்குமுறைகள் அவதிக்குள்ளாக்கி இருப்பினும் இறுதியில் சுதந்திர வீரர்களுக்கே வெற்றி கிட்டியுள்ளது. போராடி எமது உரிமைகளை மீட்டே திருவோம். இவ்வாறு சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. நவரெத்தினம் பேசுகையில் கூறினுர்.

மொழிஉரிமை குடியுரிமை இழந்து பரிதவிக்கும் தமிழ் பேசும் மக்கள் சார்பில் இழந்த உரிமைகளை மீட்கப் போராடி வரும் தமிழரசுக் கட்சி மூதூர் இடைத்தேர்தலில் அபேட்சகராக நிறுத்தி இருக்கும் ஜனுப் முகமதலி அவர்களுக்கு ஆதரவு தேடுமுகமாக உங்கள் மத்தியில் இன்று வந்திருக்கிறேன். முகமதலி தேர்தலில் வெல்வார் என்பது எங்களுக்கு மட்டும், தெரிந்த விஷயமல்ல. தென்னிலங்கையில் உள்ள சிங்கள எம். பிக்கள் அனைவருமே நன்கு அறிந்துள்ள ஒரு விஷயமாகும்.

மூதூர் வாக்காளப் பெருமக்கள் மிகவும் விழிப்பாக இருந்து இரட்டிப்பான வாக்குகளால் கட்சி அபேட்சகரை வெற்றி பெறச் செய்து தமிழ் பேசும் மக்கள் தூங்கிக் கொண்டிருக்கவில்லை என்பதை அரசாங்கத்துக்கு உணர்த்த வேண்டும் என்று பருத்தித்துறை பிரதிநிதி திரு. ரி. துரைரெத்தினம் கூறினுர்.

ஜனுப் மசூர் மௌலானு பேசுகையில் வவுனியாப் பகுதியில் எங்கு போய்க் கேட்டாலும் சுந்தரலிங்கம் ஐயாவின் காணி என்றே சொல்கின்றனர். இரண்டு முறை வவுனியாவில் எம். பியாக இருந்ததும் இருந்தார் அங்கே உள்ள நெற்காணிகள் தோட்டங்கள் அனைத்தையும் கபளீகரம் பண்ணித் தமதாக்கிக் கொண்டார். இனி எங்கே காணி பிடிக்கும் படலத்தை ஆரம்பிக்கலாம் என்று மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தவருக்கு மூதூர் தொகுதி கிடைத்துவிட்டது. முஸ்லிம் வாக்காளர்களிடம் சுந்தரலிங்கம் ஐயாவின் பாச்சாபலிக்காது.

சிங்கள மக்களுடன் நட்புறவுடன் வாழும் சமஷ்டிக் கொள்கை நடக்க முடியாத தொன்று என்று வர்ணிக்கும் திரு. சுந்தரலிங்கம் சிங்கள மக்களிடம் இருந்து விலகிப் பிரிந்து தனித்தமிழ் நாடு அமைக்க அவர் மேற்கொள்ளவிருக்கும் வழியை மக்கள் முன் கூற வேண்டும். தனது பேரப்பிள்ளைகளைச் சிங்களம் படிப்பிக்கும் இவரா தமிழ் நாடு பெற்றுத் தரப் போகிறுர்? இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறினுர். ஜனுப் முகமதலி அவர்களும் பேசினுர்.


## ஒரு புதுமுறை சினிமாப் போட்டி?

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் விரைவில் திரையிடப் போகும் "குமுதம்" திரைப் படத்தை இலவசமாகப் பார்க்கலாம்.

## "குமுதம்"

திரைப் படப் போட்டி விரைவில் இப் பகுதியில் இடம் பெறும்.

கீழ்காணும் பத்திரத்தை கத்தரித்து பத்திரப் படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்:-

கூப்பன் இல. 1

"குமுதம்"

புது முறை சினிமாப் போட்டி

பெயர் ..........................................

முகவரி ..........................................

..........................................

..........................................


# ஒரு மொழி பேசும் இரு இன மக்கள் ஒற்றுமை விளக்க அரிய சந்தர்ப்பம்

## கிண்ணியாவில் திரு. அமிர்தலிங்கம்

தமிழ் அன்னையின் இரு விழிகளுக்கொப்பான இஸ்லாமியர்களும், தமிழர்களும் என்றென்றும் இந்நாட்டின் சகோதரர்களாக வாழவேண்டும் என்னும் கொள்கையை வற்புறுத்தவே தமிழரசுக் கட்சி மூதூரின் இடைத்தேர்தலுக்கு ஜனுப் முகம்மதலியை அபேட்சகராக நியமித்திருக்கிறது. ஒரு மொழி பேசும் இனமக்களும் நமது சந்ததியின் வருங்கால நலத்துக்காகவும், சிறப்புக்காகவும், ஒற்றுமையாக வாழ வழி செய்ய தமிழரசுக் கட்சி அபேட்சகரை அதிகமான வாக்குகளால் தெரிவுசெய்ய வேண்டும். இவ்வாறு கிண்ணியா மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சி அபேட்சகரான ஜனுப் முகம்மதலி ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் புடைசூழ மாஞ்சோலை என்ற இடத்துக்குச் சென்றுர். அங்கு பாத்தியா ஓதப்பட்டது. பின்னர் தமிழரசுத் தலைவர்கள் அனைவருக்கும் மாலை அணிவிக்கப்பட்டது. கிண்ணியா இ. ச. உபதலைவர் ஜனுப் ரி. அமத்து கூட்டத்துக்குத் தலைமை தாங்கினுர்.

சுதந்திரக் கட்சி முஸ்லீம்களுக்கு இழைத்து வரும் அநீதிகளுக்கு அளவில்லை என்பதை புள்ளிவிபரங்களோடு எடுத்துக் கூறி, தமிழரசுக் கட்சி ஒன்றே தமிழ் பேசும் முஸ்லீம்களாகிய நமக்கும் நல்ல வழிகாட்டும். ஜனுப் முகம்மதலியை ஆதரித்து முஸ்லிம் மக்களுக்கே இழிவைத் தேடித்தரும் சுதந்திரக் கட்சிக்கு உலை வைப்போமாக, என்று ஜனுப் மசூர் மௌலானு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை பேசுகையில், அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்களாயிருப்பவர்கள் மட்டுமே தான் மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்று கருதுவது பிழையென்றும், எல்லா உறுப்பினர்களும் தங்கள் தொகுதியின் தேவைகளுக்கேற்ப அரசாங்க உதவிபெற முடியும் என்றும், தான் எதிர்க்கட்சியாளனுக இருந்தும் கூட எத்தனையோ வேலைகளைச் செய்து முடித்திருப்பதாகவும் கூறினுர்.

மேடையில் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம், செனட்டர் மாணிக்கம், திரு. ரி. துரைரெத்தினம், திரு. வி என். நவரெத்தினம் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

# சந்திக்கு வந்தவை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர். குமாரசாமியை நீதி மந்திரியாக்கவேண்டுமென்று கட்சிக்குள் முன்பு ஒரு சலசலப்பு இருந்ததாம். நிதி மந்திரியான பீலிக்ஸ் இதற்கு உடந்தையாக இருந்திருக்கிருராம். ஆனுலும் "ஒரு தமிழருக்கு மந்திரிப் பதவி" அளிப்பதா? என்ற பிரச்சினையில் தான் மேற்படி லடாய் ஏற்பட்டிருந்திருக்கிறது. இது போன்ற இன்னும் அனேக சம்பவங்கள் ஞலேயே இப்போது சாம். பி. சி. பர்ஞந்துவை மறைமுகமாக, மேற்கூறிய ஆங்கிலப் பத்திரிகையின் மூலமாக திரு. பீலிக்ஸ் தாக்கி வருகிருராம்.

மேற்படி பத்திரிகை ஒரு பொதுவுடமைக் கட்சி சார்புள்ள பத்திரிகையாகும். இப்பத்திரிகைக்கு நிதி மந்திரி அவர்கள் அரசாங்கப் பணத்தில் ஒரு லட்ச ரூபாய் வரை கடன் பெற வசதிகள் செய்து கொடுத்துள்ளாராம். அரசாங்கக் கட்சிகளைச் சாடும் எவரையும் இப்பத்திரிகை கண்டிக்க முனைந்துள்ளது. பத்திரிகையில் பல பகுதிகளை மந்திரி அவர்களே எழுதுகின்றுராம்.

#### எம். பியின் வீட்டு டெலிபோனில் "டாவன்ஞ"

யாழ்ப்பாண பிரதிநிதி அல்பிரட் துரையப்பாவின் வீட்டு தொலைபேசியில் ஏதோகோளாறும். அடிக்கடி அகால வேளைகளில் "டாவன்ஞ" "டீஞ" உச்சரிப்புகள் கேட்கின்றதாம். இக்கோளாறுகளுக்குக் காரணம் என்ன என்று அறிந்த "டெலிபோன் எக்ஸ்சேஞ்ச்" சில் கடமை பார்க்கும் சில உத்தியோகத்தர்கள் திடீர் இடமாற்ற உத்தரவுச் சீட்டுக்களைப்பெற்றுத்திண்டாடிஞர்களாம். அப்பாக்குட்டி அம்மான் தொடர்ந்து பல உருசியான சம்பவங்களைக் கூறினுர். அவை விரைவில் சந்திக்கு வரும்.

#### சிங்களம் படித்தால் மட்டும் போதுமா?

பட்டம் பெற்ற ஒரு வாலிபர் கடந்த இரு வருடங்களாக உத்தியோகமின்றி யிருந்தார். சிங்களம் படித்தால் நிச்சயம் உத்தியோகம் கிடைத்துவிடும் என்று பலர் கூறவே, ஆசைப்பட்டு அவசர அவசரமாகச் சிங்களம் படித்து விட்டார். ஒரு சிங்களப் பாராளுமன்ற உறுப்பினரின் துணையுடன் காணி மந்திரி திரு. சி. பி. டி. சில்வாவைப் பேட்டி காணச் சென்றுர். பிரதிநிதி, சிங்களம் படித்த வாலிபருக்கு ஏதோ ஒரு ஆராய்ச்சித்துறையில் இருக்கும் காலி ஸ்தானத்தைக் கொடுக்கும்படி கோரினுர். பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த மந்திரி "காலியான இடத்துக்கு ஆள்தேடும் உங்க்கு, வேறு பட்டம் பெற்ற சிங்களவர் ஒருவர் கிடைக்கவில்லையா? தமிழன் ஒருவனையா கூட்டிக் கொண்டு வரவேண்டும். போய் ஒரு பௌத்த சிங்களப் பட்டதாரியைக் கூட்டிக் கொண்டுவா" என்று திருவாய் மலர்ந்தருளினுராம்.

படித்தாரே......படித்தாரே
பதவியதற்காகச் சிங்களம்
படித்தாரே......
படித்தாரே—படித்தும்
பயனில்லை
[illegible]
துடித்தாரே......

# அஹிம்சையும் தியாகமும் வழிகாட்டிகள்

## மூதூர் தமிழரசுக் கிளை அமைப்பு

தமிழரசுக் கட்சி தூய்மையான ஒரு இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகிறது. ஆரம்ப காலம் தொடக்கம், தமிழ் மொழிக்கும், தமிழ் பேசும் மக்கள் சமுதாயத்துக்கும் ஏற்பட்டு வரும் இன்னல்களைத் துடைக்க அறப்போராட்டங்கள் நடத்தி, அதனுல் எண்ணற்ற கஷ்ட நஷ்டங்களை அனுபவித்த தலைவர்கள் தமிழரசுக் கட்சியை வழிநடத்துகின்றனர். சத்திய வழியில் செல்லும் எமக்கு தூய்மையும், அஹிம்சையும், தியாகமுமே வழிகாட்டிகளாக அமையும் என்று மூதூரில் தமிழரசுக் கட்சி கிளையின் திறப்பு விழாவில் திரு. அற்புதராசா குரூஸ் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "இன விடுதலைக்காகவும், மொழி உரிமைக்காகவும் அறப் போராட்டங்களிலீடுபட்டுள்ள தமிழரசுக் கட்சியுடன் முஸ்லிம் மக்களும் தங்கள் தாய் மொழியாம் தமிழைக் காக்க தோளோடு தோள் நின்று பாடுபட்டுழைக்கும் காலம் வந்துவிட்டது. தமிழரசுக் கட்சியின் கொள்கைகள் ஈடேற ஜனுப் முகம்மதலி முன்னின்றுழைப்பார். அவரை ஆதரிப்பீர்களென்பதில் எள்ளளவும் ஐயமில்லை" என்று கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபட்டு உரிமைகோரி போரிட்ட எம்மை உருக்குலைக்கப் பார்க்காதீர்

## மூதூரில் திரு. இராசவரோதயம்

“தமிழ் பேசும் மக்கள் தம்மிடம் ஏற்பட்டிருந்த சிறு சிறு பூசல்களையெல்லாம் மறந்து ஒற்றுமைப்பட்டு, இழந்துவிட்ட உரிமைகளுக்காக சத்தியாக்கிரகம் நடத்தினர். உலகமே கண்டு அதிசயிக்கும் வண்ணம் கடந்த வருடம் எமது அறப்போராட்டம் நடைபெற்றது. அந்தவேளையில் அரசியல் அஞ்ஞாத வாசம் செய்து கொண்டிருந்த திரு. சுந்தரலிங்கம் இன்று சமாதான சகவாழ்வின்பேரால் தனித்தமிழ்நாடு கோரி மூதூர் தொகுதியில் பிரவேசம் செய்துள்ளார். அவர் மீண்டும் அஞ்ஞாதவாசம் மேற்கொள்ளும் காலம் வெகு தொலைவில் இல்லை” என்று திருமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. ந. இ. இராசவரோதயம் மூதூர் தொகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்ட மொன்றில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:—

“சிறிமாவின் அரசாங்கம் மூதூர்த் தொகுதியில் பிரித்தாளும் தந்திரத்தைக் கடைப்பிடிப்பதாகக் குற்றஞ்சாட்டும் திரு. சுந்தரலிங்கம், தானே அந்தப் பிரித்தாளும் தந்திரத்திற்குப் பலியாகி விட்டாரே! இதை அவர் உணரவில்லையே தமிழ் பேசும் மக்களின் மாபெரும் கட்சியான தமிழரசுக்கட்சி, தமிழ் பேசும் மக்களை ஏமாற்றுவதன் மூலம் மூதூர் தொகுதியில் வெற்றிபெற முயற்சிக்கின்றது என்று குற்றஞ்சாட்டும் திரு. சுந்தரர், டொனமூர் காலத்திலிருந்து தமிழ்பேசும் மக்களைக் காட்டிக் கொடுக்கும் தொண்டைச் செய்து வந்துள்ளார் என்பதை அவர் மறந்துவிட்டாரா? சர்வசிங்கள மந்திரிசபை அந்தக்காலத்தில் ஏற்படுவதற்கு தானே காரணகர்த்தர் எனப் பெருமை பேசியதை மறந்துவிட்டாரா? பின்பு பாராளுமன்றத்தில் எத்தனையோ தடவை தான் செய்த இமாலயத் தவறுகளினால்தான் தமிழர்களுக்கு இன்றைய அவலநிலை ஏற்பட்டது என்று ஒப்புக் கொண்டுள்ளார். இப்படிப்பட்டவர் தான் இன்று மூதூர் தொகுதியில் தமிழ் பேசும் மக்களை தமிழரசுக் கட்சி ஏமாற்றுகின்றது என்று கூறுகிறார்.

“தமிழரசுக்கட்சி கடந்த 14 வருடங்களாக இயங்கி வருகின்றது. இந்த நீண்ட காலத்தில் தனிப்பட்ட தமிழர்கள் ஸ்தாபனமாக விளங்கவில்லை எமது கட்சி. தமிழ்பேசும் மக்களின் ஜீவாதார உரிமைகளைப் பெறப் பாடுபடும் எமதுகட்சி என்றும் தமிழ் பேசும் மக்களை ஏமாற்றவில்லை. இன்றும் ஏமாற்றவில்லை. என்றுமே ஏமாற்றப் போவதுமில்லை.

### தனித் தமிழ் நாடு கோருகிறார்

தமிழ்பேசும் மக்களின் மொழி உரிமைக்கும் பிரதேச உரிமைக்கும் ஆக 1961ம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகக் காலங்களில் அரசியல் அஞ்ஞாதவாசம் நடத்திய திரு. சுந்தரலிங்கம் இன்று ‘சமாதான சகவாழ்வின்பேரால் தனித்தமிழ் நாடு கோருகின்றார். பிரிவினையற்ற முறையில் இரு பெரும் இனங்களை ஒன்று சேர்த்து நாட்டைச் சமாதான சூழ்நிலையில் வழிநடத்திச் செல்லக்கூடிய ஒரே ஆட்சியான கூட்டாட்சியை உதறும் சிங்கள அரசியலார் திரு. சுந்தரலிங்கத்தின் தனித்தமிழ்நாட்டை அடைவதற்கு உடந்தையாவர்களா?

தமிழரசுக் கட்சியின் ஆயுதம் அஹிம்சை. அகில உலகையும் அதிரவைக்கும் சக்தி வாய்ந்தது அஹிம்சை. இந்த அஹிம்சை நெறியை அணுஅணுவாகக் கண்டிக்கும் திரு. சுந்தரலிங்கம் வவுனியாவைக்கைவிட்டு மூதூர் நகரில் வந்து தமிழர், முஸ்லிம் என்ற பேதத்தை வளர்ப்பது அவரின் கூரிய அறிவிற்கு ஏற்றதல்ல அடிப்படை மனித உரிமைச் சாசனம் பற்றி பேசும் அவர் ஏனோ தனது பேரப்பிள்ளைகளுக்கு சிங்களம் கற்பிக்கின்றார். தமிழ்மக்களை சிங்களம் படிக்கும்படி வேண்டுவது அவரின் தனித்தமிழ் நாட்டின் கோரிக்கைக்கு ஒத்து வராதே!

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களை தமிழரசுக் கட்சி நடத்திச் செல்லும் வழிவகைகள் கஷ்டத்தைக் கொடுக்கலாம். வாய் வேதாந்தம் பேசி எந்த ஒரு நாடும், இனமும் சுதந்திரமடைய முடியாது. திரு. சுந்தரலிங்கம் அவர்களே! வீணாக தமிழ் பேசும் மக்களை பிளவுபடுத்தாதீர். பிளவு படுத்த வேண்டும் என எண்ணுவீராயின், ஆனி 28ல் மூதூர் வாக்காளர்கள் உங்களுக்கு ஓர் நல்லபாடம் கற்பிப்பர்”

## மூதூரில்:- தமிழரசுத் தலைவர்களைக் காண திரண்டு வந்த மக்கள் கூட்டம்

### முகமதலிக்கு முழுக்க முழுக்க ஆதரவு

கடந்த வார இறுதியில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மூதூர் தொகுதியின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று, கட்சியின் அபேட்சகரான ஜனாப் எம். ஈ. எச். முகம்மது அலியை ஆதரித்துப்பிரசாரம் செய்தனர். சூறாவளிபோல் நடைபெற்ற அப்பிரசாரக் கூட்டங்கள் யாவற்றிலும் தெரிந்துகொண்ட உண்மை: மூதூரின் உபதேர்தலில் முகம்மது அலி அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டுவார் என்பதே.

தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் எஸ். ஜே வி. செல்வநாயகம், என். ஆர். இராசவரோதயம், எஸ்.எம். இராசமாணிக்கம், அ அமிர்தலிங்கம், ரி. துரைரெத்தினம், செ. இராசதுரை, வி. என். நவரெத்தினம், பொ. மாணிக்கவாசகர், மற்றும் ஜனாப் மசூர் மௌலானா, செனட்டர் மு. மாணிக்கம் ஆகிய தலைவர்களுடன், அபேட்சகர் ஜனாப் முகம்மதலி ஆகியோரைக்கொண்ட கோஷ்டி மூன்று நாட்களில் ஆலங்கேணி, கிண்ணியா, தம்பலகாமம், ஈச்சிலம்பத்தை, கிளிவெட்டி, மல்லிகைத் தீவு, தோப்பூர், பள்ளிக்குடியிருப்பு, கூனித்தீவு, சம்பூர், சேனையூர், மூதூர் ஆகிய 12 ஊர்களிலும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பங்குபற்றியது

தலைவர்களை வரவேற்பதில் மக்கள் காட்டிய ஆர்வமும் அதனால் ஏற்பட்ட உற்சாகமும், தமிழரசுக் கட்சியின் கொள்கைகளில் மக்களுக்குள்ள நம்பிக்கை சற்றும் குறைந்து விடவில்லை என்பதைவெளிக்காட்டிற்று.

தமிழுரிமைக்காகப் போராடித் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தலைவர்களை ஒரே சமயததில் கண்டதும் தமிழ் பேசும் மக்கள் இதயமெலாம் உணர்ச்சிப் பெருக்கால் பூரித்தன. போட்டிபோட்டுக்கொண்டு பூமாலைகளைப் போட்டனர். ‘தமிழரசு வெல்க, தமிழ் மொழி வாழ்க’ என எழுப்பப்பட்ட கோஷங்கள் வானில் இடித்த இடியென முழங்கின.

பிரசாரக் கூட்டங்களுக்கு இஸ்லாமிய, கிறிஸ்தவ, இந்துப் பொதுமக்கள் திரளாக வந்திருந்தனர். பட்டாசுகளையும் கொளுத்தி தங்கள் ஆனந்த ஆரவாரத்தையும் வெளிக்காட்டினர்.

மூதூரின் மூத்தவனாய், முன்னோடும் வீரனாய் அறப்போரில் குதித்து அரும்பணி புரிகையில் அகால மரணமடைந்த திரு. ஏகாம்பரத்தின் வாரிசாக ஜனாப் முகமதலியை தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்பதற்கு ஐயம் சிறிதேனுமில்லை.

## தமிழகத்தின்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இயற்கை நறுமணத்தைப் பெறுகிறது. காப்பிக் கொட்டைபோன்ற சில பொருள்களை வெப்பப் படுத்தி வறுத்தால் இயற்கையான நறுமணம் அடைவது போல் பதநீரின் வெப்பநிலை குறையும் பொழுது, விரும்பிக் குடிக்கும் ஓர் நறுமணத்தை அடைகிறது; மக்களும் விரும்பிக் குடிக்கின்றனர்.

4. இப்படிப் பதநீரைப் பாதுகாப்பதால், பதநீரில் உள்ள உணவு, ஜீவ சத்துக்கள் யாவும் குறைவதில்லை.

## எந்த நிலையிலும் சிங்களம் படிப்பதில்லை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

(vi) வாழ்க்கைச் செலவு முடிவின்றி உயர்ந்துகொண்டிருக்கையில் வாழ்க்கைச் செலவுப் படி 1951ம் ஆண்டு நிலையில்தான் இன்னும் வழங்கப்படுவதால், தேசிய அபிவிருத்தி வரி தொடர்ந்து விதிக்கப்படுவது தாங்கொணாச் சுமையாகையால், இவ்வரி உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

புதிய ஆண்டு செயற்குழுவினராகக் கீழ்க்கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்:— திரு. க. சிவானந்தசுந்தரம் (போட்டியின்றி மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்) பொதுச் செயலாளர்:— திரு. இ. பாலசுப்பிரமணியம்: (போட்டியின்றி மீண்டும் தெரிவு செய்யப் பட்டார்) கௌரவ பொருளாளர்:— திரு. சு. தர்மலிங்கம் (போட்டியின்றி மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்) துணைத்தலைவர்கள்:— திரு. ச. சித்திரவேல், :—திரு. மு: முருகுப்பிள்ளை, துணைச் செயலாளர்கள்:— திரு. இ. இராமநாதன், :—திரு. க. முருகுப்பிள்ளை, துணைப் பொருளாளர்கள்:— திரு. ஐ. இரத்தினம், :—திரு. சு. மாணிக்கசிங்கம்.

## தேசிய இனங்களுக்குச்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

தமேசார் மன்னன் ஆட்சியில் அமுக்கப்பட்ட தேசிய இனங்களின் அபலைக் குரலில் இருந்துதான் பிறந்தது என்பதைக் கம்யூனிச வரலாறு தெரிந்தவர்களால் மறுக்கவே முடியாது.

### இன எழுச்சிக்குப் பின்பே பொதுவுடமை

எனவே தேசிய இனங்களின் உரிமை வேட்கைதான் பாட்டாளி வர்க்கத்தின் பரிதாபங்களை எடுத்துக் காட்டக் கருவாக அமைந்தது என்ற உண்மையைச் சொன்னதும் ஈழத்துப் பொதுவுடமைவாதிகளுக்குக் கசப்பாகவே இருக்கும். என்ன செய்வது, உண்மையும் அப்படித்தான். எனவே தான் சொல்கின்றேன் முதலில் தமிழ் தேசியத்திற்கு விடுதலை—அடுத்தே பொருளாதாரத்தைப் பற்றிய சிந்தனை என்று—

### தேசிய இனத்தின் எழுச்சி ஏகாதிபத்திய வீழ்ச்சி

பெப்ரவரிப் புரட்சி தோல்வி கண்டு நவம்பர் புரட்சி வெற்றி தேடித் தருவதற்கிடையிலுள்ள அந்த சிறு காலத்திற்குள்ளேயே அமுக்கப்பட்ட தேசிய இனங்கள் தம் சுதந்திரத் தாகத்தை மெல்ல மெல்ல வெளிப்படுத்தத் தொடங்கி விட்டன. உக்ரைனியர்கள் கீவ் என்ற நகரில் ஏப்ரல் திங்களில் கூடி உக்ரைன் தன்னாட்சி பெறவேண்டுமென்று வற்புறுத்தியது போல், எஸ்தோனியர்கள் ரேவல் நகரில் ஜுலையில் கூடி ஓர் தற்காலிக அரசையே நிறுவிக் கொண்டனர். அதேபோன்று லத்வியா தேசிய இனமும் ரீகா நகரில் ஆகஸ்ட் திங்களில் கூடி தன் தன்னாட்சிப்பற்றைத் தெரிவித்துக் கொண்டது. இப்படியான தேசிய இனங்களின் எழுச்சியின் மத்தியிலேதான் லெனினின் நவம்பர் புரட்சி மகத்தான வெற்றியை ஈட்டித் தந்தது. ஆகவே தேசிய இனங்களின் எழுச்சியும்—உணர்ச்சியும் தான் பொதுவுடமைக்கு வித்து என்று சொன்னால் அதை யாராலும் மறுக்கவே முடியாது.

(தொடரும்)


எந்தச் சந்தர்ப்பத்திற்கும் எந்த இடத்திற்கும் எல்லோருக்கும் ஏற்ற சுருட்டுகள்...கனகலிங்கம்

நீங்கள் புகைக்கிறீர்களா? ஏன் புகைக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

புகை பிடிக்க வேண்டும் என்பதற்காகப் புகைக்கக் கூடாது. புகைப்பதினால் ஏற்படக்கூடிய நன்மைகளை அறிந்து புகைக்க வேண்டும். புகைப்பதினால்—சோம்பல், களைப்பு, சாப்பிட்டதும் ஏற்படக்கூடிய முட்டுத்தன்மை அகல்கிறது. இன்னும் புகைப்பிடித்தல் சோர்வைப் போக்கி, புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் தரவல்லது. ஆனால் நீங்கள் எதைப் புகைக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்.

நீங்கள் புகைப்பது சுருட்டாகவே இருக்கட்டும். வின்ஸ்டன்சர்ச்சில்போன்ற பெரியார்கள்கூட புகைப்பதுசுருட்டே. ஆகவே நீங்களும் கனகலிங்கம் லைட் சுருட்டுகளையே புகையுங்கள். கனகலிங்கம் சுருட்டுகளை புகைப்பதினால் பூர்ண திருப்தி பெறுவீர்கள்.




கனகலிங்கம் லைட் சுருட்டுகள்

தயாரிப்பாளர்கள்:

வி. கனகலிங்கம்பிள்ளை & சன்,

17, செனற் ஜோன் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்வி கற்றவனே கண்கள் பெற்றவன்


(ஏ. வர்ணன், திருமலை)

நீங்கள் ஒவ்வொருவரும் கல்வியிலே பெரியவனாக முயலவேண்டும். கல்விக்குத் தன் காலத்தைச் செலவழிப்பவன் என்றும் அழியாத புகழ் பெறுவான் என்பது திண்ணம். கல்வியே அறிவின் அபிவிருத்திக்கு ஆதாரம். கல்வி வளர வளர எங்கள் அறிவும் பிரகாசமடையும். கல்வியறிவு கைவரப்பெற்றவனே கண்கள் பெற்றவனுவான். கல்வி இல்லாதவன் முகத்தில் இரண்டு புண்களுடையவனுவன் உங்களுடைய முகத்தில் உள்ள இரண்டு கண்களுக்குப் பதிலாக இரண்டு புண்கள் இருக்குமாயின் எப்படியிருக்கும்? அப்பாடி! அதனினும் துன்பம் வேறு ஏது? கல்வியெவராலும் கவரப்படாத செல்வம்; பிறருக்குக் கொடுக்குந்தோறும் வளர்வது; நம்மை அறியாமை என்ற பெரிய படுகுழியிலிருந்து கரையேற்றும் தெப்பம் போன்றது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் தருவது. கல்வியெனும் செல்வம் படைத்தவன் என்றைக்கும் கல்விமானுகவே இருப்பான்; பொருட் செல்வம் படைத்தவர்களில் இன்று இலட்சாதிபதியாயிருப்பவர் நாளைக்குப் பிச்சைக்காரராவது பிரத்தியட்சம்.

கற்றவனுக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்புண்டாகும். அவன் வாயைத்திறந்து பேசத் தொடங்கினுல் ஆயிரம்பேர் அவனுடைய வாயைப்பார்த்துக்கொண்டு நிற்பார்கள். நிற்பதோடிராமல், "நாம் இளம் வயதில் படித்தோமில்லையே, இவ்வருமையான விஷயங்களையெல்லாமுணர" என்ற வருத்தமும் கொள்வார்கள். கல்வியறிவு கைவந்தவன் தேச சேமத்திற்குரிய அரிய பெரிய செய்கைகளைச் செய்து பெரும் புகழ் பெறுவானென்பதில் ஐயமில்லை. பலசொல்வானேன்? ஒரு பணக்காரன் செய்வதைவிட மேலான பல செய்கைகளையும் இவன் செய்வான். கல்விமானே ஈசுவரனையறியும் பரம ஞானத்தையும் பெறுவான். கல்வி கரையில்லாக்கடல், ஆனுல் மனிதனுடைய வாழ்நாட்களோ சொற்பமாகும். எனவே இளமையிலேயே கல்வி பயில வேண்டியது இன்றியமையாத கடமையெனக் கொண்டு நாள்தோறும் சோம்பலில்லாமலும் கவனத்தை வேறிடம் செலுத்தாமலும் கொஞ்சநேரமேனும் தீய நூல்களை, அதாவது, உங்களைத் தீய வழிக்கு இழுத்துக் கொண்டு போகத்தக்க நூல்களைப் படிக்காமல், நல்ல வழிக்குக் கொண்டு செல்லும் நல்ல நூல்களையே படியுங்கள். படிப்பதோடு நில்லாமல் படித்தவைகளை நன்ருய் மனத்திலே பதிய வைத்துக் கொள்ளுங்கள் அவற்றை அடிக்கடி சிந்தித்துப் பாருங்கள்.

உலகத்தில் நல்லவர்களும் பொல்லாதவர்களும் நிறைந்திருப்பதுபோல நல்லநூல்களும் தீய நூல்களும் நிறைந்திருக்கின்றன. எப்படி நல்லவர்களோடு பழகுகிறவன், நல்லவனுவானே அப்படியே நல்ல நூல்களைப் படிப்பவனும் நல்லவனுவான். ஒருபுத்தகத்தைப் படிப்பின் அது நல்லதாயிருக்கவேண்டும். அதனை ஆழ்ந்த கவனத்துடன் படித்துப்பயன் கொள்ளவேண்டும். அதில் சொல்லுகிற நீதிகளையும், நியாயங்களையும் பெரியோரது மேற்கோள்களையும் கவனித்தல் வேண்டும். கவனியாமல் சிலர் பொழுதுபோக்குக்கென்று புத்தகங்களைக் கையிலெடுத்துக்கொண்டு இங்கும் அங்கும். புரட்டித்தாள்களைத் தள்ளிவிட்டுப் படித்ததாகத் திருப்தி அடைவதுண்டு. அது நுனிப்புல் மேயும் மாட்டின் செய்கையாகுமேயன்றிப் பயன்தராது. நாவல் படிப்பவர்களில் பெரும்பான்மையர் இப்படியே படிக்கின்றனர். இதனுல் விருத்தியாம்சம் ஏற்படாதென்பதை உணர்கிருர்களில்லை. பொழுதெல்லாம் புலிக்கட்டானுடுகிறவர்கட்குப் பயனேதேனும் கிட்டுமா? அதுபோலாகுமிது.

எனவே ஊக்கத்தோடு படியுங்கள். படித்தவைகளைப் போற்றுங்கள். அப்படிப் போற்றியவைகளைச் சமயம் வந்தபோதெல்லாம் சிந்திப்பதுடன் பிறருக்குச் சொல்லி அவர்களையும் உங்கள் வழிக்குக்கொண்டுவர முயலுங்கள். தெரியாதவைகளைத் தெரிந்தவர்களிடம் போய்க் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அதற்கு வெட்கப்படாதீர்கள். ஒரு வித்துவானை அவன் மகன் "அப்பா! நீ எப்படி ஊரெல்லாம் புகழும் படியான படிப்பைப் படித்தாய்?" என்று வினவ, அவ்வித்துவான் 'நான் படிக்கும் காலத்தில் மட்டுமன்று. இப்பொழுதும் எனக்குத் தெரியாதவைகளைத் தெரிந்தவர்களிடம் போய்ச்சிறிதும் வெட்கப்படாமல் கேட்டுத் தெரிந்து கொண்டு வருகிறேன். இதனுலேதான்!" என்ருராம். ஆகையால் தெரியாதவைகளைப் பிறரிடம் கேட்க வெட்கப்படாதீர்கள். படிப்பதை வெட்கப்படுபவன் ... னுக்கு வருவது கஷ்டம்.



'கூ...கூ...' வென்று சப்தமிட்டுக்கொண்டே பாலத்தின் மீது ஓடுகின்றது ரயில் வண்டி. சிறிது தூரத்தில், சிறுவன் ஒருவன் படகோட்டிச் செல்கிருன். ஒரு வேளை புகை வண்டியுடன் போட்டியிட எண்ணுகிருனே?

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கிழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

## சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 6.

பெயர் ______________________

பாடசாலை ______________________

விலாசம் ______________________

______________________

______________________ ______________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

# வந்திடுவாய்

-அன்பு முகையதீன்-

பச்சைக் கிளியே உனைப்போல
பறவையை நான் பார்த்ததில்லை
இச்சை உன்னை வளர்ப்பதற்கே
என்னிடத்தில் வா கிளியே!

கேட்ட பழங்கள் அளித்திடுவேன்
கிட்ட வைத்துக் காத்திடுவேன்
பாட்டும் கற்றுத் தந்திடுவேன்
பறந்து வாஎன் பசுங்கிளியே!

தங்கக் கூட்டில் வைத்துன்னை
தமிழைக் கற்றுத் தந்திடுவேன்
அங்கு மிங்கும் அலையாது
அருகில் இருக்க வாகிளியே!

மழலை போன்ற உன்பேச்சை
மடியில் வைத்துக் கேட்பதற்கு
அளவே இல்லா ஆசை உண்டு
அழகுக் கிளியே வந்திடுவாய்!

# ஒழுக்கம்

(க. குணசிங்கம், சாவகச்சேரி.)

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் அது உயிரினும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவர் வாக்கு. நாம் பல நூல்களையும் கற்கும் பருவம் மாணவப்பருவம். நாம் கற்க வேண்டியவற்றை இளமையில் கற்கவேண்டும் என்று ஒளவையார் கூறினுர்.

நாம் பரோபகாரம், வாய்மை, நன்றியறிதல், முதலான நற்கருமங்களைச் செய்யக் கற்கவேண்டும். "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்று ஆன்ருேர் கூறுகிருர்கள். நாம் நல்லவராக வருவதற்கு இளமையிலேயே விதை விதைக்க வேண்டும்.

அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை என்னும் இவை சான்ருண்மை என்னும் கட்டிடத்தைத் தாங்கும் தூண்கள் என்று வள்ளுவர் கூறியிருக்கிருர். ஆகவே இவ்வைந்து குணங்களையும் நாம் கற்க வேண்டும்.

தாயானவள் தன்மகனை ஒருவர் நல்லவன், வாய்மையுள்ளவன், நீதி உள்ளவன் என்று கூறினுல் அவனைப் பெறறபொழுது இருந்த இன்பத்திலும் பெரிய இன்பம் அடைவாள். ஆகவே நாம் எல்லோரும் இளமையிலேயே ஒழுக்கத்தைப் பேணுவோமாக. அதனுல் தாய் தந்தையருக்கும் நமக்கும் இன்பத்தைத் தேடுவோமாக.

படிப்புக்குக் காவம், 'இளமையிற்கல்' என்று ஒளவைப் பிராட்டியார் சொல்லியபடி, இளம்பருவமே சிறந்ததாதலின் இதைச் சோம்பலிலும் விளையாட்டிலும் கழித்து விடுவீர்களேயானுல் பிறகு இப்படிப்பட்ட அருமையான காலத்தை நீங்கள் எதிர்பார்க்கமுடியாது. இந்தக்காலத்தில் உங்கள் மனம் கவலையின்றியிருக்கக் கூடியது. வித்தைக்குச் சத்துரு விசன தரித்திரம் என்பது போல் படிப்புக்குக் கவலையும் தரித்திரமும் பகையாதலின் கவலைப்பட்ட மனத்திற்குப் படிப்பு நில்லாது. பெரியவர்களானபிறகு உலகவிஷயத்தில் பல கவலைகளுண்டாகும். ஆதலின் இளமையே படிப்புக்குச் சிறந்த காலம்; காலமோ உயிரின் பகுதியாகும். "காலமே கருத்தனம்" என்பதுண்டு. சென்றகாலம் மீண்டும் வராது. ஆகையால் படிப்பிலே முன்னுக்குவர இப்பொழுதே முயலுங்கள்! முயலுங்கள்! ஓயாமல் முயலுங்கள்! ஓதுவதொழியேல் என்பது ஒளவைப்பிராட்டியாகிய ஞானசிரியர்கட்டளையல்லவா?

# வாழ்க்கையில் சிக்கனம்

—பொ. மகேஸ்வரி—

ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையை வெகு உல்லாசமாக நடத்தஎண்ணுகின்ருர்கள். உல்லாச வாழ்க்கைக்குப் பொருள் அவசியம் தேவை. ஒருசிலர் திரைகடல் ஓடியும் திரவியத்தைத் தேடிக் கொள்கின்றனர். பின் அதை நல்ல முறையில் பயன் படுத்தத் தெரியாது அழிக்கின்றனர். இவற்றுக்கு முக்கியகாரணம் சிக்கனத்தைப் பற்றியறியாததேயாகும். ஒருசிலர் எப்படிச் சிக்கனமாக வாழ்க்கை நடத்துவது என்று வினவக்கூடும். அப்படியானுல் பின்வரும் விதிகளைக் கொண்டு சிக்கன வாழ்வு வாழலாம்.

எமக்குத் தேவையில்லாத பொருள்களையோ தின்பண்டங்களையோ வாங்குதல் கூடாது. நாம் ஒரு பொருளை வாங்கும் போது முதல் இது அவசியமா? இது இல்லாவிட்டால் என் வாழ்க்கையை நடாத்த முடியாதா? என்பதைக்கவனிக்க வேண்டும். அது அவசியமானதாயின் வாங்க வேண்டும். இல்லாவிட்டால், அப்பொருளின் அழகுக்காகவும், பகட்டுக்காகவும் ஆசைப்பட்டு வாங்குதல் கூடாது. அப்படி வாங்கினுல் அப்பொருளால் எமக்கு ஒரு பிரயோசனமுமில்லை எம்பணம் செலவழிவதுதான் மிச்சம்.

தருமம் செய்யும் போது அளவாகத்தான் செய்ய வேண்டும். நம் பெரியார்கள் "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" என்று கூறியிருக்கின்ருர்கள். சிக்கனமாகவாழ்ந்தால் இல்லாத காலத்திலும் இல்லை என்று வருந்தித்திரியாது எப்போதும் போல் கஷ்டமில்லாது வாழலாம். இவ்வுலகில் பணமில்லாது வாழும் ஒருவன் நடைப்பிணத்துக்குச் சமானமாவன். ஆதலால் ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

பணத்தினுல் தான் உயர்வு தாழ்வு ஏற்படுகின்றது. ஒவ்வொருவரும் பணத்தை சம்பாதித்தது போலவே செலவு செய்யவும் தெரிந்துகொள்ளுதல் அவசியம். நாம் அன்றன்று செலவு செய்யும் பணத்தை ஒரு புத்தகத்தில் எழுதி வைக்க வேண்டும். பின் அதன்படி நடந்தால் நம் வாழ்க்கையை நல்ல முறையில் பயன்படுத்த முடியும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## கவிஞர் பரமஹம்சதாசனுக்கு பிரியாவிடை

கடந்த இருபத்தைந்து வருடங்களாக மட்டக்களப்பில் வாழ்ந்து, கவிஞனுகி, தமிழ் மக்களுக்கு தேசிய கீதம் பாடி வைத்த கவிஞர் பரமஹம்சதாஸன் (சுப்புராமன்) இலங்கையின் அரசியல் சட்டத்திற்கு அடி பணிந்து இந்தியா செல்லுவதை முன்னிட்டு, மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் அளித்த பிரிவுபசார வைபவத்தில் கவிஞர் பரமஹம்சதாசன், கண்ணீர் வடித்த வண்ணம் நன்றி கூறினர்.

சங்கீத பூஷணம் என். இராஜுவின் தமிழ் மொழி வாழ்த்துப் பாடலுடன் ஆரம்பமான இவ் வைபவத்திற்கு வித்துவான் பண்டிதர் வி. சீ. கந்தையா தலைமை தாங்கிப் பேசும் பொழுது, "கவிஞர் பரமஹம்சதாஸன் இந்தியாவில் பிறந்தாலும், இந்தியாவில் அவருக்கு நன்பர்களே கிடையாது. அதே போல இந்திய மக்களுக்கும் அவர் யாரென்று தெரியாது. ஆகவே இவர் நம் நாட்டுக் கவிஞர் என்பது மட்டும் உண்மை. நம்நாட்டுக் கவிஞருக்கு நாம் பிரியாவிடை அளிக்க இங்கு கூடியிருந்தாலும் உண்மையில் நாம் அவருக்குப் பிரியாவிடை அளிக்கவில்லை, நாம் அவரைக் கௌரவிக்கவே இங்கு கூடியிருக்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை அவர்களும் உருக்கமாகப் பேசினர். மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர். எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் கவிஞர் திமிலைத்துமிலன் பிரிவுபசாரப் பத்திரம் வாசித்தளித்தார். கவிஞர் இராஜபாரதி பாமாலை சூட்டினர். மண்டூரைச் சேர்ந்த கவிஞர் சோமசுந்தரம் மிகவும் உருக்கமான பாமாலை சூட்டிய போது, சபையோா கண்ணீர் வடித்த காட்சி உள்ளத்தைத் தொட்டது. மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை உட்பட பல பிரமுகர்கள் வைபவத்திற் கலந்து பிரியாவிடை செலுத்தினர்.

---

### திருவள்ளுவர் விழா

சார்ணியா குரூப் தங்கமலைத் தோட்டத்தில் காந்தி வாசகசாலையின் சார்பாக திருக்குறளார் தலைமையில் கொண்டாடப்பட்டது. தலைவர் தமது முன்னுரையில் திருவள்ளுவரின் திருக்குறளை மறறமொழியினர் உணர்ந்த அளவுக்குத் தமிழர் உணரவில்லை என்றும் திருக்குறள் கற்காத தமிழன் உண்மையான தமிழன் இல்லை என்றும் திருவள்ளுவர் விழாவைக் கொண்டாடிஞல் மட்டும் போதாது, கற்று அதன்படி நடக்க வேண்டும் என்றும் எடுத்துக் கூறினர். மற்றும், திருவாளர்கள் எஸ். கோவிந்தன், எஸ் சிதம்பரம், ஆர். ராசு முதலானேரும் பேசினர்கள். நன்றியுரையுடன் விழா இனிது நிறைவேறியது.

---

### தமிழ் இசை மன்றம்

தமிழ் இசை மன்றத்தின் ஆண்டு நிறைவுக் கூட்டம் 3-6-62-ல் சைவ மங்கையர் கழகத்தில் நடைபெற்றது. கீழ்க் காணும் உறுப்பினர் எதிர்வரும் ஆண்டின் அலுவலராகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: திரு. நா. ப. பாலசந்திரன், துணைத் தலைவர்: திரு. பி. பத்மநாதன், செயலாளர்: திரு. க. தணிகாசலம், துணைச் செயலாளர் திரு. ந. ஜெகநாதன், பொருளாளர்: திரு. சி. சுப்பிரமணியம், துணைப் பொருளாளர்: திரு. மு. நவரத்தினராசா. செயற்குழு உறுப்பினர்: திருவாளர்கள். இ ஜெகஜோதி, க. ச. சனகசிங்கம், வே. இராசமாணிக்கம், ஆர். பொன்ராசா கணக்காய்வாளர்:- திரு. சி. மார்கண்டு.

---

### சேவை நலப் பாராட்டுவிழா

கிருலப்பனை ரோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்துக்கு மாற்றலாகிச் செல்லும் திரு. ச. கந்தையா ஆசிரியர் அவர்களது சேவையைப் பாராட்டு முகமாக, மேற்படி பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் ஒரு பாராட்டு விழா வைபவம் 31-5-62 வியாழக்கிழமை நடைபெற்றது வைபவத்திற்குத் தலைமையாசிரியர் திரு. டபிள்யூ. எவ். யே. பர்ணாந்து தலைமைவகித்துப் பேசும் போது திரு. கந்தையா அவர்களின் சேவையைப் பாராட்டிப் பேசினர். மற்றும் பல ஆசிரியர்கள் அன்னாரது சேவை நலத்தைப் பாராட்டிப் பேசினர்கள்.

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் தம்மிடம் காட்டிவந்த அன்புக்குத் தாம் என்றும் நன்றியுடையவனக இருப்பேனெனத் திரு. சந்தையா ஆசிரியர் தமது நன்றியுரையில் குறிப்பிட்டார்.

---

### நாயருக்கு அஞ்சலி

"நாட்டிலே பலப்பல தொழிற் சங்கங்களிருந்து வந்தாலும், அவைகளுக்கு பல தலைவர்களிருந்து வந்தாலும் அவைகளுக்கெல்லாம் வழிகாட்டியாகவும வழி நடத்தும் தளபதியாகவும் திரு நாயர் அவர்களிருந்து வந்தார். உழைப்பிலும் தொழிலாளர்களுக்கு விடாப்பிடியாகத் தொண்டாற்றும் விஷயத்திலும் திரு நாயர் அவர்கள் உணவு உறக்கம் ஓய்வு அத்தனையையும் மறந்து நின்றவர். அவரைப் போன்ற உண்மை உழைப்பாளியை நாட்டில் இனிக் காண்பதரிது. இந்த உண்மையை அன்று அவரது மயானப் பொதுக் கூட்டத்தில் பேசிய எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களும் உளமார ஒப்புக் கொண்டனர்"

இவ்வாறு 3-6-62 மாலை கொழும்பு ஸ்ரீ நாராயண குரு மண்டபத்தில் திரு ஹாஜா முகைதீன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற காலஞ்சென்ற கே. ஜி. எஸ். நாயர் அவர்களின் அனுதாபப் பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய ... எம். பீர்முகம்மது அவர்கள் கூறினர். இரா. அதிமணி அவர்கள் திரு நாயரின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்துவைத்தார். திரு. நாயருக்கு அனுதாபம் தெரிவித்து வேறு பலரும் பேசினர்.

---

### செந்தமிழ் வளர்ச்சி மன்றத்தின் வள்ளுவர் விழா

"தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒன்று சேர்ந்து திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடும் நாள் தூரத்தில் இல்லை. இந்த இரு சமூகத்தினரையும் ஒற்றுமையோடு வாழச் செய்வதற்குத் திருக்குறளே ஏற்ற பாலமாகும்"

கிரிலப்பனைத் தமிழ்ப்பாடசாலை மண்டபத்தில் செந்தமிழ் வளர்ச்சி மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் வரவேற்புரை நிகழ்த்திய இணைச் செயலாளர் திரு. அன்ரனி பெர்ணண்டோ மேற்கண்டவாறு கூறினர்.

கடந்த 10-6-62 ஞாயிறு நடைபெற்ற இந்த விழாவிற்கு மன்றத் தலைவர் டேவிற் இராசையா தலைமை வகித்தார். திருவாளர்கள் கந்தசாமி, அன்ரனி இராசையா அந்தோனி ஜீவா, மா. கதிர்வேலு ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

திரு. மு. இராசரத்தினம் "வள்ளுவரின இரண்டாவது பூலோகப் பிரயாணம்" என்ற தலைப்பில் கதாகாலாட்சேபம் செய்து நகைச் சுவை விருந்தளித்தார்

விழாவில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும மன்ற இணைச் செயலாளர் திரு. ஞா. சாமித்தம்பி நன்றி கூறினர்.

---

### இந்து மகளிர் மன்ற ஆதரவில் திருவள்ளுவர் விழா

மட்டக்களப்பு இந்து மகளிர் மன்ற ஆதரவில் திருவள்ளுவர் விழா, நகர மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் திரு. செ. இராசதுரை எம். பி. யும் பேசினர்.

திருமதி தையல் நாயகி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற பிரஸ்தாப விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும், மன்றச் செயலாளரான திருமதி கங்கேஸ்வரி கந்தையா சிறப்பாகச் செய்திருந்தார். செல்வி. திருநாவுக்கரசின் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலுடன் ஆரம்பமான இவ் விழாவில், திருமதி. கங்கேஸ்வரி கந்தையா வரவேற்புரை நிகழ்த்த, பேராசிரியர் சாலை இளந்திரையன், பேராசிரியை கனகசவுந்தரி இளந்திரையன் ஆகியோரும் பேசினர்.

---

### கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்கம்

கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்க அருணகிரிநாதர் குருபூசை விழா சென்ற 22-5-62ல் கைதடி கிழக்கு, சனசமூக நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் தலைமையில் செல்வன் தி. இராஜகுலவீரசிங்கத்தின் திருமறை ஓதலுடன் ஆரம்பமாகியது.

திரு. வி. இராசையா "அருணகிரி நாதரும் இறைவனும்" என்னும் விடயம் பற்றியும் கை.கி.இ.வா. சங்க போஷகர் திரு. ஆ. பொன்னையா "திருப்புகழ்" என்னும் பொருள் பற்றியும் சொற்பெருககாற்றினர். முருகதாஸ் கோஷ்டியினர் திருப்புகழ் பாடல்களைப் பாடினர். முடிவில் செயலாளர் நன்றிநவில செல்வன் செ. கந்தசாமியின் திருமறை ஓதலுடன் விழா இனிது முடிவெய்தியது.

---

### ஆலிஎல இந்து பரிபாலன இளைஞர் மன்றம்

ஆலிஎல இந்து பரிபாலன சபையோடு ஒத்துழைப்பதே இதன் முக்கிய நோக்கம். இளைஞர் மன்றத்தின் நிர்வாகத் தேர்வு கடந்த வெள்ளிக்கிழமை (1—6—62) ஆலிஎல ஸ்ரீ வீரசக்தி விஞயகர் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்:— தலைவர்: செல்வன் சி. இராம ஜெயம், உபதலைவர்: திரு. இராசு, காரியதரிசி: செல்வன் செ. குமார், உபகாரியதரிசி செல்வன் ச. மோகனதாஸ்காந்தி, தனதிகாரி: செல்வன் கு. கந்தசாமி, உபதனதிகாரி: செல்வன் பெ. வாசுதேவன். பரிசோதகர்: செல்வன் இரா. பரமசிவம், பாதுகாவலர்கள்: செல்வன் பெ. மாதவ மேனன், செல்வி பி. ஜெயலெட்சுமி, செல்வி பெ. தனலெட்சுமி.

---

### வதுளையில் வள்ளுவர் விழா

வதுளை சைவ பரிபாலனச் சங்கத்தின் சார்பில் தருமதூதக் கல்லூரி மண்டபத்தில் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு வருகையளித்த அனைவரையும் வரவேற்று, கவிஞர் தமிழோவியன் வரவேற்புரை நிகழ்த்திஞர். சங்கத்தின் துணைத் தலைவர், திரு. சி. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமை ஏற்றுர்.

'வள்ளுவர் சொல்' என்பது குறித்து விரிவுரையாற்றிய தில்லி-திருவேங்கடம் கல்லூரிப் பேராசிரியை திருமதி. கனகசவுந்தரி இளந்திரையனார், "வையத்தார் வாழ்வதற்கு வழியாக விளங்குவதே வள்ளுவர் சொல். அதைவெல்லுஞ் சொல் வேறில்லை, மனிதர்கள் பயன் நல்கா வெறுஞ் சொற்களைப் பேசி மற்றவர்களைக் கவலையில் ஆழ்த்துவது அறிவுடைமையாகாது" என்றுர். திரு. நா. சுப்பிரமணியம் இசை விருந்து அளித்தார். பின், 'வள்ளுவர் கண்ட இன்பம்' பற்றி நீண்டதோர் சொற்பெருக்காற்றினர், தில்லிப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் திரு. சாலை இளந்திரையனர்.

சங்கப் பொதுச் செயலாளர் திரு. ச. ஆறுமுகராசா நன்றியுரை கூறினர். என்றும் கண்டிராத மக்கள் குழுமி விழாவைச் சிறப்பித்தார்கள்.

---

## தமிழ்ப் பெண்கள்

தமிழ் நாட்டுப் பெண்களுக்கு முக்காடு, முகமூடி என்னும் மூட வழக்கங்கள் இல்லை. மூலையில் ஒளிந்து ஒதுங்கும் முறையும் இல்லை. ஆண்களின் முகத்தைப் பார்த்தால் தகாத செயல் என்னும் கொடுமையும் இல்லை. ஆயினும் தமிழ் நாட்டில் பெண்மை போதிய உரிமை வாழ்வு பெறவில்லை என்றே கூறவேண்டும்.

இன்று ஒரு சில நகரங்களில் அங்கும் இங்குமாகப் பெண்கள் சிலர் உரிமையும் சிறப்பும் பெற்று விளங்குகிறார்கள். இது உண்மையே. இதைக் கண்டு மன நிறைவு கொள்வதில் பயனில்லை. உலகம் அறிய முடியாமல் இரவும் பகலும் சமையல் அறையிலும் தொழிற்சாலையிலும், வயல்களிலும் உழைத்து அலுத்து ஓய்ந்து மடியும் பெண்களே பெரும்பான்மையான தமிழ்ப் பெண்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

—டாக்டர். மு. வரதராசனர்

---

## 'வாழைப்பழமோ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது அவளுக்கு, கோபம் பாடலாக வெளிவருகிறது:

"சோறு வடிக்க வேணும்
சொதி வேறு காச்சவேணும்
மீறுமல் தூங்கு கண்ணே
மிலாறுல நானடிப்பேன்"
(மிலாறு-விழுது-குச்சி)

என்று பாடி குழந்தையை செல்லமாக விரலிஞற் தட்டி விடுகிறுள். குழந்தையும் துயில் கொண்டுவிட உணவு சமைக்கச் செல்கிறுள் தெய்வானை.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3-வது வாரம்!

செண்ட்ரல்
(மருதானை)

2 - 30, 6 - 15, 9 - 30க்கு
ஞாயிறு காலை 10 - 00க்கு

* ராஜ் கபூர்
* பத்மினி
* நந்தா
* அபி
* ஹணி இராணி
நடித்த

ஆஷிக்
(சிறந்த ஹிந்தி படம்)



கண்கவர் நடனங்கள்!
காதிற்கினிய பாடல்கள்
நிறைந்த படம்!

ஆஷிக்

உங்கள் மனதைவிட்டு அகலாத
படம் "ஆஷிக்"!
சிறந்த பாடல்கள் நிறைந்த
படம் "ஆஷிக்"!
அன்பு, நேர்மை, தன்னம்பிக்கை
இவைகள் எப்பொழுதும்
வெற்றி பெற்றே தீரும் என்பதற்கு
எடுத்துக்காட்டு.

"ஆஷிக்"

டைரக்ஷன்:
முக்கர்ஜி

இசையமைப்பு:
ஷங்கர்-ஜய்கிஷன்

பின்னணி:
முகேஷ்-லதா

---

வெகு விரைவில் எதிர்பாருங்கள்!
சினிமாஸ் திரைகளில்



இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ஆர். M. L. A.

இலட்சிய நடிகை
விஜயகுமாரி

நடிகவேள்
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
எஸ். வி. ரங்கராவ்
பி. எஸ். சரோஜா
மற்றும் பலர் நடித்த

மாடர்ன் தியேட்டர்ஸ்


குமுதம்

இசை:
கே. வி. மகாதேவன்

டைரக்ஷன்:
ஏ. சுப்புராவ்

---

10-வது மங்களகரமான வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ராஜ் (நீர்கொழும்பு)
மற்றும் 11 திரைகளில்



சரோஜா தேவி, சிவாஜி கணேசன்,
மற்றும் பலர் திறம்பட நடித்த

பாலும் பழமும்

டைரக்ஷன்: ஏ. பீம் சிங்

---

வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

எல்பின்ஸ்டன்
(மருதானை)

றெக்ஸி
(வெள்ளவத்தை)

மற்றும் 5 திரைகளில்



பிரேம் நஸீர்,
எம். என். ராஜம்,
ராஜகோபால்,
ஸ்ரீ ரஞ்சனி,
தாம்பரம் லலிதா,
வி. கே. ராமசாமி,
டி. பாலசுப்பிரமணியம்
மற்றும் பலர் நடித்த



★ திலகம் ★
(ஷீலாவின் நடனத்தைக் கலரில் கண்டு ஆனந்தியுங்கள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில்
1962-ம் வருடம் ஜூன் மாதம் 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.